

இராணுவப் புரட்சி ஏற்படாது பக். 06



மனிதா சாவு பக். 07



யாட்டத்தில் மோத தகுதி பக். 22



பக். 23


கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 091 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 13, செவ்வாய் 25.02.2014


# தமிழ் அரசியல் கைதி சிறையில் மர்மச் சாவு

## தாக்கப்பட்டாரா எனச் சந்தேகம்

கொழும்பு,பெப்ரவரி 25
மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்றுக்காலை மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். விஸ்வலிங்கம் கோபிராஜ் (வயது42), பிரிட்டன் பிரஜையான இவர்,வடமராட்சியைச் சொந்த இடமாகக் கொண்டவர். இரு பெண் பிள்ளைகளின் தந்தையாவார்.
சிறையில் இவர் தாக்கப்பட்டாரா என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இந்தச்சம்பவம் குறித்துமேலும் தெரியவருவதாவது:-

> மகஸின் சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறைக் காவலர்களும், சிங்களக் கைதிகளும் இணைந்து தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் திருகோணமலையைச் சேர்ந்த தர்மதாஸ் தவச்செல்வம் என்ற கைதி கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகஸின் சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறைக் காவலர்களும், சிங்களக் கைதிகளும் இணைந்து தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் திருகோணமலையைச் சேர்ந்த தர்மதாஸ் தவச்செல்வம் என்ற கைதி கடும் காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இவ்வாறானதொரு நிலையில் நேற்றுக் காலை, மகஸின் சிறைச்சாலையின் 'சி' தளத்தின் மேல்மாடியிலுள்ள மலசல கூடத்தில் மர்மமான

21 ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் ஆசிரியை சாவு

வவுனியா. பெப் 25
வவுனியா சாந்தசோலை சந்திக்கு அருகில் நேற்று பி.ப. 2.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஆசிரியை ஒருவர் உயிரிழந்தார்.
பாடசாலை முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியை டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் வவுனியா புதிய சின்னக்குளம் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்பிக்கும் அகிலன் சுகன்ஜா (வயது -38) என்ற ஆசிரியையே படுகாய

21 ஆம் பக்கம் பார்க்க

## வெடிபொருள் மீட்பு; ஒருவர் நேற்று பொலிஸில் சரண்

யாழ்ப்பாணம். பெப் 25
சுமார் 72 கிலோகிராம் சி-4 மற்றும் ரி.என்.ரி வகை வெடிமருந்து மீட்கப்பட்டமை தொடர்பில் தலைமறைவா கியிருந்த ஒருவர் சட்டத்தரணி ஊடாகப் பொலிஸாரிடம் நேற்றுச் சரணடைந்தார்.
இந்த வெடிமருந்துகளைக் கொழும்புத்துறையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பொலிஸார் மீட்டதோடு சந்தேகத்தில் 7 பேரைக் கைது செய்து விசாரணை மேற்கொண்டு 2 பேருக்கு எதிராக வழக்குத்

21 ஆம் பக்கம் பார்க்க

## 29 இந்திய மீனவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப்.25
அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர் 29 பேருக்கும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இவர்கள் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டனர். இதன்போதே இவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
கடந்த வாரம் நெடுந்தீவுக் கடற்பரப்பை அண்மித்துக் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

21 ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவா பற்றி ஆராய கூடுகிறது கூட்டமைப்பு

## நாளை மறுதினம் பொதுநூலகத்தில்

யாழ்ப்பாணம்,பெப்.25
ஜெனிவா மனித உரிமைகள் அமர்வு மற்றும் தற்போதுள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம் பெற்றிருந்தது. இதில் எடுக்கப் பட்ட இரண்டு தீர்மானங்கள் தொடர்பில் நாளை மறுதினம் இடம் பெறவுள்ள கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

21 ஆம் பக்கம் பார்க்க

# ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை தடை செய்தது தவறு

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் கூறுகிறார்

கொழும்பு,பெப்.25
தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தமை தவறு என்றும், கோத்தபாய ராஜபக்ஷ இருக்கும் வரை இலங்கையில் அமைதித் தீர்வு எதுவுமே சாத்திய மில்லை என்றும் இலங்கையில் போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.



உல்ப் ஹென்றிக்சன்

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலான சமாதான காலத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு நிலை கொண்டிருந்தது. 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க



நேற்று மீட்கப்பட்ட எலும்புக் கூடு

## நேற்றும் இரண்டு எலும்புக் கூடுகள் மீட்பு

மன்னார், பெப்.25
மன்னார் மனிதப் புதைகுழி 31 ஆவது தடவையாக நேற்றுத் தோண்டப்பட்டபோது அதிலிருந்து மேலும் 2 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.
குறித்த புதைகுழியிலிருந்து இது வரையில் மொத்தமாக 80 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு

21 ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதானவர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம். பெப் 25
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர், அவர் மீதான குற்றச்சாட்டுப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுக் குற்றச்சாட்டுகளிலிருந்து யாழ்.மேல்நீதிமன்றினால் விடுதலை செய்யப் பட்டார்.
மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.
வவுனியா ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த ஜெ.முகுந்தன் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்.
பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவருக்கு எதிராக 2006 -2007 ஆம் ஆண்டு காலப்

21 ஆம் பக்கம் பார்க்க

## சிவராத்திரிக்காக திருக்கேதீஸ்வரத்துக்கு தனியார் பஸ் சேவை

யாழ்ப்பாணம.பெப்.25
சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்குத் தனியார் பஸ்கள் விசேட சேவைகளை வழங்கவுள்ளன.
சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கும் இந்து மக்கள் அதிகமாகத் திருக்கேதீஸ்வரத்துக்குச் செல்லும் நிலையில் பக்தர்களின் போக்குவரத்து சேவையை இலகுபடுத்துவதற்கு நாளை புதன்கிழமை தொடக்கம் ஆல

21 ஆம் பக்கம் பார்க்க

# வடக்குக்கு உள்ளேயும் வெளியேயும் மாடுகளைக் கொண்டு செல்லத் தடை

## கால்வாய் நோய் அபாயம் காரணமாக

கொழும்பு,பெப்.25
வடக்கு மாகாணத்துக்குள் ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்துக்கு மாடுகளைக் கொண்டு செல்வதற்கும், வடக்கில் இருந்து அவற்றை வெளியே கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கால்நடை அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.
அத்துடன் தெல்லிப்பழை, கோப்பாய், வட்டுக்கோட்டை, வவுனியா, ஒட்டிசுட்டான் உள்ளிட்ட சில பிரதேசங்களில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதும் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.
மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள கால்வாய் நோய் காரணமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தடுப்பு மருந்து

வடக்கு மாகாணத்தில் கடந்த

21 ஆம் பக்கம் பார்க்க

# மத்திய அரசின் தடை மனுவை சட்டப்படி அணுகும் தமிழக அரசு

யாழ்ப்பாணம்,பெப்.25
சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் விடுதலைக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனுவைத் தமிழக அரசுச் சட்டப்படி எதிர்கொள்ளும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.



ஜெயலலிதா

இதேவேளை நளினி, ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரின் விடுதலைக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்த மனுவை

21 ஆம் பக்கம் பார்க்க

## வன்செயலில் பாதிப்புற்றோருக்கு காசோலை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 25
கடந்த கால வன்செயல் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வன்செயல் காரணமாகக் கடும் பாதிப்புக்குள்ளான 177 பயனாளிகளுக்கும், சொத்தழிவு ஏற்பட்ட 44 பயனாளிகளுக்கும், அரச ஊழியர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவாக 44 பயனாளிகளுக்கும் என 265 பயனாளிகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

பயனாளிகளுக்கு கொடுப்பனவுக்கான காசோலைகளைப் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர வழங்கவுள்ளார்.

காசோலை பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தனிப்பட்ட முகவரிகளுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (கு-400)

# வடக்கு-கிழக்குக்கான உதவிகளை தெற்குக்கு மாற்ற அரசு முயற்சி

### ஜேர்மன் தூதுவரிடம் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம்.பெப்.25
வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு உதவி வழங்கும் வெளிநாடுகளுக்கு அரசு அழுத்தம் கொடுத்து வருவதனால் அந்த நாடுகளால் வழங்கப்படும் உதவிகள் எவ்வளவு காலத்துக்கு இந்தப் பகுதிகளுக்கு கிடைக்கும் என்று சொல்ல முடியாது. மேலும் போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்துக்கு வழங்கப்படும் உதவிகளைக் கூடத் தென்னிலங்கைக்கு மாற்றுவதற்கு அரசு முயற்சி செய்து வருவதாக ஜேர்மன் தூதுவரிடம் கூறியுள்ளார் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜர்கன் மோஹறாட் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர். கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபைக்குச் சென்று அங்கு இரு மணி நேரம் அவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அத்துடன் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட பால் பண்ணையையும் திறந்து வைத்தனர். ஜி.ரி. இசற் நிறுவனத்திலும் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் பின்னர் இந்தக் குழுவினர் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் தெரிவிக்கையில்:

எங்கள் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் அவர் கேட்டிருந்தார். நாம் எமது மாகாண சபையைக் கொண்டு நடத்துவதிலுள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பில் அவருக்குத் தெரியப்படுத்தியிருந்தோம்.

**தெற்கிலும் பிரச்சினை இருக்கிறது**

எங்களுக்கு உதவிகளை வழங்கி வரும் வெளிநாடுகளை இலங்கை அரசு கட்டுப்படுத்தி வருகின்றது. இது தொடர்பில் ஜேர்மன் தூதுவர் என்னுடன் கலந்துரையாடினார். ஜேர்மன் அரசு, வடக்கு கிழக்கு மக்களுக்குப் பெருமளவு உதவிகளை வழங்கி வருகின்றது. தென் பகுதியிலும் குறிப்பாக ஊவா மாகாணத்திலும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்று தெரிவித்து அங்கு உதவி செய்யுமாறு இலங்கை அரசு தம்மை நிர்ப்பந்திப்பதாக ஜேர்மன் தூதுவர் என்னிடம் தெரிவித்தார்.

ஆனால் வடக்கு கிழக்கு மக்கள் போரினால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு அதிகளவான உதவிகள் தேவை என்று சொல்லியே தூதரகங்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. தாங்களும் அவ்வாறே நடைமுறைப்படுத்தி வருவதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

இன்னும் எவ்வளவு காலத்துக்கு வடக்கு கிழக்குக்கான உதவிகளைத் தம்மால் வழங்க முடியுமோ தெரியாது என்று ஜேர்மன் தூதுவர் ஆதங்கப்பட்டார். ஏனெனில் அரசு, தங்களைக் குறைசொல்லி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார் - என்றார் முதலமைச்சர். (கு-5)

## மதுபோதையில் பஸ் செலுத்திய சாரதி பணியிலிருந்து இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம்.பெப்.25
மதுபோதையில் பஸ் செலுத்தி பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் - இளவாலைக்கான 788 இலக்க வழி தனியார் பஸ் சேவை ஒன்றை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விசாரணைகள் முடியும்வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சாரதியையும் நடத்துநரையும் சேவையில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இளவாலை தனியார் பஸ் சங்கத்தலைவர் நா.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி யாழ்.பஸ் தரிப்பிடத்தில் இருந்து இரவு 7 மணிக்கு மானிப்பாய் வீதியூடாக இளவாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ்சின் சாரதி நிறை மதுபோதையில், போக்குவரத்து விதிகளை மீறிக் கண்டபடி பஸ்ஸை செலுத்தினார்.

சுடுகாட்டாலடிச் சந்தியில் இருந்த முச்சந்திக்கட்டு மீது பஸ் மோதி நின்றது இதனால் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டது.

சாரதி மது போதையில் பஸ்சினை செலுத்தியமையாலேயே அவ்வாறு சம்பவத்தை பயணிகள் எதிர்கொள்ள நேரிட்டது.

சம்பவம் குறித்துப் பயணிகள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்துப் பொலிஸார் சாரதியைக் கைது செய்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பாக இளவாலை தனியார் பஸ் சங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வறு தெரிவித்தார். (ஐ-14)

## இன்றுகூடுகின்றது ஆணைக்குழு

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து தீர்மானம் செய்யும் முக்கிய கூட்டம் இன்று மதியம் 2 மணிக்கு ஆணைக்குழுவின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, கிளிநொச்சி, யாழ்ப்பாண விஜயங்களில் ஏற்பட்ட குறை, நிறைகள் குறித்தும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் செல்லவுள்ளமை குறித்தும் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

கிளிநொச்சி விஜயத்தில் தாம் பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளை ஆராய்ந்து மார்ச் மாத இறுதிக்குள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இடைக்கால அறிக்கையை சமர்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் யாழ்ப்பாணத்தில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஆணைக்குழுவின் யாழ்ப்பாண விஜயத்தின்போது கிடைக்கப்பெற்ற முஸ்லிம் மக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யவே புத்தளத்திற்குச் செல்லவுள்ளதாகவும் இதுகுறித்த உத்தியோக பூர்வமான முடிவுகள் இன்று மாலை அறிவிக்கப்படும் என்றும் பரணகம குறிப்பிட்டார். (சி)

## ஆணின் சடலம் மீட்பு

வலி வடக்கு பெப் 25
கல்வியங்காடு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் குளத்தில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் குறிப்பிட்ட குளப் பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசுவதை உணர்ந்த பொது மக்கள் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

குறிப்பிட்ட இடத்துக்கு சென்ற பொலிஸார் சடலத்தை இனங்கண்டு அதனை நேற்று மீட்டு எடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் குறிப்பிட்ட நபர் உயிரிழந்து இருக்கலாம் என தெரிவித்த பொலிஸார் சடல த்தை அடையாளம் காட்டுமாறும் கோரியுள்ளனர். (ஐ-86)

# ஆசிரிய ஆலோசகர் சேவையை உருவாக்க கோரி நாளை போராட்டம்

### வடக்கு ஆசிரிய ஆலோசகர்களும் ஆதரவு

கிளிநொச்சி, பெப்.25
இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையை உருவாக்குமாறு கோரி இசுறுபாயாவில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக வட மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து சங்கத்தின் தலைவர் தி.சிவரூபன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஆசிரிய ஆலோசர் சேவையை உருவாக்குமாறு கோரி அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சம்மேளனம் நாளை கல்வி அமைச்சுக்கு முன்பாக தொழிற் சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

கடந்த 52 வருட காலமாக அரசு ஆசிரிய ஆலோசகர் சேவையை முறைசாரா வகையில் செயற்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் அகில இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சங்கங்களின் சம்மேளனம் கல்வி அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்கள் மற்றும் தொழிற் சங்க நடவடிக்கைகள் காரணமாக 2007 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையை உருவாக்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும், அதனைப் புறக்கணித்து, சம்பள ஆணைக்குழுவுடன் இணைந்து ஆசிரிய ஆலோசர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் மேற்தர வகுப்பொன்றிற்கு கடமையாற்ற பரிந்துரைக்கப்பட்டது.

இதனை எதிர்த்து எமது தொழில் சார் உரிமையைக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணைகளின் முடிவில் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி ஆசிரிய ஆலோசகர் சேவையை உருவாக்குமாறு மேல் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதி மன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு நான்கு மாதங்கள் கடந்த நிலையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் சம்மேளனம் முதற்கட்டமாக நாளை புதன்கிழமை கல்வி அமைச்சின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

> “ஆசிரிய ஆலோசகர் சம்மேளனம் நாளை கல்வி அமைச்சுக்கு முன்பாக தொழிற் சங்க நடவ டிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கு வட மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதோடு நாளை வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பன்னிரண்டு கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் சுகயீன விடுமுறையினை அறிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்து எமது தொழில் உரிமைக்காக குரல் கொடுக்கவுள்ளது - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-400 -402)

## விபத்தில்படுகாயமடைந்த வயோதிபர் நேற்றுச் சாவு

விபத்தில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

சுழிபுரம் விக்ரோறியாச் சந்தியை அண்மித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை கணேஸ் (வயது 73) என்பவரே உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவரை மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் மோட்டார் சைக்கிளையும் போட்டுவிட்டுத் தலைமறைவாகியிருந்தார். விபத்தினால் படுகாயமடைந்த முதியவர் சம்பவ இடத்ததிலேயே மயங்கிவிட்டார். வீதியால் சென்றவர்கள் அவரை உடனடியாக மூளாய் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். பின்னர் அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்றுக்காலை அவர் உயிரிழந்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டுத் தப்பிச்சென்ற நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (கு-4)

## இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் விடுதலை

இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் தண்டப்பணம் செலுத்திய பின்னர் நேற்றுமுன்தினம் இரவு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த பெரும்பான்மை இனததைச் சேர்ந்த நால்வரும், தமிழர் ஒருவருமாக 5 மீனவர்கள் கடந்த டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கடந்த இரண்டு மாத காலமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆந்திர மாநில நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 4 பேருக்கு தலா 30 ஆயிரம் ரூபா தண்டமும் ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டமுமாக விதிக்கப்பட்டது. இந்திய ரூபாயில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தப்பட்ட பின்னரே 5 பேரும் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களது படகும் விடுவிக்கப்பட்டது.

இவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்திய கடலோரக் காவலப் படையினால், இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை மாலை காங்கேசன் துறைக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்களை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் பொறுப்பெடுத்து நேற்றுக் காலை திருகோணமலைக்கு அனுப்பி வைத்தனர். (ஐ-5)

## பருத்தித்துறையில் இருந்து திருக்கேதீஸ் வரத்துக்கு பஸ்

வடமராட்சி, பெப்.25
மகா சிவராத்திரியை முன்னிட்டு பருத்தித்துறையில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பஸ் சேவை பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவினால் நடத்தப்படவுள்ளது.

சிவராத்திரி தினமான 27 ஆம் திகதி காலை 6 மணிக்கு முதலாவது விசேட பஸ் திருக்கேதீஸ்வரத்தை நோக்கிப் புறப்படும். தொடர்ந்து பக்தர்களின் வருகைக்கேற்ப பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என டிப்போ முகாமையாளர் கே.கந்தசாமி தெரிவித்தார்.

சிவராத்திரி முடிவுற்றதும், மறுநாள் காலை திருக்கேதீஸ்வரத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி அந்த பஸ் புறப்படும்.

திருக்கேதீஸ்வரம் செல்லும் பக்தர்கள் முன் கூட்டியே ஆசனங்களை பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவில் பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-173)

## காதல் விவகாரம் வாள்வெட்டில் முடிந்தது

### இருவர் வைத்தியசாலையில்

வலி. வடக்கு பெப் 25
காதல் பிரச்சினை வாள்வெட்டில் முடிந்தது. சம்பவத்தில் இருவர் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த சம்பவம் நேற்று ஞாயிற்க்கிழமை இரவு சங்குவேலி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் குறிப்பிட்ட காதல் பிரச்சனையுடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் துரைராசா துதிசன் (வயது 26), சின்னத்துரை லலூசன் (வயது 23) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-86)

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் இலங்கைக்கு ஏன் வரக்கூடாது?

## இலங்கை அரசிடம் கேள்வி எழுப்புகிறது தமிழ் சிவில் சமூகம்

யாழ்ப்பாணம்.பெப்.25

ராஜீவ்காந்தியைக் கொலை செய்யும் நோக்குடன் தாக்குதல் நடத்திய கடற்படை வீரர் விஜித ரோஹண விஜயமுனி விடுதலை செய்யப்பட்டு தேர்தலில் போட்டியிட முடியுமானால், ராஜீவ் கொலை யுடன் நேரடியாகத் தொடர்புபடாத தமிழர்கள் மட்டும் ஏன் விடுதலை செய்யப்படக் கூடாது என்றும் இலங்கைக்கு அவர்கள் ஏன் வரக்கூடாது என்றும் இலங்கை அரசும், சிங்கள ஊடகங்களும் அதனை எதிர்ப்பது ஏன் என்றும் தமிழ்ச் சிவில் சமூகம் கேள்விஎழுப்பியுள்ளது.

ராஜீவ்காந்தியின் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, றொபேர்ட் ஆகியோர் தமிழக அரசால் விடுதலை செய்யப்படுவதாகத் தெரிவித்த தீர்மானம், இலங்கைக்கு ஆபத்தானது என்றும் அவர்கள் விடுவிக்கப்பட்டு இலங்கைக்கு வந்தால், வட பகுதியில் இயங்கும் ஆயுதக் குழுக்களுக்குதலைமை தாங்குவர் என்றும் அரச தரப்பை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது.

அத்துடன் இலங்கை அரசும் தமிழக அரசின் அறிவிப்புக்கு அமைய கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்யக் கூடாது என்றும் தெரிவித்திருந்தது.

**பின்னணி**

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்காக 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி இலங்கைக்கு வந்த போது. கடற்படையினரால் அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டிருந்த கடற்படை வீரர் விஜித ரோஹண விஜயமுனி, திடீரென ராஜீவ் காந்தியை தனது துப்பாக்கியின் பின்பக்கத்தால் தாக்க முயன்றார். ராஜீவின் தோள் பட்டையிலேயே தாக்கப்பட்டமையால் அவர் தப்பித்துக் கொண் டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கடற்படை வீரர் விஜயமுனி கைது செய்யப்பட்டபோது. தான் ராஜீவை கொல்லும் நோக்குடனேயே தாக்கியதாகத்தெரிவித்திருந்தார். அவருக்கு ஆறு ஆண்டுகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தாலும் இரண்டு ஆண்டுகளிலேயே அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனா, விஜயமுனியை விடுதலை செய்திருந்தார். அதன் பின்னர் அவர் இரு தடவைகள் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

**பாகுபாடு**

இவ்வாறு இலங்கையில் இந்தியப் பிரதமர் ராஜீவைக் கொல்ல முயன்ற ஒருவர் இரண்டே ஆண்டுகளில் விடுதலை செய்யப்பட்டு தேர்தலில் போட்டியிட முடியும் என்றால் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பற்றரி வாங்கிக் கொடுத்தற்காகவும், முக்கிய கொலையாளிகளின் டயரியில் பெயர் இருந்ததற்காக வும் கைது செய்யப்பட்டு 23 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்த தமிழர்களை விடுவிப்பதை இலங்கை அரசு எதிர்ப்பது ஏன் என்று தமிழ் சிவில் சமூகம் கேள்வி எழுப்பி யுள்ளது.

அத்துடன் அவர்கள் இலங்கைக்கு வருவதற்கு எதிராகவும், அவர்களை விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று புனைகதைகளையும் ஏன் பரப்பி வருகிறது என்றும் தமிழ் சிவில் சமூகம் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும், சிங்களவர்களுக்கு ஒரு நியாயம், தமிழர்களுக்கு ஒரு நியாயமா என்றும் சிவில் சமூகத்தினர் கேள்வி எழுப்பி யுள்ளனர். (வ-5)

## சுயதொழில் கடனுக்கான செயலமர்வுகள்

கிளிநொச்சி, பெப்.25

புனர்வாழ்வு நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான சுய தொழில் கடனுக்கான திறன் விருத்திச் செயலமர்வுகள் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் நடத்தப் படவுள்ளன.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளால் இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

புனர்வாழ்வு சுய தொழிலுக்கு விண்ணப்பித்தவர்களில்மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா 100 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட புனர்வாழ்வு அலுவலர் மு.கயோதரன் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இன்று செவ்வாய்க்கிழமை பளை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் நாளை கரைச்சி, கண்டாவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கும், நாளை மறுதினம் பூநகரி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் செயலமர்வு இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-9)

## தொடர்ந்து அரசியலில் இருக்கப்போவதில்லை

### கருணா தெரிவிப்பு

மட்டக்களப்பு.பெப்.25

எனக்குத் தொடர்ந்து அரசியலில் இருக்கும் எண்ணம் இல்லை. மட்டகளப்பு மாவட்டத்திற்கு குறுகிய காலத்தினுள் பல அபிவிருத்திகளை செய்து விட்டு நான் அரசியலிலிருந்து விலகுவதற்குள்ளேன். நான் மக்களோடு இருந்து எமது பிரதேசத்தையும் மாவட்டத்தையும் கட்டியெழுப்பவதற்கு தயாராக உள்ளேன்.


இவ்வாறு மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் 32 ஆவது வருடாந்த விளையாட்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்தப் பட்டிருப்புத் தொகுதி மக்களின் கைகளில்தான் உள்ளது. தமிழ் மக்களின் ஒற்றுமை, பலம் இருந்தால் எதிர்காலத்தில் அபிவிருத்தி களை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

களுவாஞ்சிகுடிப் பிரதேசம் தற்போது பிரதேச சபையாக இருந்து வருகின்றது. இதனை நகர சபையாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் களுவாஞ்சிகுடி நகரை அழகு படுத்துவதற்கு 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனக்குத் தொடர்ந்து அரசியலில் இருக்கும்எண்ணம் இல்லை. மட்டக்களப்பு மண்முனைத் துறைப் பாலம் எதிர் வரும் ஏப்ரல்மாதம் 12ஆம்திகதி ஜனா திபதியால் திறந்து வைக்கப்படவுள்ளது-என்றார். (ச-32)



அமைக்கப்பட்ட கலையரங்கின் தோற்றம்

## சாவகச்சேரி கலாசார மண்டபம் அடுத்த மாதம் மக்கள் பாவனைக்கு

தென்மராட்சி,பெப் .25

சாவகச்சேரி நகரசபையினரால் 60 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபம் அடுத்த மாதம்பொது மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்படவுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

சகல வசதிகளுடன்கூடிய வகையில் அமைக்கப்பட்டு வரும் மண்டப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதால் மார்ச் மாதம் திறப்பு விழா நடத்திய பின்னர் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 54 மில்லியன் ரூபா செலவில் இருமாடிக் கட்டடம் அமைத்து வழங்கப்பட்டதாகவும், மண்டபத்துக்குரிய பல வேலைகள் முடிவடையாததால் அதற்கென சபை நிதியிலிருந்து 15 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (வ-9)

## வயலில் நெற்சூடு எரிந்து நாசம்

தென்மராட்சி,பெப் .25

நெல் வயலில் வைக்கப்பட்டிருந்த சூடு முழுமையாக எரிந்து சாம்பலாகியது. இந்தச் சம்பவம் கடந்த வாரம் மட்டுவில் மத்தி வேவில் வயலில் இடம்பெற்றது.

மழை வீழ்ச்சி இல்லாததால் குளங்களில் இருந்து நீரிறைத்து அறுவடையின் பின்னர் வயலில் சூடு வைத்ததாகவும் இரவு வேளையில் திடீரென தீப்பற்றி எரிந்து சாம்பலாகியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ஒ-9)

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டுத் தொழில் அரசு ஆலோசிக்கிறது என்கிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு.பெப்.25

இலங்கை மீனவர்களை பாதிக்காத விதத்தில் இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் வந்து தடையின்றி மீன்பிடித்துச் செல்வதற்குரிய கூட்டுத் தொழில்முறை. இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வாகுமா என்பது தொடர்பில் இலங்கை அரசு ஆராய்ந்து வருவதாக கடல்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்குடன் இவ்வாறான முறை தொடர்பில் ஆராய்ந்து வருவதாக ராஜித சேனாரத்ன பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித் துள்ளார்.

**கூட்டுத் தொழில்முறை**

இந்திய மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கை - இந்திய மீனவர்கள் இரு நாட்டு கடற்பரப்புக்குள் தடையின்றி மீன்பிடிக்கக்கூடிய கூட்டுத் தொழில் முறை ஒன்று பற்றி ஆராயத் தயாராக இருக் கின்றோம்.

இந்திய மீனவர்களை வேறு ஆழ்கடல் பிராந்தியத்துக்கு அனுப்புவதில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பெரும்பிரச்சினைக்கு இந்தக் கூட்டுத் தொழில் முறை தீர்வாக அமையும்.

இலங்கை மீனவர்களைப் பாதிக்காத விதத்தில் இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் வந்து தடையின்றி மீன்பிடித்துச் செல்ல முடியும். அதேபோல, இலங்கை மீனவர்களும் இந்திய கடற்பரப்புக்குள் சென்று மீன்பிடிக்க இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும்.

**பாதிப்பு ஏற்படாதா ?**

இந்திய மீனவர்கள் ஆயிரக்கணக்கில் படையெடுத்து வந்து கடல்வளங்களை சுரண்டிச் செல்வதாக மீனவர் அமைப்புக்கள் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டி வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்துசெல்வதற்கு வசதியளிக்கக்கூடிய இரு தரப்பு கூட்டுத் தொழில் முறை இலங்கை மீனவர்களை மேலும் பாதிக்காதா என்று அமைச்சரிடம் கேட்டபோது,

"பாதிப்பு இருக்கின்ற காரணத்தால் தான் இப்போது அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கைது செய்து வருகிறோம். இப்படியான கூட்டுத் தொழில்முறைஒன்று உருவாக்கப்படுமானால் இவ்வாறான பாதிப்புகள் பற்றியும் இருதரப்புக்களும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்று அமைச்சர் பதிலளித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

**பேச்சுவார்த்தை**

"இருநாட்டு மீனவர்கள் இடையே அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்பில் இரண்டாம் கட்டப்பேச்சுகள் நடைபெறவுள்ளன. இந்தப் பேச்சுகளின் போது, வேறு கடல் பரப்புக்குச் செல்வதில் இந்திய மீனவர்களுக்கு பிரச்சினைகள் இருப்பதாக இந்தியத் தரப்பினர் கூறி னால், குறித்த கூட்டுத் தொழில் நடைமுறை பற்றிய தெரிவை இந்தியாவுக்கு ஒரு தீர்வாக இலங்கை முன் வைக்கும்.

அதேவேளை், பொட்டம்ட்ரோலிங் அதாவது ஆழ்கடலில் தரையைத் துளாவி மீன் பிடிக்கும் தொழில் முறை போன்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளை இலங்கை அனுமதிக்காது".

**இந்தியா தயார்**

"இவ்வாறான கூட்டு மீன்பிடித் தொழில் நடைமுறை ஒன்றுக்குத் தயாராகவே இந்திய அரசு இருக்கின்றது என்றும், ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்களின் படையெடுப்பு காரணமாக இலங்கையே அந்தத் தீர்வில் நாட்டமின்றி இருந்துவந்தது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை மீன்பிடி அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள கூட்டுத் தொழில் முறை புதிய யோசனை தொடர்பில், யாழ். மாவட்ட கடற்தொழில் சமாசத் தலைவர் அ.எமிலியாம் பிள்ளையிடம் உதயன் வினவியபோது;

"இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளான ஆழ்கடலில் தரையைத் துளாவி மீன் பிடிக்கும் தொழில்முறை மற்றும் தங்கூசி வலைப் பாவனை என்பவற்றை கைவிட்டு எங்களைப் போன்று தொழில் முறைகளைப் பின்பற்றி எங்கள் கடல் எல்லைக்குள் மீன்பிடிப்பதால் பிரச்சினை இல்லை.

ஆனால் அவ்வாறு தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை அவர்கள் பயன்படுத்தினால் விளைவுகள் வேறு விதமாக இருக்கும் என்று எச்சரித்த அவர், தற்போது அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய்யும் கடற் படையினரின் செயற்பாட்டை வரவேற்பதாகவும்" அவர் தெரிவித்தார். (வ-5)

## தமிழக அரசுக்கு தேர்தலில் பாடம் புகட்டுவர் தமிழர்கள்

*வாசன் கூறுகிறார்*



ஜி.கே.வாசன்

ராஜீவ் கொலை வழக்கு குற்ற வாளிகளின் விடுதலை குறித்த தமிழக அரசின் முடிவுக்கு, தமிழக மக்கள் தேர்தலில் பாடம் புகட்டுவார்கள் என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார். தமிழகத்தின் ராயப்பேட்டையில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட மத்திய கப்பல் போக்கு வரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். இதன் போதுஅவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளை, விடுதலை செய்யும் தமிழக அரசின் முடிவு, தேர்தலை முன்னிட்டு எடுக்கப்பட்டதாகும். இதனை காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எவரும் ஏற்கப் போவதில்லை. உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, தமிழக அரசு தவ றாகப் புரிந்து கொண்டுள்ளது"- என்றார். (வ)

# நீதி கேட்கும் குரல் முழக்கத்தில் அனைவரும் அணி திரளுங்கள்

*அழைப்பு விடுக்கிறார் வைகோ*



வைகோ

சென்னை, பெப்.25

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதி மன்றக் கூண்டில் ஏற்ற வலியுறுத்தி 'நீதி கேட்கும் குரல் முழக்கம் ஆர்ப்பாட்டம் நாளை புதன்கிழமை சென்னையில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும்பங்கேற்க வேண்டும் என்று வைகோ கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழத்தமிழ் இனத்தைப் பூண்டோடு கருவறுக்கத் திட்டமிட்டுக் கோரமான இனப்படு கொலை நடத்திய இலங்கை அரசையும் ஆட்சியாளர்களையும் சர்வதேச நீதிமன்றக் கூண்டில் ஏற்றுக! தண்டனை தருக! அதற்கு சுதந்திரமான பன்னாட்டு நீதி விசாரணையை அனைத்துலகம் நடத்துக! சுதந்திரத் தமிழ் ஈழம் மலர தமிழ் ஈழத்திலும், தரணிவாழ் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் பொதுவாக் கெடுப்பு நடத்துக! என மனித குலத்தின் மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டுகிற நாள்தான் பெப்ரவரி 26 ஆகும். வீரத் தியாகி முத்துக்குமார் தீக்குளித்த ஐந்தாவது நினைவு நாளான ஜனவரி 29 இல் நெதர்லாந்து நாட்டிலிருந்து புறப்பட்டு, பனி படர்ந்த நிலங்கள் வழியே விடுதலைப் புலிகளின் பதாகை ஏந்தி வீர முழக்க மிட்டு, ஈழத்து இளம் தமிழர்கள் ஜெனீவா நோக்கி நடக்கின்றனர்.

தியாக தீபம் முருகதாசன் தீக்குளித்து மடிந்த மார்ச் 10 ஆம் நாளில் ஜெனிவாவின் மனித உரிமைகள் சபைக் கட்டடத்துக்கு எதிரே உள்ள முருகதாசன் திடலில் திரளும் இலட்சக் கணக்கான ஈழத் தமிழர்களோடு அவர்கள் சங்கமித்து நீதி கேட்டு எழுப்பும் முழக்கம் விண்முட்ட எழும். அதற்குக் கட்டியம் கூறும் வகையில் நாளை புதன் கிழமை தமிழகத்திலும், உலகெங்கிலும் நீதிக்கான போர் முழக்கத்தை எழுப்புவோம்.

தமிழ்நாட்டில் தலைநகர் சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும், பிற இடங்களிலும் நாளை முற்பகல் 11 மணிக்கு நீதி கேட்கும் பட்டயங்கள் ஏந்தி ஆர்ப்பரித்து முழக்கமிட அழைக்கிறேன். கட்சிக் கொடிகளைத் தவிர்த்து அலை அலையாய் அணி திரண்டு ஆவேச முழக்கம் எழுப்ப வாருங்கள் என இரு கரம் கூப்பி அழைக்கிறேன்- என்றுள்ளது. (வ)

## போலி இணையத்தளத்தால் பணம் செலுத்தி ஏமாறாதீர்கள்

*இந்திய துணைத்தூதரகம் கோரிக்கை*

யாழ்ப்பாணம்,பெப்.25

இந்தியஒன்லைன் விசாசேவை வழங்கும் போலியான இணையத்தளம் தொடர்பில் மக்களை ஏமாற வேண்டாம் என்று யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

https://india-visa.co/index.php என்ற முகவரியில் இயங்கி வரும் குறித்த இணையத்தளம், இந்தியாவுக்கான சுற்றுலா, வணிக மற்றும் நீண்டகால விசா பெற்றுக் கொடுப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டு, 11 ஆயிரத்து 750 ரூபா இலங்கைப் பணத்தை அல்லது 90 அமெரிக்க டொலரை சேவைக் கட்டணமாகச் செலுத்துமாறு கோருகின்றது.

அதன் பின்னர் விசாவுக்குரிய கட்டணத்தைக் கோருகின்றது. குறித்த இணையத்தளம் இந்திய அரசின் உத்தியோக பூர்வத் தளத்தைப் போன்றே செயற்படுகின்றது. இது போலியான இணையத்தளம் என்பதுடன், இது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்குமாறும் துணைத்தூதரகம் கோரியுள்ளது.

அத்துடன் இந்திய அரசின் உத்தியோகபூர்வ ஒன்லைன் விசா இணையத் தளம், http://www.indianvisaonline.gov.in என்ற முகவரியிலேயே இயங்குகின்றது. அனுமதிக்கப்பட்டாத எந்தவொரு இணையத்தளத்துக்கும்விசாவிண்ணப்பத்துக்காக சேவைக் கட்டணம் வழங்கவேண்டாம் என்றும் துணைத்தூதரகம் அறி வித்துள்ளது.

**விற்பனைக்கு**

ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் கொம்பிரசர், வார்த் டீ பிறிச் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 0592241

## கைப் பணியாளர்களுக்கு இன்று விருது வழங்கல்

தேசிய கைப்பணியாளர்களுக் கான விருது வழங்கும் நிகழ்வு இன்று கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள் ளது. இதில் கைப் பணித்துறை சார்ந்த உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் மாகாண மற்றும் தேசிய ரீதியில் நடத்தப் பட்ட கண்காட்சியில் வைக்கப் பட்டுஅதிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 334 பேருக்கு விருதுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று வழங்கவுள்ளார். (ஐ)

## மெய்வன்மைப் போட்டி

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய் கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் பா.நேசராசா தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்குக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா. மாணிக்கவாசகம் கலந்து கொள்வார். (ஐ-421)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை கடற்கரை வீதியில் வெளிச்ச வீட்டிற்கு அண்மையில் தென்னை மரங் களுடன் 12 பரப்பு காணி விற்பனைக் குண்டு.

தொடர்பு : 077 1923430, 077 2544585

## பூந்தமல்லி முகாமிலிருந்த 7 பேர் திருச்சிக்கு மாற்றம்

சென்னை, பெப்.25

பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாமில் இருந்த இலங்கைத் தமிழர்கள் 7 பேர் திருச்சியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமுக்கு நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாற்றப் பட்டனர். இலங்கையில் இருந்து கடல் வழியே உரிய ஆவணங்கள் இன்றித் தமிழகத்துக்கு வந்த இலங்கைத் தமிழர்களை பொலிஸார் கைது செய்து பூந்தமல்லி, குமணன் சாவடியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில் அடைத்தனர். இந்தநிலையில் இந்த முகா மில் அடைக்கப்பட்டிருந்த கங் காதரன், சந்திரகுமார், பகீத ரன், ரமேஷ், மகேஸ்வரன், கிருஷ்ணமூர்த்தி, உதயதாஸ் ஆகிய 7 பேரும், கியூப் பிரிவு பொலிஸாரால் ஞாயிற்றுக் கிழமை காலை பூந்தமல்லி நகர தலைவர் முன்னிலை யில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வானில் ஏற்றப்பட்டு திருச்சியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாமில் மொத்தம் இருந்த 7 பேரும் திருச்சிக்கு மாற்றப்பட்டதால், பூந்தமல்லி முகாம் தாற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (வ)

## இலங்கைத் தமிழருக்கு நீதி கிடைக்க ஆதரவு தொடரும்

சென்னை, பெப்.25

"இலங்கைத் தமிழர்களுக்கு உரிய நீதி கிடைக்க மத்திய அரசு தொடர்ந்து ஆதரவாக உள்ளது என்று மத்திய பிரதமர் அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

சென்னை விமான நிலை யத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜெனிவாவில் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிராக கொண்டுவரப்படும் தீர்மானத்தை ஆதரிப்பது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் விரைவில் நல்ல முடிவு எடுப்பார். பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்ட னையை உச்ச நீதிமன்றம்ஆயுள் தண்டனையாக மாற்றியதை ஏற்க முடியாது என்றார். (வ)

## மரண அறிவித்தல்

*சின்னையா இராசசிங்கம் (ஆனந்தன்)*

(ஓய்வு பெற்ற நகர சபை மின்னிணைப்பாளர்)



கைதடியைப் பிறப்பிடமாகவும் மகாத்மா வீதி, நெல்லியடியை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னையா இராசசிங்கம் நேற்று (24.02.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ் வரியின் அன்புக் கணவரும், உதயவதனா (கனடா), உதயவேல் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தை யும், கதிரவேலு (கன டா), தமிழினி (கரண வாய்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் காலை 9.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா விதி, நெல்லியடி. தகவல் : உ. தமிழினி (மருமகள்)

## மரண அறிவித்தல்



### ஆண்டி உதயகுமார்

பத்தமேனி, பாரதி வீதி, அச்சுவேலியைப் பிறப்பிட மாகவும் மட்டுவில் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட ஆண்டி உதயகுமார் நேற்றுமுன்தினம் (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை அகாலமரண மானார்.

அன்னார் ஆண்டி-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தாவின் பாசமிகு கணவரும், அமிர் தலிங்கம், தவராசா, (ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மரக் காலை), அசோ, சிவராசா, பவளமலர் (ஆசிரியை சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், சாரதா, உசா, சுதா, உமா, சுகிர்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வில்சன் வீதி, மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திருமதி

### கந்தையா சின்னம்மா.

அந்தணத்திடலைப் பிறப்பிடமாகவும் மயிலாத் தோட்டம் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா - சின்னம்மா நேற்று (24.02.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் கங்காதேவி, அனுராசா (உதயம் பலசரக்கு மாளிகை , நெல்லியடி), தவராசா (கனடா), சோமசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், பரமகுரு, காலஞ்சென்ற தனபாக்கியம், இராசம்மா, திரவியம் (கனடா), ஜெயலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை பகல் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் பூவரசம் திட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல் லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலாத்தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி. தகவல் : க. அனுராசா (மகன்) உதயம் பலசரக்கு மாளிகை, நெல்லியடி.

### செஞ்சிலுவை யாழ்.கிளை புதிய இடத்தில் இயங்குகிறது

யாழ்ப்பாணம், பெப்.25
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவுக் கிளை அலுவலகம் தற்போது இல. 67, கோவில் வீதியில் செயற்பட்டு வருகிறது.
யாழ்.செயலகத்துக்கு அருகில் கண்டி வீதி, சோமசுந்தரம் வீதிக் குச்சமீபமாக இயங்கி வந்த யாழ். கிளை அலுவலகம் கடந்த 10 ஆம் திகதி முதல் புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

### வடமராட்சி, வரணி ஆஸ்பத்திரிகளுக்கு சுகாதார அமைச்சர் நாளை வருகிறார்

வடமராட்சி, பெப்.25
வடமராட்சி மற்றும் வரணி அரசினர் வைத்தியசாலைகளின் தேவைகள், குறைபாடுகள், உத்தியோகத்தர், ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து அறிந்து கொள்வதற்காக வடமாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் நாளை புதன்கிழமை அந்தப் பகுதிகளுக்கு வருகிறார்.
நாளை பிற்பகல் 1.30 மணிக்கு வடமராட்சியில் உள்ள கரவெட்டி பிரதேச அரசினர் வைத்திய சாலைக்கும் பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கும், பிற்பகல் 3 மணிக்கு வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்திய சாலைக்கும், மாலை 4 மணிக்கு வரணி பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கும் செல்வார்.
இந்த வைத்தியசாலைகளின் அபிவிருத்திச் சங்களின் நிர்வாகப் பிரதிநிதிகளையும் மாகாண சுகாதார அமைச்சர் சந்தித்து உரையாடுவார். (ஒ-173)

### அலியான்ஸ் கிளை அலுவலகம் இன்று யாழ்.நகரில் திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.25
அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டின் மெற்றோ கிளை அலுவலகம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, யாழ்.நகரில் இல. 86 நாவலர் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ)

# வடபகுதி பெரும்போக விளைச்சலில் 92 ஆயிரம் மெ.தொன் நெல் இழப்பு

## 30 வருடங்களின் பின் இம்முறை இவ்வாறானதொரு பாதிப்பு

அச்சுவேலி, பெப்.25
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் 29 ஆயிரத்து 988 ஏக்கர் நெற்செய்கை முற்று முழுதாக நூறு வீதமும் அழிந்துள்ளது.
அத்துடன் கணிசமான அளவு பகுதி நிலையிலும் சேதமடைந்துள்ளது.
முற்று முழுதாக சேதமடைந்த நெற்பயிர்ச் செய்கையில் மட்டும் 92 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் இழப்பு ஏற்பட்டுள்ளது.
கிடைக்கப் பெற்ற புள்ளி விவரங்களின் அடிப்படையில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சி.சிவகுமார் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண நெற்பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட முற்று முழுதான சேதம் தொடர்பாக வடக்கு மாகாண விவசாயத் திணைக்கள மதிப்பீடுகள் மூலம் தெரிய வருவதாவது:
★யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட 26,519 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையில் 4, 989 ஏக்கர் நெற்பயிர்கள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளன.
★கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 55,079 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையில் 14,824 ஏக்கர் பயிர்ச் செய்கை முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது.
★முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 36,729 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையில் 2296 ஏக்கர் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது.
★மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 11,770 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையில் 963 ஏக்கர் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது.
★வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 29,178 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையில் 6,916 ஏக்கர் முற்று முழுதாகச் சேதமடைந்துள்ளது.
வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் 29, 988 ஏக்கர் நெற்பயிர் முற்று முழுதாக நெல் விளைச்சல் நூற்றுக்கு நூறு வீதமும் சேதமடைந் துள்ளது.
இதன்மூலம் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் எதிர்பாராத பொருளாதார இழப்பைஎதிர்கொண்டுள்ளனர்.
நெற்பயிர்ச் செய்கை முழுமையாக சேதமடைந்த வகையில் எதிர்பார்க்கப்பட்ட நெல் விளைச்சலில் ஐந்து மாவட்டங்களிலும் மொத்தமாக 91,959 மெற்றிக்தொன் இழப்பு ஏற்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கையில் 29,988 ஏக்கர் முற்றுமுழுதாக சேதமடைந்திருப்பதோடு பகுதி நிலையிலும் கணிசமான அளவு சேதமடைந்துள்ளது.
காலந்தப்பிய மழை வீழ்ச்சி, காலநிலை முரண்பாடு போன்ற இயற்கை நிலைமைகளினால் கடந்த 30 வருடங்களுக்கு பின்னர் கடந்த பெரும் போகத்தில் பெரியளவில்நெற்பயிர்ச்செய்கை பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாகத் கூறப்படுகிறது. (ஒ-11)



என்ன தான் வசதி வாய்ப்புகள் வந்தாலும் விறகு எரிக்கும் வழமையை நிறுத்துவது எப்படி? எல்லோருக்கும் அந்த வசதிகள் வந்துவிடவில்லையே! யாழ்.நகர் பஸ்தியன் சந்திப் பகுதியில் சுமையுடன் காத்திருக்கிறார்கள் இவர்கள். (ஒ-20)

## குடாநாட்டில் கள்ள நோட்டுகள் புழக்கம் குறித்து எச்சரிக்கை

### நெல்லியடியில் 5 ஆயிரம் ரூபா தாள்கள் சிக்கின

நெல்லியடி, பெப்.25
யாழ்.குடாநாட்டுப் பகுதியில் கள்ள நோட்டுப் புழக்கம் இருப்பது குறித்து எச்சரிக்கப்படுகிறது.
அண்மையில் நெல்லியடிப் பகுதியில் 5 ஆயிரம் ரூபா போலி நோட்டுக்கள் கடை ஒன்றில் மாற்றப்பட்டுள்ளன. 500 ரூபா போலி நோட்டுக்களும் உலாவி வருகின்றன என்று கூறப்படுகிறது.
கடந்த வியாழக்கிழமை நெல்லியடிச் சந்தியிலுள்ள சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் கடைக்கு வந்த நடுத்தர வயதுடைய ஒருவர், சில பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளார். அதற்கான பணமாக 5 ஆயிரம் ரூபா நோட்டைக் கொடுத்து மிகுதியும் பெற்றுக் கொண்டார்.
அது மட்டுமன்றி மேலும் ஒரு 5 ஆயிரம் ரூபாவைக் கொடுத்து மாற்றித் தருமாறு கேட்டுள்ளார். கடைக்காரர் சில்லறை நோட்டுக்களைக் கொடுத்து பெரிய நோட்டைப் பெற்றுக் கொண்டார்.
மறுநாள் வெள்ளிக்கிழமை வங்கிக்குச் சென்றார் வர்த்தகர். கருமபீடத்தில் கடமையில் இருந்தவரிடம் பணத்தை வைப்புச் செய்வதற்காகக் கொடுத்தார். அப்போது தான் தெரிய வந்தது 5 ஆயிரம் ரூபா நோட்டுக்கள் இரண்டும் கள்ள நோட்டுக்கள் என்பது.
வடமராட்சியில் மட்டுமல்ல கள்ள நோட்டுக்கள் யாழ்.குடாநாட்டின் சகல இடங்களிலும் புழக்கத்தில் இருக்கலாம். இதற்காகவே சிலர் நடமாடித் திரியலாம். எனவே பொதுமக்கள் மட்டுமன்றி கடைக்காரர்களும் அவதானத்துடன் நடக்க வேண்டும். (ஒ-35)

## பிரதி வெள்ளி, போயா தினங்களில் 'சிகரெட்' விற்பனை இல்லை

### நெல்லியடி, கரவெட்டி கடைகளில்

வடமராட்சி, பெப்.25
புகைத்தலை இல்லாதொழிக்கும் நடவடிக்கைக்கு ஆதரவாக நெல்லியடி, கரவெட்டி ஆகிய பகுதிகளில் புனித தினங்களான பிரதி வெள்ளி மற்றும் போயா தினங்களில் கடைகள், வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், தேநீர்ச்சாலைகள் என்பவற்றில் சிகரெட் விற்பனை செய்வதில்லை என்று நெல்லியடி வர்த்தகர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சங்கத் தலைவர் எஸ்.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-
நெல்லியடி நகரில் பயணிகள் தங்கி நிற்கும் பஸ்தரிப்பிடம், பொதுமலசலகூடம் என்பன இல்லாமையால் நகருக்கு வந்து செல்வோரும் பல்வேறு இடங்களுக்குப் பயணிப்போரும் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றனர்.
குறிப்பாக வீதி அகலிப்பின் போது, ஏற்கனவே இருந்த பயணிகள் தங்கி நிற்கும் பஸ் தரிப்பிடம் இடித்து அப்புறப் படுத்தப்பட்டிருந்தது. மலசல கூடம் முன்னரும் இருக்கவில்லை.
எனவே நகரில் பஸ் தரிப்பிடமும் பொதுமலசலகூடமும் அமைப்பது தொடர்பாக வர்த்தகர் சங்கம் கரவெட்டிப் பிரதேச சபையுடன் கலந்துரையாடி சுமுகமான முடிவு ஒன்று எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப் பட்டது.
அத்துடன் நெல்லியடி நகரத்திலும், அதனை அண்டிய பகுதிகளிலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த நடை பாதை வியாபாரிகள் பல்வேறு வகையான பொருள்களையும் பரப்பி வியாபாரம் நடத்துவதால் நிரந்தர வியாபாரிகள், வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.
எனவே நடை பாதை வியாபாரத்தை குறித்த பகுதியில் முற்று முழுதாகத் தடை செய்ய வேண்டும் என்று பிரதேச் சபையைக் கோரும் மற்றொரு தீர்மானமும் நிறை வேற்றப் பட்டது. (வ-173)

## பஸ் தரிப்பிடங்களாக பிரதான வீதிகள்

### இதுவரை அதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்காததால்

யாழ்ப்பாணம்.பெப்.25
யாழ்.மாவட்டத்தில் இருந்து உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு தரிப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாததால் சேவை நேரம் முடிவடைந்த பின்னர் நகரின் பிரதான வீதி ஓரங்களில் தமது பஸ்களை நிறுத்தி வைக்க வேண்டியுள்ளதாக சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.
யாழ்.மாவட்டத்தில் இருந்து சேவையில்ஈடுபடும் வெளிமாவட்டங்களுக்கான தனியார், பஸ்களுக்கு யாழ்.ஸ்ரான்லி வீதி ஒழுங்கையிலும், உள்ளூர் பஸ்களுக்கான மின்சார நிலைய வீதியிலும் தரிப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ளதால், சேவை நேரத்துக்கான பஸ்களை நிறுத்தி வைக்கவே இடவசதி போதுமானதாக உள்ளது. அடுத்த சேவைக்கு குறிப்பிட்ட இடைவெளி நேரம் இருக்கும் வேளையில் பஸ்களை நிறுத்த இடம் ஒதுக்கப்படவில்லை. அதனால் பஸ்களை நிறுத்தி வைப்பதற்குவேறு இடங்களை- பிரதான வீதியோரங்களை நாட வேண்டியுள்ளது. அந்த வகையில் கே.கே.எஸ் வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி மற்றும் ரயில் நிலைய வீதிகள், தனியார் பஸ்களின் தரிப்பிடமாக மாறியுள்ளன.
தனியார் பஸ்கள் இவ்வாறு வீதியோரங்களில் நிறுத்தப்படுவதால் வாகன நெரிசல் ஏற்படுவதுடன் பாதசாரிகளும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தனியார் பஸ்களுக்கான தரிப்பிட ஒழுங்கு முற்ற வெளிக்கு மாற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் அதற்கான மாற்று நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப் பட வில்லை என்று பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ- வ-14)



பிரதான வீதியொன்றில் தரித்து நிறுத்தப்பட்ட தனியார் பஸ்கள்

# அரசியலில் கர்வத்திற்கு என்றுமே இடமில்லை

*ராகுல் காந்தி கூறுகின்றார்*

புதுடில்லி. பெப்.25
அரசியலில் என்றுமே கர்வத்துக்கு இடமில்லை என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி.

உத்தரகண்ட் மாநிலத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது.

"உத்தராகண்ட் மாநிலம் கடுமையாக பாதிக்கப்பட்டபோது நமது தேசம் முழுவதும் அதன் பின்னால் நின்று உதவியது. அது போல் நாட்டில் எங்கு பாதிப்புகள் நேர்ந்தாலும், அங்கு சென்று வலியால் துடிப்பவர்களுக்கு உதவி செய்யுங்கள். அரசியலில் கர்வத்திற்கு என்றும் இடமில்லை. ஒருவருடைய வலியை உணர வேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் உள்ள கர்வத்தை கைவிட வேண்டும். இன்று இம் மாநில முதலமைச்சரிடம் நிவாரணம் மற்றும் மறுகட்டமைப்புக் குறித்து விவாதித்தேன்." என்று தெரிவித்துள்ளார். (ற)



தமிழ்நாட்டின் குட்டத்து ஆவாரம்பட்டியில் ஜல்லிக்கட்டுப் போட்டி இடம்பெற்றது. அதில் தன்னை அடக்க வந்த வீரரிடம் பிடிகொடுக்காது பாய்கின்றது இந்தக் காளை.

# இந்தியாவில் ஒருபோதும் இராணுவப் புரட்சி ஏற்படாது

*பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி நம்பிக்கை*

கொச்சி. பெப்.25
இந்தியாவில் இராணுவப் புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலை ஒருபோதும் ஏற்படாது என்று தெரிவித்துள்ளார் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி.

இந்திய இராணுவத்தின் இரு பிரிவுகள் 2012 ஆம் ஆண்டு புதுடில்லியை நோக்கி நகர்த்தப்பட்டன என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அது தொடர்பில் கருத்துக் கூறியிருந்த இந்திய இராணுவத் தளபதி ஏ.கே.சவுத்ரி, இந் தப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசுக்கும் இராணுவத் துக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்திருந்தார். இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



*ஏ.கே.அந்தோனி*

"கடந்த 7 ஆண்டுகளாக நான் இந்திய பாதுகாப்பு படையினருடன் இணைந்து பணியாற்றி வருகிறேன். இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல் படையில் உள்ள உயரதிகாரிகளிடம் மட்டுமல்லாமல் சாதாரண சிப்பாய்களுடனும், எல்லைப் பகுதியில் பணிபுரிபவர்களுடனும் பழகியிருக்கிறேன்.

இந்தியாவில் இராணுவப் புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலை ஒருபோதும் ஏற்படாது. இந்திய இராணுவம் ஒரு பொறுப்புள்ள படை என்பதை நான் உறுதியுடன் கூறுவேன். இராணுவம் செயற்படுவதற்காக ஒரு முடிவு எடுக்கும்போது, மக்களாட்சி அரசு எடுக்கும் அனைத்துக் கொள்கைகளுக்கும் நிச்சயம் கட்டுப்படும். எனவே எதற்காகவும் கவலைப்படத் தேவையில்லை. இராணுவம் டில்லியை நோக்கி படைப் பிரிவை நகர்த்தியமை ஒரு வழக்கமான பயிற்சிதான். அது முடிந்துபோன விடயம். நான் இராணுவத்தின் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன்." என்று தெரிவித்துள்ளார். (ற)

## எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு உடல் நலக் குறைவு



*ஜெயகாந்தன்*

சென்னை. 25
பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் (வயது-80) உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


ஜே.கே என்று அழைக்கப்படும் ஜெயகாந்தன் கடந்த 3 மாத காலமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு அவ்வப்போது நினைவு தவறி வந்தது என்றும் தற்போது உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

2002 ஆம் ஆண்டு இந்திய இலக்கிய உலகின் உயரிய விருதான ஞானபீட விருது அவருக்கு வழங்கப்பட்டது. சாகித்ய அகாடமி உட்படப் பல விருதுகளைப் பெற்று[illegible] அவருக்கு 2009ஆம் ஆண்டு பத்மபூஷண் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

1950ஆம் ஆண்டு இலக்கிய வாழ்க்கையை ஆரம்பித்த ஜெயகாந்தன், 'சில நேரங்களில் சில மனிதர்கள்' போன்ற படைப்புகளால் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர். (ற)


# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா ஆறுமுகம்



அராலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா ஆறுமுகம் நேற்று (24.02.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், மனோன்மணி மற்றும் திருவிளங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரின்பநாயகம், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் சிவமணி, குலமணி ஆகியோரின் அன்புத் தாயும், தவமலர், உதயகன்னி, சின்னையா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், டினேஷா (சுவிஸ்), வினோஷா (லண்டன்), மதுஷா, காலஞ்சென்றவர்களான சாந்தீபன், சாந்தமலர் மற்றும் சாந்தஜோதி, காலஞ்சென்றவர்களான சாந்தகலா, விஜயராஜன் மற்றும் ஜெயறூபி, சிவறூபி, கந்தசாமி, வினோஷன் (சுவிஸ்), விதுஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆறுஜா, லேகா, லக்ஷிகா, தனுஷ்கா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்- பேரின்பநாயகம் (கணநாதன்).
0776569873

நாச்சிமார் கோயில் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(45093)
(10.8.3)

## சிக்கன நடவடிக்கையை எதிர்த்து போராட்டம்

லண்டன், பெப்.25
ஸ்பெயின் அரசின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். அதில் 10 ஆயிரம் பேர் வரை பங்குபற்றினர்.
பிரதமர் மரியானோ ரஜோய் தலைமையிலான அரசு, சிக்கன நடவடிக்கையாக போராட்டங்களுக்கு அபராதம் விதித்தல், ஊதியக் குறைவு, நிதி ஒதுக்கீடுகளை குறைப்பது போன்ற பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.
அவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.(ற)

## ஐ.நாவின் குற்றச்சாட்டை நிராகரித்தது வடகொரியா

### அமெரிக்காவின் கூட்டு நாடுகளின் கட்டுக்கதை என்கிறது

பியாங்யாங், பெப்.25
தமது நாட்டில் மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன என ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை கட்டுக்கதை. அந்த அறிக்கையை முற்றாக நிராகரிக்கின்றோம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது வட கொரியா.
குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் கண்டுபிடித்துள்ள கட்டுக்கதைகள் என்றும் அந்த நாடு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மனித குலத்துக்கு எதிராக ஏராளமான குற்றங்களை வட கொரியத் தலைவர்கள் இழைத்துள்ளனர். அவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. சபை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.
அதற்குப் பதிலளிக்கும் விதமாகவே வடகொரியா இவ்வாறு தெரிவித்துள்ளது. (ற)

## கொலம்பிய ஜனாதிபதியின் மின்னஞ்சல்கள் திருட்டு




லண்டன், பெப்.25
கொலம்பிய ஜனாதிபதி ஜுவான் மானுவல் சாண்டோஸின் ஆயிரக்கணக்கான மின்னஞ்சல்கள் திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.
ஜனாதிபதி தனது சொந்த அலுவல்களுக்குப் பயன்படுத்திய மின்னஞ்சல்கள் மற்றும் அவரது குடும்பத்தினரின் தரவுகள் என்பன திருடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி சாண்டோஸ்,
"எதிர்வரும் மே மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் நான் போட்டியிடவுள்ள நிலையில் அரசியல் காரணங்களுக்காகவே எனது தகவல்கள் திருடப்பட்டுள்ளன. அதற்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு விரைவில் தண்டிக்கப்படுவார்கள்" என்று தெரிவித்துள்ளார். (ற)



## ஐரோப்பிய ஒன்றியத்துக்கே முன்னுரிமை

கீவ், பெப்.25
உக்ரைனில் தற்காலிக பிரதமராகச் செயற்பட்டு வரும் ஒலெக்ஸாண்டெர் டர்சினோவ் ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஒருங்கிணைப்புக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். அதே வேளை, ரஷ்யாவுடனான உறவைச் சீர் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.
இந்தநிலையில், பதவி நீக்கம் செய்யப்பட்ட அந்நாட்டு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சின் உடைமைகள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. ரஷ்யாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற அவர் விமானநிலையத்தில் வைத்துத் தடுக்கப்பட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ள போதும் அதுகுறித்து உறுதிப்படுத்தமுடியவில்லை. (ற)

## வெனிசுவேலா அரசுக்கு ஆதரவாக போராட்டம்

கராக்கஸ், பெப்.25
வெனிசுவேலா அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்தும் பேரணி நடத்தப்பட்டுள்ளது.
தலைநகர் கராக்கஸில் நடைபெற்ற இந்தப் பேரணியில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று, அரசுக்கு ஆதரவான முழக்கங்களை எழுப்பினர்.(ற)

### தாய்லாந்தில் தொடர் போராட்டம்

## பாங்ஹொக்கில் இருந்து வெளியேறினார் பிரதமர்

**இந்த மாத ஆரம்பத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட போதிலும் பல இடங்களில் வேட்பாளர் தேர்வுகளும், வாக்குப் பதிவுகளும் தடுக்கப்பட்டதால் தேர்தல் ஆணையத்தினால் முடிவு இதுவரை அறிவிக்கப்படவில்லை. அரச அலுவலகங்கள் போராட்டக்காரர்களால் முற்றுகை இடப்பட்டு வருவதால் பெரும்பான்மையான பணிகள் தேக்க நிலையைச் சந்தித்துள்ளன.**

பாங்ஹொக், பெப்.25
தாய்லாந்து அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் அந்நாட்டுப் பிரதமர் யங்லக் ஷினவந்ரா தலைநகர் பாங்ஹொக்கை விட்டு வெளியேறியுள்ளார் என்று கூறப்படுகின்றது.
யங்லக் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் தலைநகரில் காணப்பட்டார். எனினும் அவர் தற்போது பாங்ஹொக்கில் இருந்து 150 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஓர் இடத்தில் இருந்து தனது அலுவலகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.
அதேவேளை, இன்று தனது அமைச்சரவையைப் பிரதமர் கூட்டவுள்ளார் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் சுரபோங் டோவிசக்சைகுல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "பிரதமரின் தற்போதைய வசிப்பிடம் குறித்த விவரங்கள் எனக்குத் தெரியப்படுத்தப்படவில்லை" என்று தெரிவித்துள்ளார்.
பிரதமர் யங்லக் ஷினவந்ரா பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. கடந்த ஆண்டு இறுதியில் ஆரம்பமான இந்தப் போராட்டங்கள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. யங்லக் பதவி விலகுவதற்கு மறுத்துவரும் நிலையில் இந்த நெருக்கடி முடிவுக்கு வருவதற்கான எந்த அறிகுறியும் தற்போது காணப்படவில்லை.(ற)

## உலகின் மூத்த மனிதர் சாவு

லண்டன், பெப்.25
உலகின் மூத்த மனிதரான ஒலிஸ் ஹெடஸ் சோமர் தனது 110 ஆவது வயதில் லண்டனில் காலமானார்.
உலகின் மூத்த மனிதராகக் கருதப்பட்ட ஒலிஸ், ஜேர்மன் மொழி பேசும் யூத குடும்பத்தில் பிறந்தவர்.


ஒலிஸ்


இரண்டாம் உலகப் போரின் போது சாவின் வாசல்வரை சென்று திரும்பிய ஒலிஸ், தன்னுடைய திறமையால் உயிர் பிழைத்து வந்தார் என்று அவரது குடும்பத்தினர் கூறுகின்றனர்.
"எங்களது கடினமாக நாள்கள் அவரால் வெகுவாக இலகுவாக்கப்பட்டன, அவரை இழந்து துக்கத்தில் இருப்பதோடு பெரிதும் தனிமையை உணர்கிறோம்" என்று அவரது பேரன் ஏரியல் சோமர் தெரிவித்துள்ளார்.
ஒலிஸ் தயாரித்த ஆவணப் படம் ஒன்று ஒஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பச்சிளம் குழந்தையைக் காப்பாற்றிய இளம்பெண்ணின் சமயோசிதம்

மியாமி, பெப்.25
நடுவீதியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பச்சிளம் குழந்தை ஒன்றைக் காப்பாற்றி அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளார் இளம் பெண் ஒருவர்.
அமெரிக்காவில் மியாமி நகரைச் சேர்ந்தவர் பமீலா. நேற்றுமுன்தினம் பமீலாவை அழைத்த அவரது சகோதரி தனது 5 மாதக் குழந்தை செபஸ்டியானுக்குச் சிறிது உடல் நலமில்லை என்று கூறியுள்ளார். அதையடுத்து இருவரும் குழந்தையையும் எடுத்துக் கொண்டு காரில் மருத்துவமனைக்குப் புறப்பட்டனர்.
செபஸ்டியானுக்கு பிறந்தது முதலே சுவாசம் தொடர்பான பிரச்சினை இருந்து வந்தது. காரில் ஏறியது முதல் அழுது கொண்டிருந்த செபஸ்டியானின் அழுகைக் குரல் திடீரென நின்றது. அப்போது கார் அதிவேக வீதியில் சென்று கொண்டிருந்தது.



குழந்தையின் அழுகைச் சத்தம் நின்றதை அடுத்து பமீலா குழந்தையைத் தூக்கிப் பார்த்தார். அப்போது செபஸ்டியான் மூச்சுவிடுவதற்குப் பெரிதும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். அவனது உடலும் நீல நிறத்துக்கு மாறத் தொடங்கியிருந்தது.
அதிவேக நெடுஞ்சாலையில் என்ன செய்யமுடியும்? காரை நிறுத்திவிட்டு திகைத்து நின்ற பமீலாவுக்கும் அவரது சகோதரிக்கும் அருகில் இருந்த பொலிஸார் சிறிது உதவி புரிந்தனர். அவர்கள் அவசர மருத்துவக் குழுவினருக்கு தகவல் தெரிவித்தனர்.
ஆனால் செபஸ்டியானின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியது. அதற்கு மேல் காத்திருக்க முடியாத பமீலா, மருத்துவக் குழுவினரை எதிர்பார்க்காது தானே காரியத்தில் இறங்கினார். குழந்தைக்கு முதலுதவிகள் வழங்கத் தொடங்கினார். குழந்தை மூச்சுவிடுவதற்குச் சிரமப்பட்டதை அடுத்து CPR முதலுவியை வழங்கத் தொடங்கினார் பமீலா. (CPR என்பது சுயநினைவு அற்ற சுவாசம் இல்லாத ஒருவருக்கு வழங்கப்படும் செயற்கைச் சுவாசம். இதயத்துடிப்பு நின்றுவிட்ட ஒருவருக்கு உடனடியாக மார் புப் பகுதியில் இதயத்திற்கு மேல் அழுத்திப் பிசைந்து, வாயின் மேல் வாய் வைத்துச் சுவாசத்தை அளிப்பது) பமீலாவின் முதலுதவிகளால் செபஸ்டியான் சிறிது மூச்சு விடத் தொடங்கினான். மருத்துவக் குழுவினர் வரும் வரை பமீலா தொடர்ந்து தனக்குத் தெரிந்த முதலுதவிகளை வழங்கிக் கொண்டிருந்தார். அதன்பின்னர் செபஸ்டியான் மருத்துவக் குழுவால் மருத்துமனையில் சேர்க்கப்பட்டான். தற்போது நலமுடன் உள்ளான். பமீலாவின் சமயோசிதமும், துணிவு மிக்க முடிவுமே அந்தப் பச்சிளங்குழந்தையைக் காப்பாற்றியுள்ளது என்று பாராட்டியுள்ளனர் மருத்துவர்கள். (ற)




## திருவருள்மிகு நவாலியூர் களையோடை கண்ணகை அம்மன் ஆலய

# சங்காபிஷேக சிறப்புமலர் - 26.02.2014

### காலை நிகழ்வுகள்

நிகழும் மங்கலகரமான விஜய வருடம் மாசித் திங்கள் 14ஆம் நாள் நாளை (26.02.2014) புதன்கிழமை உத்தராட நட்சத்திரமும், துவாதசித் திதியும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 9.24 மணி முதல் 12.54 மணி வரையுள்ள சுபவேளையில் எங்கள் குல தெய்வமான கண்ணகை அம்பாளுக்கும், விநாயகப்பெருமான், முருகப்பெருமான், வைரவப் பெருமான் முதலான தெய்வங்களுக்கும் 1008 சங்குகளாலான சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் கிடைக்கப் பெற்றுள்ளது. இச்சங்காபிஷேக நிகழ்வுகளில் பங்குபற்றி எம்பெருமாட்டியின் திருவருளைப் பெற்றுக் கொள்வதோடு தொடர்ந்து நடைபெறுகின்ற மாகேஸ்வர பூசையிலும் (அன்னதானம்) அடியார்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

### மாலை நிகழ்வுகள்

**நாளை மாலை 4.00 மணிக்கு** எம்பெருமாட்டியின் விஷேட பூசை நிகழ்வுகளைத் தொடர்ந்து,
ஈழத்தின் தலை சிறந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் இன்னிசை கானமழையில்
நனைந்திட அடியார் கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்ந்து **இரவு 9.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசைகள்** நடைபெற்று
அம்பாள் அழகிய பூந்தண்டிகையிலே தவில் முழங்க நாதஸ்வரங்கள் இசைக்க,
தென்னிலங்கையிலிருந்து விஷேடமாகத் தருவிக்கப்பட்ட
விஷேட வாண வேடிக்கைகளுடன் வெளிவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.
அவ்வேளைகளிலே அம்பிகை அடியார் கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து எம்பெருமாட்டியை வணங்கி
இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

### ஈழத்தின் தலைசிறந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் வரிசையிலே

**நாதஸ்வரம்**

M.P. பாலகிருஷ்ணன் - அளவெட்டி
J. சிவதாசன் - கோண்டாவில்
R. சிவகுமார் - தொல்புரம், வடக்கம்பரை
P.S. பாலமுருகன் - ஈழநல்லூர்
V.K.P. குமரன் - கோண்டாவில்
K. நாகதீபன் - தாவடி
N. ராஜன் - சுதுமலை

**தவில்**

N.R.S. சுதாகரன் - இணுவையூர்
M.S. சதீஸ்குமார்(குட்டி) - பருத்திநகர்
N. பிரசன்னா - சுதுமலை
N. நந்தகுமார் - யாழ்ப்பாணம்
M.S. தட்சணா - தொண்டமனாறு
B. நர்மதன்(மது) - இணுவையூர்
P.S. செந்தில் - ஈழநல்லூர்
M.S. துளசிபரன் - தொண்டமனாறு
J. துஷ்யந்தன் - சுதுமலை

**ஒளி அமைப்பு:**
மதி லைற் - பண்டத்தரிப்பு

**ஒலி அமைப்பு:**
செல்வம்ஸ் சவுண்ஸ் - பண்டத்தரிப்பு
சஜீவன் சவுண்ஸ் - நவாலி

**சாத்துப்படி:**
க.வரதராஜன் - மல்லாகம்

**தென்னிலங்கையிலிருந்து விஷேடமாகத் தருவிக்கப்பட்ட விஷேட வாணவேடிக்கை நிகழ்வுகளும் இடம்பெறும்.**

❖❖❖❖❖❖❖❖❖ விழாச் சிறப்புற வாழ்த்துவோர்: ❖❖❖❖❖❖❖❖❖



அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப புதிய
டிசைன்களில் தங்க நகைகளை செய்து
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

சிறி தேவி கருமாரி
நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
83/01, கஸ்தூரியார் வீதி செம்மாதெரு யாழ்ப்பாணம்.
Mob : 077 360 4712
SriDavi Karumarie
Nahai Madam



83/01, Kasthuriar Road, Semmatheru, Jaffna.

RAM BUILDERS
Civil Engineering Construction Work
"Sri Rangam", Navaly North, Manipay, Jaffna, Sri Lanka.
Ram Builders
Reg No. VSW/F/BR/06/2011
RB,No. 11397
(+94) 777111344
(+94) 212255876
ram.builders@yahoo.com
Proprietor - T. Vishnu



களையோடை
கண்ணகி
அம்மன்
கிரசர்
கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
077 614 6474



வதிவிட பயிற்சிச் செயலமர்வு

## ஆங்கில பயிற்றுவிப்பாளர்களுக்கு மன்னாரில் பயிற்சிச் செயலமர்வு

மன்னார், பெப்.25
ஆசிரியர்களான ஆங்கிலப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் ஐந்து நாள் வதிவிடப் பயிற்சிச் செயலமர்வு மன்னார் ஆங்கில உதவி மையத்தில் ஆரம்பமாகியுள்ளது.
குறித்த செயலமர்வு வட மாகாண ஆங்கில உதவி மையத்தின் முகாமையாளர் எஸ்.ஏ.ராஜன் குரூஸ் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
குறித்த செயலமர்வில் மன்னார் கல்வி வலயம் மற்றும் மடு கல்வி வலயத்தைச் சேர்ந்த 25 ஆங்கில ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.
நாமல் ராஜபக்ஷவின் அமைப்பு ஒன்றும் பிரித்தானியாவின் ஸ்பைஸ் நிறுவனமும் இணைந்து குறித்த பயிற்சிச் செயலமர்வை ஒழுங்கு செய்துள்ளன.
கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் குறித்த செயலமர்வில் பிரித்தானியாவைச் சேர்ந்த கலாநிதி அலிஸ்டா பிரடி வளவாளராகக் கலந்துகொண்டு ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கவுள்ளார்.
இந்தப் பயிற்சிச் செயலமர்வு நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
குறித்த ஆரம்ப நிகழ்வில் ஸ்பைஸ் நிறுவனத்தின் முகாமையாளர் முகான் சமரசிங்க மற்றும் மன்னார் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க)

# படையினரின் ஆக்கிரமிப்பில் தமிழரின் சொந்த நிலங்கள்

## தடுத்து நிறுத்துமாறு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.25
தமிழர்களின் நிலங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
இவ்வாறு இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மிச்சல் ஏர் வினுக்கும் தமக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது வலியுறுத்தினார் வடமாகாண சபை உறுப்பினரா ் மருத்துவர் சி.சிவமோகன்.



சி.சிவமோகன்.

வவுனியாவில் அண்மையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;
தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை பௌத்தமயமாக்கும் சிங்கள பேரினவாத அரசின் கொள்கைக்கு எதிராக நள்ளிரவில் கூட போராடுவதற்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். நிலத்துக்கான போராட்டம் என்பது எமது வாழ்வுரிமைக்கான போராட்டமாகும். இதன் நியாயத்தை உணர்ந்து சர்வதேச நாடுகள் எமக்குரிய அங்கீகாரத்தை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பின்போது படையினர் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் ஆக்கிரமித்து வைத்துள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் தொடர்பான தகவல் திரட்டையும் அவர் ஏர்வினிடம் வழங்கினார்.
மேலும் பிரதேச சபைக்குச் சொந்தமான ஒலுமடு ஆயுள்வேத வைத்திய நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம் என்பன படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும், புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள படைத்தளம் தொடர்பாகவும், முல்லைத்தீவு இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான வயல் காணிகள், மல்லாவியில் தனியாரின் காணியில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம், வவுனியாவில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றம், ஒதிய மலையில் தனியார் நிறுவனங்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட பெருமளவு காணிகள் தொடர்பாகவும் மாகாண சபை உறுப்பினர் ஏர்வினிடம் எடுத்துக் கூறினார். (க)

## போக்குவரத்தால் சேதமடையும் உயிலங்குளம் அணைக்கட்டு

*பிரதேச செயலரிடம் மக்கள் முறைப்பாடு*

துணுக்காய், பெப்.25
துணுக்காய் உயிலங்குளத்தின் அணைக்கட்டுக்கு மேலாக போக்குவரத்து இடம்பெறுவதால் அணைக்கட்டுக்கு சேதங்களை எதிர்கொண்டு வருவதாக கிராம மக்கள் துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
துணுக்காயிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வீதியில் உயிலங்குளம் அமைந்துள்ளது. இந்தக் குளத்தின் அணைக்கட்டின் மேலாகப் போக்குவரத்துக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
ஆனால் இதன் காரணமாகப் பாதிப்பு ஏற்படுவதால் போக்குவரத்தை நிறுத்தி அணைக்கட்டின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு கிராம மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளனர்.
இதேவேளை - துணுக்காய் கிராம அலுவலர் பிரிவில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தருமாறும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# அடுத்த மாதத்துக்குப் பின்னர் பெரும் ஆசிரியர் நெருக்கடி

## *கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் அபாய அறிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.25
அடுத்த மாதத்தில் இருந்து கிளிநொச்சிக் கல்வி வலயம் பெரும் ஆசிரியர் நெருக்கடியை எதிர்கொள்ளும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல்.
அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற அந்தப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் கல்வி நிலைவரம் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
கிளிநொச்சி கல்வி வலயத்தில் 104 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 32 ஆயிரம் மாணவர்களும், 1700 ஆசிரியர்களும் உள்ளனர்.



க.முருக வேல்.

பிரதேசத்தைச் சேர்ந்த 12 பாடசாலைகளின் அதிபர்கள் வருகை தந்துள்ளார்கள். இதில் இரண்டு பாடசாலைகள் உயர்தர வகுப்புக்களைக் கொண்டுள்ளன.
மீளக்குடியமர்வின் பின்னர் பூச்சிய நிலையில் இருந்து தான் கல்வியைக் கட்டியெழுப்பி வருகிறோம்.
ஆசிரியர்கள் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கிப் படையெடுத்த வண்ணம் உள்ளனர். ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணம் உட்பட பிறமாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அடுத்த மாதம் இரண்டு வருட ஒப்பந்தத்தில் வந்த 200 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுவர்.
ஆசிரிய கலாசாலைக்கும் ஆசிரியர்கள் செல்லவுள்ளனர். இடைநிலைப் பிரிவில் 55 விஞ்ஞான ஆசிரியர்களின் பற்றாக்குறையுடன் பல ஆண்டு களாக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றோம். கணித பாடத்துக்கும் ஆசிரியர் நெருக்கடி நிலை காணப்படுகின்றது.
மேலும் ஆரம்பப் பிரிவில் 98 ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நீண்ட காலமாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## மின்சாரம் வழங்காதது்க்கு விசனம் தெரிவிக்கும் மக்கள்

கிளிநொச்சி, பெப்.25
அம்பலப் பெருமாள்குளம் பிரதேசத்துக்கு இதுவரை மின்சார வசதிகள் மேற்கொள்ளப்படாமை குறித்து அங்கு வசிக்கும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
தற்போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இங்குள்ள பல இடங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் அம்பலப் பெருமாள் குளம், கோட்டைகட்டியகுளம் ஆகிய பிரதேசங்களுக்கு இது வரை மின்சார வசதி வழங்கப்படாத நிலையே காண்ப்படுகின்றது.
இந்தப் பிரதேசங்களில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்குள்ள மக்கள் 2011 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்கு இந்தியன் வீட்டுத்திட்டத்தின் கீழ் கட்டம் கட்டமாக வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் வீடுகளுக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் இங்கு வசிப்பவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-122)

# சொந்தப் பலத்தில் மீண்டெழும் காலம் விரைவில் வரும்

## *மாயவனூரில் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.25
"சொந்தப் பலத்தில் மீண்டெழும் காலம் விரைவில் வரும்" இவ்வாறு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் தெரிவித்தார்.
கடந்த 20 ஆம் திகதி வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் அமைந்துள்ள புழுதி ஆற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்று நீரப்பாசனத் திட்டத்தை அமைக்கும் வேலைத் திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்:-
கடந்த 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்புழுதி ஆறு 2004 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு, கடந்த ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டது.
இயற்கையான நீர் ஊற்றையும், பருவ மழையால் கிடைக்கும் நீரையும் கொண்டுள்ள இந்தக் குளத்தில் இருந்து ஏற்று நீரப்பாசனத்திட்டத்தை உருவாக்குவதன் மூலம் 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில்



பொ.ஜங்கரநேசன் உரையாற்றும்போது

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு மாயவனூர் கிராமத்தில் குடியேறிய சுமார்843 குடும்பங்கள் சுமார் 800 ஏக்கர் நிலத்தில் ஏற்று நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள முடியும். இதன் மூலமாகச் சொந்தப் பலத்தில் மீண்டெழும் காலம் விரைவில் வரும். மேலும் வரலாற்றில் நீங்கள் ஒவ்வொரு வரும் கடந்து வந்த பாதைகள் கடினமானவை. இந்த மண்ணில் போராடிய போராளிகள் மாத்திரமன்றி இங்கு வாழ்ந்த மக்களாகிய நீங்களும் போராளிகள் எதிர்கொண்ட அளவில் துயரங்களையும், சுமைகளையும் தாங்கியவர்கள். மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பது தான் எமது விருப்பம். ஆனால் அத்தகைய மாற்றங்கள் போலித்தனமானவையாக இல்லாமல் உண்மைத்தன்மையாகவும் மக்களுக்குப் பயன்படத் தகுந்தவையாகவும் இருத்தல் வேண்டும். கிளிநொச்சி மண்ணில் ஏ-9 வீதியில் பயணிக்கின்றவர்கள் பார்க்கின்ற அழகான கிளிநொச்சி நகரத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் உள்ளே வருகின்ற போது அவலங்களோடும் கண்ணீரோடும், மாத்திரமன்றி, வாழவேண்டும் என்கின்ற ஆசைகளோடும் இருக்கின்ற மக்களைப் பார்க்கின்றேன். உங்களுடைய வாழ்க்கையில் நிரந்தரமான மாற்றங்கள் நிகழ நாங்கள் உழைப்போம். அந்த வகையில் இந்தப் புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தை அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்து உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த உழைப்போம் -என்றார். பின்னர் புழுதியாற்றிலிருந்து ஏற்று நீர்ப்பாசனம் அமைய வுள்ள பகுதிகளை யும் அமைச் சர் தலைமையிலான குழு வினர் பார்வையிட்டனர்.
இந்த நிகழ்வில் அமைச்சருடன் மாகாணசபை உறுப் பினர் சு.பசுபதிப்பிள்ளை, மாவட்ட அமைப்பாளர் அ.வேழமாலிகிதன், மாயவனூர், இராமநாதபுரம் விவசாயக் குழுக்கள், விவசாய அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-18)

## மழையால் அறுவடை பாதிப்பு

முல்லைத்தீவு, பெப்.25
முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று நண்பகலிலிருந்து மாலை வரை தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருந்தது.
இந்தமுறை காலபோக நெற்செய்கையின் போது உரிய நேரத்தில் போதிய மழைவீழ்ச்சி இல்லாததால் நெற் செய்கை அழிவடைந் துள்ள நிலையில் தப்பிப் பிழைத்த பயிர்களை அறுவடை செய்யும் இந்த வேளையில் மழை பெய்கின்றமை விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (க)

## தேசிய மாநாடு மார்ச் 2 இல் ஆரம்பம்

மட்டக்களப்பு,பெப்.25

காத்தான்குடி நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் வருடாந்த தேசிய மாநாடு எதிர்வரும் இரண்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு காத்தான்குடி, ஹிஸ் புல்லாஹ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சூரா சபை தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டின் இறுதியில் நல் லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சில அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பான பிரகடனமும் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

# திருமலை சந்தைக் கட்டடத்தை படைமுகாமாக மாற்ற முயற்சி

## யாருக்கும் கொடுக்க முடியாது என்கிறார் நகரசபைத் தலைவர்

திருகோணமலைநகர சபைக்கு சொந்தமான 'மலையருவி' சந்தைக் கட்டடத் தொகுதியை இராணுவத்தினருக்கான நிரந்தரக் கட்டடத் தொகுதியாகவும், நிரந்தர படைமுகாமா கவும் மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று திருகோண மலை நகர சபைத் தலைவர் க.செல்வராஜா குற்றம் சாட்டி யுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை பவர் ஹவுஸ் வீதியில் உள்ள 'மலையருவி' சந்தைக்கட்டடத்தொகுதியானது முன்னாள் நகர சபைத் தலைவர் அமரர் சூரியமூர்த்தியால் 1994 ஆம் ஆண்டில் 90 லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் தினமும் இனமுறுகல் ஏற்படுவதனால் மக்கள் தமது அன்றாட தேவைகளான மீன், காய்கறிகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யதிருகோணமலைமணிக்கூண்டு கோபுரம் பகுதியில் உள்ள பொதுச் சந்தையை நாடி வந்தனர்.

அப்போது ஏற்பட்ட இனக்கலவரத்தில் சிக்கிய பல அப்பாவித் தமிழ் மக்கள்உயிரிழப்பு மற்றும் தாக்குதலுக்கு உள்ளாகியதைக் கருத்தில் கொண்டுதமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் தனது முயற்சியால் மலையருவி சந்தையை முன்னாள் நகரசபைத் தலைவர் சூரிய மூர்த்தி நிர்மாணித்தார்.

எனினும் இதனை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் பெரும்பான்மை இனத்தவரின் வருமானத்தில் பாதிப்பு ஏற்படும் என திட்டமிட்ட பேரினவாத அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகள் இந்தச் சந்தைக் கட்டடத் தொகுதியைத் திறந்து வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளத் தடைவிதித்தனர்.

அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட போரால் பதற்றமான காலங்களில் தற்காலிகமாக இராணுவத்தினர் இந்தக் கட்டடத் தொகுதியில் முகாமிட்டு பயன்படுத்தி வந்தனர். படையினரை அங்கிருந்து அகற்றுவதற்கு சூரியமூர்த்திக்குப் பின்னர் நகர சபைத் தலைவராக வந்த கௌரிமுகுந்தனும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டும் அது பயனளிக்கவில்லை.

அதனையடுத்து நானும் இந்தக் கட்டட தொகுதியைப் பெற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

இந்த நிலையில் கிழக்கு மாகாண காணி ஆணையாளரால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராணுவத்தினரின் நிரந்தர பாவனைக்கு இந்தச் சந்தைக் கட்டடத் தொகுதியை பெறுவது தொடர்பாக பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

திருகோணமலை நகரசபையானது நகரத்தை பரிபாலிப்பதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இதில் எமது வாகனம் மற்றும் பெறுமதியான வேலைத்தள பொருள்களை பாதுகாப்பாக வைத்து பராமரிக்க இடவசதிகள் போதுமானதாக இல்லை. அதனால் நகர சபைக்கு சொந்தமான இந்தச் சந்தைக் கட்டடத்தை வேறு எவருக்கும் கொடுக்க முடியாது. இந்தக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்க செலவு செய்துள்ள 90 லட்சம் ரூபா பணத்துக் கான எவ் வித வருமானமும் இன்று வரை பெறாததால் கணக்காய்வின்போது எமது சபையின் மீது பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

எனவே இந்தக் கட்டடம் எமக்கு மீள வழங்க வேண்டும் என்று எமது நியாயத்தை கிழக்கு மாகாண காணி ஆணை யாளருக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். எனவே இறுதி முடிவு அரசின் பாதுகாப்பு மற்றும் உள்ளூராட்சி அமைச்சினாலே எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது -என்றார். (ச-40)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் -2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு மீள அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமையவும், பிரதம செயலாளரின் 2012.12.13 ஆம் திகதிய NP/01/02/04/01 இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

01. இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
02. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா நூறு (100/-) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **"செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு"** என்ற முகவரிக்கு 10.02.2014 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். **அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.**
04. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்** எழுதப்பட வேண்டும்.
05. ஆள்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னவராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பதிலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**பதவி பற்றிய விவரங்கள்**

| பதவி இல | பதவிகள் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | காவலாளி | 03 |


**சம்பள அளவுத்திட்டம்** - PL-1-2006A (11730-10X120-10X130-10X145-12X160-17600)

**கல்வித் தகைமை**

01. கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பிரதேசசபை, புதுக்குடியிருப்பு. கு. மிதிலைநாதன், செயலாளர்.

(C/12578)(2.6.3)



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன்கல்முனை தைக்கா வீதியில் அமைந்துள்ள முஹம்மதிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலில் இரத்தான முகாம் இடம்பெற்றது. இந்த முகாமில் பலர் கலந்து கொண்டு இரத்தானம் வழங்கினர்.

# வெளிநாட்டு முதலீடு மூலம் கிழக்கு அபிவிருத்தி பெறும்

## மாகாண அமைச்சர் நஸீர் கூறுகிறார்

மட்டக்களப்பு,பெப்.25

கிழக்கு மாகாணத்தில் முதலீடுகளைமேற்கொள்ள வைப்பதன் மூலம்தான் பல விடயங்க ளைச் சாதிக்க முடியும் என்று கிழக்கு மாகாண கால் நடை அபிவிருத்திச் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹாபீஸ் நஸீர் தெரிவித்தார்.

விவசாயப் போதனாசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் வேலை இல்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி, கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி அடையச் செய்ய முடியும். உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான சந்தைகளை அவர்களே உருவாக்கித் தருவார்கள்.

கிழக்கு மாகாணத்தில் எல்லா வளங்களும் நிறைந்து கிடக்கின் றன. வெளிநாட்டவர்கள் இங்கு முதலீடுகளைச் செய்வதன் மூலம் எமது மாகாணத்தின் அபிவிருத்திக்கு உதவும் வேலை யில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவும் முடியும்-என்றார். (ச)

## திருமலையில் புகைப்பட கண்காட்சி

தேசிய ஒற்றுமையும் புரிந்துணர்வும் தொடர்பான ' புகைப்படக் கண்காட்சியை திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழு நடத்துகின்றது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்று வரும் இந்தக் கண்காட்சியை இன்று வரை பார்வையிட முடியும். பலரது பாராட்டுதலையும் பெற்ற இக் கண்காட்சியில் இலங்கையில் நடைபெற்ற இன முரண்பாடு தொடர்பான போர் நிகழ்வுகளின் ஆரம்ப காலந்தொட்டு இறுதிவரையுமான அத்தனை நிகழ்வுகளும் புகைப்படங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியை பாடசாலை மாணவர்கள் எந்த வித கட்டணங்களும் இன்றி இலவசமாகப் பார்வையிடலாம். (ச)

## சட்டத்துறை முஸ்லிம் மயம்

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.25

இலங்கையின் சட்டத்துறையை முஸ்லிம்மயமாக்குவதற்கு நீதிய மைச்சர் ரவூப் ஹக்கீம் முனைகிறார் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகச் செயலர் நிசாந்த ஸ்ரீ வர்ண சிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.


மேல்மாகாணசபைத் தேர்தல் பரப்புரை அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமது அமைச்சில் அதிகமாக முஸ்லிம்களுக்கு பதவிகளை வழங்கியுள்ளார்.

சமாதான நீதிவான் பதவிகளும் அதிகளவில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

கடந்த வருடத்தில் சட்டக்கல்லூரிக்கு 551 புதுமுக சிங்கள மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

எனினும் இந்த வருடத்தில் 177பேர் மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார். (ச)



குளியாப்பிட்டிய வைத்தியசாலைக்கு 50 மில்லியன் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்பளிப்புச் செய்துள்ளார். அருகில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ,அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உட்படப் பல பிரமுகர்கள் காணப்படுகின்றனர். (ச)

## தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் 33 பேர் கைது

கொழும்பு,பெப்.25

தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் இதுவரை 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாக பரப்புரை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஒன்பது வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. தேர்தலுக்காக போலி தகவல்கள் அடங்கிய வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை குறித்த மூன்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அவர் கூறினார். (ச)

## மூன்றாவது மாணவியின் உயிரை பறித்த பேஸ்புக்

கொழும்பு,பெப்.25

இலங்கையில் பேஸ்புக் பாவனையால் மற்றொரு மாணவி உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருணாகல், பொல் பித்திகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பேஸ்புக் சமூக வலைத்தள பயன்பாட்டால் மாணவியொருவர் உயிரை மாய்த்துக் கொண்ட மூன்றாவது சம்பவம் இதுவாகும்.

பொல்பித்திகம தேசிய பாடசாலை யில் கல்வி கற்றுவரும் 16 வயதான மாணவியே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி, பெறுபேறு வரும் வரையில் குறித்த மாணவி காத்திருந்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாணவி பேஸ்புக் மூலம் காதலனுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, மாணவி யின் தாய் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அதனால் தாயுடன் கோபித்துக் கொண்ட குறித்த மாணவி தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். (ச)

# அமெரிக்கத் தீர்மானத்தால் தெற்காசியாவுக்கே ஆபத்து

### வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை



கொழும்பு,பெப்.25

அமெரிக்காவின் தலையீடுகளால், தெற்காசியப் பிராந்தியத்துக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற நேற்றுமுன்தினம் செய்தி யாளர்களிடம் பேசிய போதேஅவர்இவ்வாறுகூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்கா இந்த தீர்மானத்தைப் பயன்படுத்தலாம். இலங்கையின் உள் விவகாரத்துக்குள், அமெரிக்காவின் இத் தலையீடு, தெற்காசிய பிராந்தியத்துக்குள் அமெரிக்கா தலையீடு செய்வதற்கான முதல் அடியாக, இருக்கலாம்.

ஐ.நா மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு தெற்காசிய நாடுகள் இடமளிக்கக் கூடாது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் குறித்து தெற்காசிய நாடுகள் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டும்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இராணுவத் தளமொன்றை அமைக்கும் நோக்கிலேயே இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவாவில் கொண்டு வர அமெரிக்கா முயற்சிக்கிறது.

திருகோணமலைத் துறைமுகம் மீது அமெரிக்கா நீண்ட காலமாகவே கண்வைத்துள்ளது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காக கோரியிருந்தது. எனினும், இந்தியாவின் எதிர்ப்பால் இலங்கை அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்து இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் தளமொன்றை அமைக்க அமெரிக்கா முனைகிறது.

இது தெற்காசியாவுக்கே ஆபத்தானது. இதுகுறித்து தெற்காசிய நாடுகள் அவதானமாக இருக்க வேண்டும்-என்றார்.(ச)

> இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் குறித்து தெற்காசிய நாடுகள் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டும்.

## பேஸ்புக் தொடர்பில் 250 முறைப்பாடு

கொழும்பு,பெப்.25

சமூக இணையத்தளமான பேஸ்புக் தொடர்பில் இதுவரையில் 250 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவமானப்படுத்தப்பட்டமை தொடர்பிலேயே அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினிப் பிரிவு ஆரம்பித்துள்ளது என்று அவர் கூறினார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பேஸ்புக் தொடர்பில் 250 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை கணனி அவசர அழைப்புப் பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரோஷான் சந்தரகுப்த தெரிவித்தார். (ச)



அஜித் ரோஹன

## நாற்பது வருடங்களின் பின் சுரங்கப் பாதை புனரமைப்பு

கொழும்பு,பெப்.25

லக்சபான நீர்த்தேக்கத்தில் இருந்து மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் சுரங்கப்பாதை 40 வருடங்களுக்குப் பின்னர் புனரமைக்கப்பட்டு வருகிறது.

லக்சபான நீர்த்தேகத்தின் நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணம் என்பவற்றில் உள் நாட்டு பொறியியலாளர்களின் பங்களிப்பு அதிகளவில் கிட்டியிருந்தது.

சுரங்கப்பாதையின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அடுத்தமாதம் 31 ஆம் திகதி நிறைவு செய் யப்பபடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)





அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி
சமேத நகுலேஸ்வர சுவாமி
திருக்கோயில்
திருக்கல்யாணம் 12 ஆம் நாள்
இன்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை

"கங்கையை, மூன்றாம்பிறையை முடியிலே சூடிய
எங்களீசன் இன்று திருக்கல்யாணக் கோலங்கொண்டு
மங்கையவர் நகுலாம்பிகையைக் கரம்பிடிக்க
மங்கலம் பொங்க வாழ்ந்திடுவோம் வாரீர் கீரிமலைக்கே!"

சிறுபரணை:
பன்னிரண்டாம் திருவிழா உபயகாரர்களும்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.
சி/12101(2-6-3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யாழ்.உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள்
முன்னிலையில் 27.01.2014
திங்கட்கிழமை அன்று அகில
இலங்கை சமாதான நீதிவானாகச்
சத்தியப்பிரமாணம் செய்து
கொண்ட எம் அன்புச் சகோதரன்
**ஆறுமுகம் ஜெயபாலசிங்கம்**
(வள்ளுவர் அக்கடமி இயக்குநர்)
அவர்கள் சமூக சேவையினை
சிறப்பாக ஆற்றி நற்பண்பாளனாய்
நல்மனிதனாய் இன்று போல் என்றும் எல்லா
வளமும் நலமும் பெற்று சிறப்புற்று வாழ
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
திருமதி நங்கம்மா ஆறுமுகம் குடும்பம், ஆறுமுகம் குணபாலசிங்கம் குடும்பம்,
ஆறுமுகம் நவபாலசிங்கம் குடும்பம், திருமதி விஜயகுமாரி சுந்தரலிங்கம் குடும்பம் (ஜேர்மனி),
ஆறுமுகம் விஜயபாலசிங்கம் குடும்பம் (லண்டன்), ஆறுமுகம் ராஜபாலசிங்கம் குடும்பம்.
கோவியன் தெரு. (45076)(4.6.3)

**துருக்கி**

Airport Cleaners 50பேர் தேவை.19 - 38 வயது வரை. இலங்கை ரூபாவில் 100,000இற்கு மேல் சம்பளம். உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம். அரசாங்க அனுமதிக் கட்டணம் மாத்திரம் அறவிடப்படும்.

தொடர்பு: 077 395 7291

**ஒட்டோ சாரதி தேவை**

நல்லூர்ப் பிரதேசசபைப் பகுதியில் வசிக்கும் C.P.Mசபையைச் சேர்ந்த குடும்பத்திற்கு ஓட்டோ சாரதி தேவை. வேதனம் பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு: 071 550 7109

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அரியாலை கண்டி வீதியில் (புங்கன்குளம் சந்திக்கு அருகில்) ஒரு பரப்பு 14 குழி காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:021 321 1393, 077 687 3150
(45070)(2.6.4)

**வீடும் கடைகளும் விற்பனைக்குண்டு**

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தியில் புதிதாக சீரமைத்த வீடு மேல் வீட்டில் 4 அறைகள், ஒரு குசினி, ஒரு கோல், கீழ் வீட்டில் ஒரு அலுவலக அறை, 2 அறை, ஒரு சமையலறையுடன் சகல வசதிகளும் கொண்ட வீடும், கீழே 7 கடைகளும் மேலே 5 கடைகளும் விற்பனைக்குள்ளன.

தொடர்பு:077 051 6251, 021 222 4854, 077 645 4434, 077 666 0690
(45085)(3.6.4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜெனிவா அரங்கம் திறக்கும் வரை காட்சிகள் பலப்பல வந்துபோகும்....

சக்தி மிக்க நாடுகளின் ஒத்துழைப்பு இன்றி, இலங்கை விடயத்தில் தலையிடுவதற்கு, ஐ.நா.வின் மனித உரிமைகள் சபைக்கு அதிகாரம் இல்லை. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒன்றேனும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்காவிடின் அது செல்லுபடியாகாது. அதன் நிறைவேற்று அதிகாரம் முடக்கப்பட்டு விடும்.

இவ்வாறு விளாசி உள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் பான் கீ- மூன் நினைத்தால் கூட, இலங்கை விவகாரத்தில் அவர் தலையிட முடியாது என்றும் -

எமது நாட்டில் இப்போது நிலவும் சுதந்திரம், ஜனநாயகம், சமஉரிமை என்பனவற்றைத் திசை திருப்பி, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷின் நிலைமைக்கு இலங்கையையும் கொண்டு வருவதற்கே அனைத்துலகம் முயற்சித்து வருகிறது. அதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்றும்-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் தகவல் வெளியிடும் போது அமைச்சர், ஏனையோரை விட வித்தியாசமான முறையில் மேற்கண்ட கருத்தை முன்வைத்தார்.

குறிப்பிட்ட ஊடகவியலாளர் மாநாடு, அடுத்த மாதம் நடைபெறவுள்ள மேற்கு மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலில் வாக்கு வாங்குவதற்கான பிரசார மேடை போன்றே அமைந்திருந்தது.

அந்த வகையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காராவும் தமது பங்குக்கு, திருகோணமலைத் துறைமுகத்தையும் அமெரிக்காவையும் சம்பந்தப்படுத்தித் தமது கருத்துக்களை வெளியிட்டார்.

இலங்கைக்குப் பாதகமாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற, அமெ ரிக்கா துடியாய்த் துடிப்பது, ஆசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவே. அதன்பால் பாதுகாப்பான ஒரு நாடு அதற்குத் தேவை-

ஏற்கெனவே, ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் பதவிக் காலத்தில் திருகோணமலைத் துறைமுகத்தை தன்வசப்படுத்திக் கொள்ள, அமெரிக்கா முயன்றது. ஆனால் அது கைகூடவில்லை; அதற்கு நாம், எமது நாடு இடம் தரவில்லை-

அந்தத் திட்டத்தை இப்போது, ஐ.நா.மூலம், அதன் மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் செயலாக்க முனைகிறது அமெரிக்கா. அந்த நாடு கொண்டு வரவுள்ள பிரேரணை, ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப் படுவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது என்றும் தெரிவித்தார் அமைச்சர்.

அதற்கு உதவும் வகையில், மாகாண சபைத் தேர்தலில்-இரண்டு மாகாணங்களிலும்-அரச தரப்பை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற யுக்தியையும் வெளிப்படுத்தினார் வாசுதேவ.

இந்தப் பிராந்தியத்தில்-இலங்கையின் அமைவிடத்தின் மீதான அக்கறையே அதன் மீது, அமெரிக்கா அழுத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்குப் பிரதான காரணம். அந்த அழுத்தங்களை தெற்காசிய நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும். அதனூடு, இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட உள்ள அமெரிக்காவின் பிரேரணையை தெற்காசிய நாடுகள் கவனமாக, ஊன்றிக் கருத்தில் எடுத்து முடிவு செய்ய வேண்டும்-

ஐக்கிய நாடுகள் சபையை, அமெரிக்கா தனது திட்டங்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துகிறது. அந்த வரிசையிலேயே இலங்கை விடயத்திலும் அது தலையிடுகிறது- என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா முழக்கம் செய்திருக்கிறார்.

தாம் சார்ந்திருக்கிற, அமைச்சர் பதவி வகிக்கும் அரசுக்குச் சாதகமாகவே கருத்துக் கூற வேண்டும், கருமம் ஆற்ற வேண்டும் என்ற கயிற்றைத் தாண்ட முடியாத நிலையில், வாசுதேவா இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கிறாரோ...?

எனினும், ஜெனிவா அரங்கும், அங்கு இடம் பெறவுள்ள அமர்க்களங்களும் எவ்வாறு அமையும் என்பது நாள் நெருங்கி வரும் போது தெரிந்துவிடும்.

# அரசின் தப்புக்கணக்கு

## இப்போது திணறிப் பயன் ஏதுமில்லை

கந்தவனம் கோணேஸ்வரன்

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடர் நெருங்கி வருகிறது. இலங்கைக்கு எதிரான பிரேரணையும் கொண்டு வரப்பட உள்ளது. ஏற்கெனவே இரண்டு தடவைகள் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான பொறுப்புக்கூறலுக்கு வலியுறுத்தப்பட்டிருந்தும் அவற்றை இலங்கை உதாசீனம் செய்துவிட்டது என்ற கருத்து உலகநாடுகளிடையே பரவலாகக் காணப்படுகின்றது.

எனவே மூன்றாவது தடவையாகக் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானம் கடுமையானதாகவும், இலங்கையைப் பணிய வைப்பதாகவும் அமைய வேண்டுமென அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய இரண்டு நாடுகளும் திட்டமிடுகின்றன. உலக ஒழுங்குகளைத் தீர்மானிக்கவல்ல நாடுகளுடன் இம்முறை இந்தியாவும் இணைந்து கொள்வது உறுதியாகி விட்டது. ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு எதிராக அமையவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவு தருவதென முடிவுசெய்திருக்கிறது. இம்முறை ஏறத்தாழ நாற்பது நாடுகள் தமது பிரேரணைக்கு ஆதரவளிக்கலாம் என அமெரிக்கா நம்புகிறது. ஆதரவு நாடுகளின் எண்ணிக்கை நாற்பதைத் தொடத்தவறினும் கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டு இலங்கைக்கெதிரான தீர்மானம் அதிக நாடுகளின் ஆதரவைப் பெறும் என்பது திண்ணம்.

### இலங்கை அரசின் சிந்தனை வேறு

இலங்கை அரசோ, வேறு விதமாகச் சிந்திக்கிறது. இந்தப் பொறியிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்ளலாம் என்பதன் அடிப்படையிலேயே தனது இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுவருகிறது. பொறுப்புக் கூறும் கடப்பாட்டை, இறைமை, சுதந்திர நாடு, உயர்ந்த நீதிக்கட்டமைப்பு என்பவை போன்ற வார்த்தைகளால் திசை திருப்பிவிட முயல்கிறது. சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் தனக்குத் துணையாக இருக்கும் போது, ஏனைய நாடுகளால் அப்படி என்னதான் செய்துவிட முடியும் என்பதைப் பார்ப்போம் என்ற தோரணையில் செயற்பட்டு வருகிறது.

ஜெனிவாவில் தனக்கெதிராகக் கொண்டு வரப்படுகின்ற நகர்வுகளையெல்லாம் உயர் அரசியல் மூலதனங்களாக மாற்றுவதில் இலங்கையின் ஆட்சியாளர்கள் வெற்றிபெற்றே வருகிறார்கள். இம்முறைகூட ஜெனிவாவின் நெருக்குதல்கள் தெற்கு, மேற்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் அரச கட்சியின் வெற்றிக்கான அடித்தளங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. ஜனாதிபதியின் செயற்றிறமை, இலங்கையின் அபார வளர்ச்சி ஆகியவற்றைக்கண்டு உலக நாடுகள் பொறாமைப்பட்டு இலங்கையின் கட்டமைப்பைச்சிதைக்க முயல்கின்றன, அதனை ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் என்ற பரப்புரைகளே அமைச்சர்களாலும் அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகையே எதிர்த்து நிற்கும் தைரியம் கொண்ட ஜனாதிபதிக்கு மக்கள் ஆதரவு தருவதுதான் நியாயம் என்ற மாயை தெற்கு, மேற்கு மாகாணங்களில் [illegible]ரப்பப்பட்டு வருகின்றது.

புலிகளுக்கெதிரான செயற்பாடுகளுக்கு மக்களிடம் ஆதரவு கேட்ட ஆளும் தரப்பினர் 2009க்குப் பின்னர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு எதிராக ஆரம்பித்து, இப்போது உலகநாடுகளின் அபிப்பிராயங்களை முறியடிக்க மக்கள் ஒன்றுசேர வேண்டும் என்று அறைகூவல் விடுத்து, அதில் உள்ள வெற்றிகளையும் அனுபவித்து வருகிறார்கள். இந்தப் பரப்புரைகளோ வெற்றிகளோ உலகஅரங்கில் இலங்கையின் நிலையைத் தீர்மானிக்கப் போவதில்லையெனினும், இவைதாம் அரசுக்கு உலக அரங்கில் வலுச்சேர்க்கும் காரணிகளெனச் சிங்களமக்களை அரசு நம்ப வைத்துக்கொண்டிருக்கிறது.

உலக அபிப்பிராயங்களுக்குக் கட்டுப்படாதவர் என்றும், இறைமையுள்ள நாட்டின் ஜனாதிபதி என்ற முறையிலும் தமது ஜனாதிபதி சிறப்பாகச் செயற்படுகிறார் என்றும் தென்னிலங்கையில் நம்பிக்கைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. தமிழர்கள் தலைநிமிராதபடி பார்த்துக்கொள்வதில் இவரைவிடச் சமர்த்தர் இலங்கைஅரசியலில் யாரும் இல்லை என்ற எண்ணமும் தென்னிலங்கை மக்களிடையே விதைக்கப்பட்டிருக்கிறது. தமிழர்களையே அடக்கி வைக்கும் ஜனாதிபதியின் பலத்துக்கு முன்னால் முஸ்லிம்கள் எம்மாத்திரம் என்ற அலட்சியப் பார்வையும் சிங்கள மக்களிடையே பரவத்தொடங்கியுள்ளது.

இம்முறை ஐ.நா. மன்றத் தீர்மானத்தை தனது இராஜதந்திர நகர்வுகள் மூலம் முறியடித்துவிட முடியுமென இலங்கைப் பேச்சாளர்கள் கூறிக்கொண்டாலும், உண்மை அவ்வாறிருக்கப்போவதில்லைஎன்பது இலங்கைக்குநன்றாகவே தெரியும். எனவே அமெரிக் காவின் முன்மொழிவை ஆதரிக்கும் நாடுகளின் எண்ணிக்கையைக் குறைத்து விடவும், தம்மீது இரக்க உணர்வொன்றை ஐ.நா மன்றத்தில் தோற்றுவிக்கவுமே இப்போது இலங்கை முயன்று வருகிறது.

### பௌத்த விகாரையில் பிரித் ஓதும் வைபவம்

இதற்கு முன்னோடியாக ஜெனிவா நகரத்திலுள்ள பௌத்த விகாரையில் தினமும் பிரித்தோதும் வைபவம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஜெனிவா அரங்கில் இலங்கையின் நியாயங்களுக்கு வெற்றிவாய்ப்புக் கிடைப்பதற்கான இறைவேண்டுதலாகவே இது அமைந்திருக்கிறது. இலங்கையிலிருந்து ஒரு லட்சம் கையெழுத்துகள் திரட்டப்பட்டு ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்கப் படுவதற்கான வேலைகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. இதற்கான தொடக்க நிகழ்வு வெல்லம்பிட்டியவில் இடம்பெற்றிருந்தது.

ஜனாதிபதியும் அமைச்சர்களும் தமக்கு ஆதரவுவேண்டி வெகுதீவிரமாக உலக நாடுகளை வலம்வரத் தொடங்கியிருக்கிறார்கள். முஸ்லிம்நாடுகளைக் கவர்ந்திழுப்பதற்கான உத்திகளும், ஆபிரிக்க நாடுகளை வசியம் செய்யும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இவற்றோடு சார்க் ஒன்றியத்தை தமது வலைக்குள் சிக்கவைக்கலாமா என்று இலங்கை அரசு யோசிக்கிறது. சார்க் நாடுகளில் இந்தியா. பாகிஸ்தான். மாலைதீவு அகிய நாடுகள் மனித உரிமைகள் விவகாரத்தில் வாக்களிக்கத்தக்க நாடுகளாக இருக்கின்றன. ஏற்கெனவே பாகிஸ்தான் இலங்கை பக்கமே நிற்கிறது. மாலைதீவும் இலங்கையுடன் நிற்கவே விரும்புகிறது. இந்த நிலையில் சார்க் நாடுகளின் ஒற்றுமை என்ற பெயரில் இந்தியாவை வளைத்து விடலாம் என்றுதான் இலங்கை முயல்கிறது.

### இந்தியாவைத் தம்பக்கம் இழுக்கும் தந்திரம்

இந்தியாவைத் தம்பக்கம் இழுப்பதில் இலங்கை வெற்றிகாணுமாயின், இலங்கையின் இராஜதந்திர நகர்வுகளுக்குக் கிடைக்கும் பெரிய வெற்றியாக அது அமையலாம். ஆனால் நடைமுறையில் இம்முயற்சிவெற்றிப்பெறப் போவதில்லை. மன்மோகன்சிங் அரசு மனதார விரும்பினாற்கூட, இலங்கைக்கு ஆதரவளிக்க முடியாத நிலையிலேயே இருக்கிறது. இலங்கையின் நல்லெண்ணத்தை விடத் தமிழ்நாட்டின் வாக்குவங்கியே காங்கிரஸ் கட்சிக்கு இன்று முக்கியம். இந்த நிலையில் தேர்தல் நெருங்கும் சந்தர்ப்பத்தில் ஒருபோதும் இந்திய, மத்திய ஆளுங்கட்சி தன்கையைச் சுட்டுக்கொள்ளும் முயற்சியில் இறங்கப்போவதில்லை. ஆனாலும், சீனா என்ற துருப்புச்சீட்டைப் பயன்படுத்தி இந்தியாவைப் பணியவைக்க முடியும் என்ற நம்பிக் கையை இலங்கை கைவிடுவதாக இல்லை.

இம்முறை தமிழர் தரப்பிலும் ஜெனிவாவுக்கான முன்நகர்வுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தமது செல்வாக்கை உச்சமாகப் பயன்படுத்தி வருகின்றன. இலங்கையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாயத்த வேலைகளுக்காகச் சென்றுள்ளது. ஜெனிவா மாநாடு நெருங்கும் சமயத்தில் இவர்கள் அங்கேயே நின்று பரப்புரைகள் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கலாம். ஜெனிவா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் நாடுகள் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்ற போதிலும், அதற்கு முன்னர் இடம்பெறும் கலந்துரை யாடல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின[illegible] பங்குபற்றித் தமது கருத்துகளைத் தெள[illegible]வாக முன்வைக்க முடியும் எனத் தமிழ் மக்கள் நம்புகிறார்கள். இவர்களுக்குத் துணையாகப் புலம்பெயர்தமிழர் அமைப்புகளும் நிற்கின்றன.

### தமிழர் பிரச்சினை உலக அரங்கில்

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர் முன்னெப்போதையும்விடத் தமிழர் பிரச்சினை வேகமாக உலகஅரங்கில் தலையெடுத்துள்ளது. தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்படல் வேண்டும் என்ற உணர்வு உலகநாடுகளிடையே காணப்படுகிறது. தமிழர்களுக்காகப் பேசவல்ல உரிமையை இலங்கை அரசாங்கம் உலகமட்டத்தில் இழந்து வெறுங்கையாக நிற்கிறது. அரசு என்ற உரிமையை வைத்துக்கொண்டுதான் அதன் நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன. அரசுக்கு நிகரான அந்தஸ்தை[illegible] சட்டரீதியாக அல்லாவிடினும், இயற்கை நியாயப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருக்கிறது.

இந்தக் காரணங்களால்தான் இலங்கை அரசாங்கத்திடம் வருகின்ற வெளிநாட்டு இராஜதந்திரிகள் எதிர்க்கட்சியைச் சந்திக்கிறார்களோ இல்லையோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையையும், வடக்குமாகாண முதலமைச்சரையும் தவறாது சந்தித்துப் பேச்சு நடத்துகிறார்கள். பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், மனித உரிமைகளுக்கான ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை ஆகிய உலகமட்டத் தலைவர்கள் வடபகுதியிலுள்ள சாதாரண பொதுமக்களையும் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிகிறார்கள். இது இராஜதந்திர ரீதியாக இலங்கை அரசுக்குக் கிடைத்த பெரிய பின்னடைவு ஆகும்.

### மனவலிமை மட்டுமே எஞ்சி உள்ளது

2009 அவலத்துக்கு முன்னர் தமிழர்களிடம் ஆயுதவலிமை இருந்தது. அதன் பின்னர் மனவலிமை மட்டும்தான் எஞ்சியிருந்தது. இலங்கை அரசாங்கம் நேர்மையாக நடந்துகொண்டிருக்குமானால், பிரச்சினை இவ்வளவுதூரம் பெரிதாக மாறுவதற்கு வாய்ப்பிருந்திருக்காது. தமிழர்களும் உலகமட்டத்தில் செயல்பட முடியாது போயிருக்கும். ஆனால், அரசாங்கம்தமிழர்களின் மனவலிமையை உணராது போட்ட தப்புக் கணக்குத்தான் இன்று இலங்கைக்கு இடையூறுகளை உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டு ஆயுத பலமும் முடக்கப்பட்டதால் தமிழர்கள் சோர்ந்து விடுவார்கள், தாம் நினைத்தபடி அவர்களை ஆட்டிவைக்கலாம்எனஎண்ணி அரசு நடந்து கொண்டதன் விளைவுகளைத் தாம் இப்போது அரசு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

# தடுப்பு மருந்தேற்றலால் கிடைக்கும் பாதுகாப்பு

## அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் அக்கறை தேவை

ஆ.ஜென்சன் றொனால்ட்,
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழி. நோய் வந்த பின் சிகிச்சை பெறுவதை விட, நோயை அணுகவிடாது முற்கூட்டியே பாதுகாப்பு தேடிக்கொள்வது புத்திசாலித்தனமானதாகும். எனவேதான் பெரும் சேதங்களை விளைவிக்கும் பல நோய்களுக்கெதிராக வருமுன்பே காக்கக் கூடியவகையில் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் தடுப்பு மருந்துகளை பொது மக்கள் சரியான முறையில் பயன்படுத்தி பயனடைவதற்கு அது பற்றிய தெளிவான அறிவு அவசியம் தேவைப்படுகிறது வெறுமனே "ஊசி போட்டது" அல்லது "மருந்து குடித்தேன்" என்று கூறுவது சரியான அறிவு நிலையாக இருக்காது.

ஒவ்வொரு மனிதனும் தனது உடம்பில் சிகிச்சைக்காகவோ, நோய்த் தடுப்புக்காகவோ ஏற்றப்படும் மருந்துகள் என்ன என்பதை அறிய உரிமையுடையவரே. எனவே, தடுப்பு மருந்தேற்றல் வெற்றிகரமாக நடைபெற்று நோய்களிலிருந்து சமூகம் பாதுகாப்புப் பெற அது பற்றிய தெளிவான அறிவு மக்களிடத்தே மேலோங்கி இருக்க வேண்டும். அப்படி இருக்கும் போதுதான் தடுப்பு மருந்தேற்றலுக்கான மக்கள் ஆதரவு கிடைத்து வெற்றிகரமாக அத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

தடுப்பு மருந்து ஏற்றலைத் தொடர்ந்து சில பக்கவிளைவுகள் ஏற்படலாம். அவை எவையென்று அறிந்திருப்பதோடு, அது பற்றி தடுப்பு மருந்து ஏற்றும் சுகாதார சேவையாளருக்கு உரியவேளையில் அறிவிப்பதும் மக்களின் பொறுப்பாகும்.

**தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு**

எட்வேட் ஜென்னர் என்பவரால் பெரியம்மை நோய்க்கு (Small pox) எதிராக செயற்படக் கூடிய தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்பட்டமை உலகின் மாபெரும் புரட்சி எனலாம். அதனைத்தொடர்ந்து பல நோய்களுக்கெதிரான தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வந்த பல நோய்கள் இந்த தடுப்பு மருந்துகளின் பாவனையால் உலகில் இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலே தற்போது நடைபெற்றுவரும் தடுப்பு மருந்தேற்றலின் வெற்றிகரமான விளைவால் பெரியம்மை (Small pox) நோய் முற்று முழுதாக இல்லாது செய்யப்பட்டதோடு, போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாத நோயை (Polimyelitis) இல்லாமற் செய்யும் நிலைமையை நாடு அண்மித்திருக்கிறது. அதாவது 1993 ஆம் ஆண்டின் பின் போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளி எவரும் இனங்காணப்பட்டு உறுதிப்படுத்தப்படவில்லை.

**தடுப்பு மருந்தேற்றும் திட்டம்**

உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் சுகாதார அமைச்சினூடாக 1978 ஆம் ஆண்டு முதல்Expanded Programme on Immunization நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**இலக்குகள்**

தேசிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டம், பின்வரும் பிரதான இலக்குகளை அடையும் நோக்கத்தைக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

1.போலியோ நோயை முற்றாக இல்லாது செய்தல்

2.றூபெல்லா, சின்னமுத்து, தொண்டைக் கரப்பன் மற்றும் சிசுக்களில் ஏற்படும் ஈர்ப்பு வலி போன்ற நோய்களையும் அதனால் ஏற்படும் இறப்புகளையும் மிக அரிதாக்குதல்.

3.ஈரல் அழற்சி (HepB) இனால் ஏற்படும் நோய்நிலை, மற்றும் இறப்பைக் குறைத்தல்

4.ஜப்பானிய மூளைக்காய்ச்சல் (Japanese Encephalitis) இனால் ஏற்படும் நோய் நிலை மற்றும் இறப்பைக் குறைத்தல்

5.ஹீமோபிலஸ் இன்புளுவன்சா (Haemophilias InfluenceB) வால் ஏற்படும் நோய் நிலை இறப்பைக் குறைத்தல்.

எனவே இந்த நோக்கங்களை மையமாக வைத்தும், ஏனைய தடுப்பு மருந்துகளால் தடுக்கப்படக்கூடிய நோய்களைத் தடுக்கவும், தடுப்பு மருந்தேற்றல் திட்டமுறை ஒன்று அமுல்படுத்தப்படுகிறது. இவை வைத்தியசாலைகளினூடாகவும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினூடாக அல்லது அவற்றின் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அமையங்களினூடாகவும் பயிற்றப்பட்ட சுகாதார உத்தியோகத்தர்களால் கைக்கொள்ளப்பட்டு வருகின்றமையாவரும்அறிந்ததே.

**தேசிய நிர்ப்பீடனமாக்கல் திட்ட அட்டவணை**

| காலம் | தடுப்பு மருந்து | குறிப்புகள் |
|---|---|---|
| பிறப்பிலிருந்து 2ஆம் மாதமுடிவில் | பென்ரா (DPT, HepB, Hid) OPV - முதல் முறை | DPT - தொண்டைக் கரப்பன், குக்கல், ஈர்ப்பு வலிக்கு எதிரான தடை மருந்து. OPV-போலியோவுக்கு எதிரான வாய் மூல தடுப்பு மருந்து HepB-ஈரலழர்ச்சிB க்கு எதிரான தடுப்பு மருந்து Hid -ஹீமோபிலஸ் இன்புளுவன்சாவுக்கு எதிரான தடுப்பு மருந்து. |
| 4 ஆம் மாத முடிவில் | பென்ரா (DPT, HepB, Hid) OPV.- இரண்டாம் முறை | |
| 6 ஆம் மாத முடிவில் | பென்ரா (DPT, HepB, Hid) OPV.- மூன்றாவது முறை | |
| 9 ஆம் மாத முடிவில் | JE | Japanese Encephalitis ஜாப்பானிய மூளைக் காய்ச்சலுக்கு எதிரான உயிர்ப்பான தடுப்பு மருந்து. |
| 12 ஆம் மாத முடிவில் | MMR-முதலாம் முறை | MMR- சின்னமுத்து, கூகைக்கட்டு, றூபெல்லாவுக்கு எதிரான தடுப்பு மருந்து. |
| 18 ஆம் மாத முடிவில் | DPT,OPV-நான்காவது முறை | |
| 3 வயது முடிவில் | MMR - இரண்டாம் முறை | |
| 5 வயது முடிவில் | DT,OPV-ஐந்தாவது முறை | |
| 12 வயது முடி வில் | aTd | aTd - வளர்ந்தோருக்கான ஈர்ப்பு வலி, தொண்டைக் கரப்பன் தடை மருந்து |
| குழந்தை பெறத் தகுதியான வயதான 15-44 வருடங்கள் | MMR - முன்னர் றூபெல்லா உடைய தடுப்பு மருந்து ஏற்றப் படாத பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும். | கர்ப்பமடைந்துள்ள நிலையில் இந்த தடுப்பு மருந்து வழங்கப்படக் கூடாது. |
| கர்ப்பிணிகள் | T.T - முதலாம் முறை (Tetanus Toxoid) | கர்ப்பமடைந்து 12 வாரத்தின் பின்னர் |
| | T.T - இரண்டாம் முறை | முதலாம் தடுப்பு மருந்தேற்றலிருந்து 6-8 வாரங்களின் பின்னர் |
| | T.T - மூன்றாம் முறை | இரண்டாம் கர்ப்ப காலத்தின் 12 வாரங்களின் பின். |
| | T.T - நான்காம் முறை | மூன்றாம் கர்ப்ப காலத்தின் 12 வாரங்களின் பின். |
| | T.T - ஐந்தாம் முறை | நான்காம் கர்ப்ப காலத்தின் 12 வாரங்களின் பின். |

**பின் விளைவுகள்**

ஒவ்வொரு தடுப்பு மருந்தேற்றலும் அட்டவணையில் காட்டப்பட்டபடி உரிய வயதில், சரியான பயிற்சி பெற்ற சுகாதார சேவையாளரால் சரியான விதத்தில் வழங்கப்படல் வேண்டும்.

தடுப்பு மருந்தேற்றலைத் தொடர்ந்து அதன் பின்னரான விரும்பத்தகாத பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இது Adverse Effects Following Immunization (AEFT)எனக் குறிப்பிடப் படுகின்றது.

இந்தAEFT ஆனது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சாதாரணமானதும், பாதிப்புக்கள் மிகக் குறைந்தனவாகவும் காணப்படும்.

உதாரணமாக 38.5°C (செல்சியஸ்) க்கு குறைவான காய்ச்சல், தடுப்பு மருந்தேற்றிய இடத்தில் நோவு, சிறிதான வீக்கம், சிவத்தல், தலை சுற்றுதல் - இவை தடுப்பு மருந்தினாலோ அல்லது அதனோடு தொடர்பற்றோ ஏற்படலாம்.

இவை தடுப்பு மருந்தால் பாதுகாக்கக்கூடிய நோயின் தாக்கத்துடன் ஒப்பிடுகையில் புறக்கணிக்கத் தக்கவையே.

எனினும் கடுமையான மூச்சுத் திணறல், 38.5°C (செல்சியஸ்)க்கு அதிகமான காய்ச்சல், மிகக் கடுமையான வலி, மருந்தேற்றிய இடத்தில் சீழ்க் கட்டிகள், கடுமையான ஒவ்வாமை நிலை என்பன காணப்படுமிடத்து அவை மிகக் கூர்மையாக கவனிக்கப்பட வேண்டியவை. இது புலன் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு காரணம் கண்டு பிடிக்கப்பட்டு மாற்றுச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை.

**AEFT அறிவிக்கப்பட வேண்டும்**

தடுப்பூசி / தடுப்பு மருந்து வழங்கப்படுதலின் பின்னரான விரும்பத் தகாத பக்க விளைவுகள் சாதாரணமானவையானாலும் சரி, கடுமையானவையானாலும் சரி, உடனடியாக தடுப்பு மருந்து வழங்கிய சுகாதார சேவையாளருக்கோ அல்லது அவர் சார்ந்த நிறுவனத்துக்கோ அது பற்றி தெளிவாக அறிவிக்க வேண்டியது பொது மக்களின் பொறுப்பாகும். ஏனெனில் இவற்றை விஞ்ஞான முறைப்படி ஆராய்வதனூடாகவே பிழையான நம்பிக்கைகளைத் தகர்க்கவும், தவறுகளைத் திருத்தி அமைத்து தடுப்பு மருந்தேற்றலை வெற்றிகரமாக முன்னெடுக்கவும் முடியும். இவ்வாறான மக்களின் அறிவு நிலை, பூரண ஒத்துழைப்பு என்பன மேம்பட்ட நிலையில் தடுப்பு மருந்தேற்றலினால் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும் என்பதே உண்மை.

---

## வாசகர் திருமுகம்

### பத்திரிகைகள் பக்கம் சார்ந்தவையா?

குடாநாட்டின் பிரபல பாடசாலைகளில் நிகழும் அதிபர் நியமனம் தொடர்பான முறைகேடுகளை விலாவாரியாக ஆராய்ந்து கட்டுரைகளாக வெளியிடும் குடாநாட்டுப் பத்திரிகைகள், வடமராட்சியின் பிரபல பாடசாலைகளில் நிகழும் முறைகேடுகளை ஏன் அக்குவேறு ஆணிவேராக ஆராய்ந்து வெளியிடுவதில்லை? கடந்த வருடம் வடமராட்சியிலுள்ள ஒரு பிரபல பாடசாலையில் நடந்த முறைகேடான அதிபர் நியமனமானது நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு வரை சென்று இன்றும் வழக்கு நிலுவையில் உள்ளது.

வேம்படி, யாழ்.இந்து என்பவற்றில் நிகழ்வது தான் முறைகேடுகளா? வடமராட்சியின் பிரபல பெண்கள் பாடசாலையில் முறைகேடுகள் நடந்தால் அது வெளிக்கொணரப்படக்கூடாதா? நீதியை நிலை நாட்டும் பத்திரிகைத் தர்மம் பரவலாக்கப்பட வேண்டும். முகத்துக்கு அஞ்சி உண்மைகளை வெளிக்கொணர்வதிலிருந்து பத்திரிகைகள் பின்வாங்கக் கூடாது.

யெரும்பாலான குடாநாட்டுப் பத்திரிகைகள் பக்கம் சார்ந்தவை என்றே எண்ணத் தோன்றுகிறது. உண்மைதானே?

*வடமராட்சியான்*

### மாநகரசபை கவனத்தில் கொள்ளுமா?


யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பொதுச்சந்தை மாலையிலும், இரவிலும் நாய்களின் படுக்கையிடமாக மாறியுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாநகர சபைக்குப் பலமுறை அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை இதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சின்னக்கடைச் சந்தையின் மரக்கறி வியாபாரிகளான நாம், சந்தை 2 மணியுடன் முடிவடையும்போது, எஞ்சும் மரக்கறி வகைகளை எமது பட்டறையில் பரப்பி வைத்துப் போவது வழமையாகும்.

ஆனால் சின்னக்கடைச் சந்தையின் இரண்டு கேற்றுக்களும் உடைந்து போய்க் காணப்படுவதால், அவற்றினூடாக உள்நுழையும் நாய்கள் எமது மரக்கறிப் பட்டறைகளில் படுப்பதுடன் மரக்கறிகளைச் சேதப்படுத்தியும், அசிங்கப்படுத்தியும் வருகின்றன. இதனைப் பல தடவைகள் யாழ். மாநகர சபைக்கும், சந்தைக் குத்தகைக் காரர்களுக்கும் தெரியப்படுத்தியும் இது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இனி மேலாவது மாநகரசபை இவ்விடயத்தில் கவனம் செலுத்துமா?

*சின்னக்கடை மரக்கறி வியாபாரிகள்*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: கடந்த இரண்டு தினங்களாக இருந்த அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள்.

**இடபம்**:எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய, சூழ்நிலை உருவாகும். சிலரின் நயவஞ்சகச் செயலை நினைத்து வருந்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள்.

**மிதுனம்**: கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**கடகம்**: கனிவாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள்.

**சிங்கம்**: அயல் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**கன்னி**: எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். புதிய வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**: அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. சொத்துப் பிரச்சினைக்குத் நல்ல தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை நம்பிச் சில பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**விருச்சிகம்**: நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வராது என்றிருந்த பணம் வரும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புதிய தொடர்புகள் கிடைக்கும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**தனுசு**: சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மகரம்**: விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுகத் தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**கும்பம்**: மற்றவர்களின் ரசனைக்கேற்ப உங்களின் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். வியாபாரத்தை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**மீனம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். சிலர் உங்களை நம்பிப் பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

## நாளை

**மாசி-14 புதன்கிழமை | 26.02.2014**

திதி: துவாதசி மு.இ.09.24 வரை
நட்சத்திரம்: துவாதசி மு.இ.09.24 வரை
சுபநேரம்: 04.59-06.29 வரை
இராகுகாலம்: 12.26-01.59 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### வேதங்கள் உபநிடதங்கள் பற்றிய கருத்து

வேதத்தில் காணப்படும் யாக குண்டமே கேத்திர கணிதத்தின் (geometry) பிறப்பிடம்.

ஒளிமயமான தேவர்களைத் தொழுது வேண்டுவது தான் வழிபாட்டின் அடிப்படை. இவ்வாறு தொழுது வேண்டினால், அது தொழுபவர்களுக்கும் தொழப்படுபவர்களுக்கும் பரஸ்பரம் உதவி செய்கிறது என்பதே கருத்து.

மந்திரங்கள்,புகழ்பாடுதல் மட்டுமன்றி; நேரிய உள்ளப் பண்புடன் கூறும்பொழுது அவை சக்தி வாய்ந்த மந்திரச் சொற்களாகும்.

அதிகப் புலனின்பமும் மிகுந்த சக்தியும் பெற்று வாழும் நிலையே சுவர்க்க லோகமாகும். உயர் நிலை பெற்ற உடல்களும் இந்த ஸ்தூல உடல்களைப் போலவே அழியும் தன்மையன.

இந்த உலகத்திலும் சரி, பிற உலகங்களிலும் சரி, எல்லா உடல்களுக்கும் மரணம் உண்டு. தேவர்களும் மரணத்துக்குரியவரே; அவர்களால் மகிழ்ச்சி மட்டுமே தரமுடியும்.

இந்த உடலுக்குப் பின், உணரவும் பார்க்கவும் வல்ல உயர்ந்த ஒருவர் இருப்பது போலத் தேவர்களுக்குப் பின்னணியாக ஒருவர் இருக்கிறார். அவரே கடவுள்.

உலகப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய சக்திகளும், எங்கும் நிறைதல், எல்லாம் அறிந்தவராயிருத்தல், எல்லாம் வல்லவராயிருத்தல் ஆகிய குணங்களும் உள்ளவரே தேவர்களுக்கும் தேவரான இறைவன்.

## மக்களைக் கவர்ந்திழுத்த டைனோசர்



கனடாவைச் சேர்ந்த நபர் ஒருவர் பனியில் அழகான டைனோசர் ஒன்றை உருவாக்கியுள்ளமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கனடாவின் எட்மாண்டன் பகுதியை சேர்ந்தவர் Christopher Cymbaluk.

இந்த ஆண்டு அதிகளவு பனி பொழிந்ததால் ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணித் தனது வீட்டின் பின் புறத்தில் இராட்சத சிற்பத்தைச் செதுக்க ஆரம்பித்தார். ஒரு பறக்கும் நாகத்தை உருவாக்க ஆரம்பித்ததாகவும் ஆனால் வேலையை ஆரம்பித்த பின்னர் அது ஒரு டைனோசர் உருவத்தில் மாறியதாகவும் தெரிவித்துள்ளார்.

சுமார் 10 மணிநேரத்தைச் செலவழித்து பனியைக் குவித்த பின், மீண்டும் 10 மணி நேரத்தைச் செலவழித்து மிகக் கவனமாக டைனோசரை உருவாக்கியுள்ளார்.

டைனோசரின் உடல் பனிக் கோட்டையை விட இரட்டிப்பு மடங்காக உள்ளது என்றும், அதன் உள்ளே இருவர் அமரக்கூடியவாறு அலுமாரிகள் மற்றும் ஸிசிம் மெழுகுவர்த்திகள் வைக்கப்பட்டு பொழுது போக்குக்கு ஒரு சிறந்த இடமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் புதிய புதிய உருவங்களைச் செதுக்க விரும்புவதாகவும், அடுத்த வருடம் ஓர் இராட்சதச் சிலந்தியைச் செதுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இதனைப் பார்வையிட ஏராளமான மக்கள் வருகை புரிந்ததாகவும் சிறுவர்கள் உள்ளே சென்று விளையாடி மகிழ்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 5 | 1 | 6 | | | | |
| | | 9 | | | | | | 6 |
| | 7 | | 9 | 8 | | 3 | | |
| | 9 | | | 1 | 5 | | 6 | 8 |
| 8 | | 1 | | 4 | | 2 | | |
| 6 | 4 | | 8 | 7 | | | 1 | |
| | | 8 | | 9 | 1 | | 3 | |
| 3 | | | | | | 9 | | |
| | | | | 5 | 6 | 8 | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 9 | 8 | 3 | 2 | 5 | 1 | 6 |
| 1 | 6 | 5 | 4 | 7 | 9 | 3 | 8 | 2 |
| 3 | 2 | 8 | 5 | 6 | 1 | 4 | 7 | 9 |
| 5 | 3 | 7 | 9 | 4 | 6 | 6 | 2 | 1 |
| 4 | 9 | 1 | 6 | 2 | 3 | 8 | 5 | 7 |
| 2 | 8 | 6 | 1 | 5 | 7 | 9 | 3 | 4 |
| 6 | 5 | 3 | 7 | 1 | 4 | 2 | 9 | 8 |
| 9 | 7 | 2 | 3 | 8 | 6 | 1 | 4 | 5 |
| 8 | 1 | 4 | 2 | 9 | 5 | 7 | 6 | 3 |

# ரைசெலா தவிட்டு அரிசி எண்ணெய் இலங்கையில் முதல்முறை அறிமுகம்




இலங்கையில் முதல் தடவையாக ரைசெலா (·icå¦B) தவிட்டு அரிசி எண்ணெய் ராஜகிரிய, நாவல வீதியில் அமைந்துள்ள ·சிற்றிஹெல்த் இம்போர்ட்ஸ் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் மூலம் வெகுவிரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. உலகின் மிக ஆரோக்கியமானசமையல்எண்ணெய்வகையாகஇதுகருதப்படுகிறது. இதில் விற்றமின்கள், அன்டிஒக்சிடன்ட்கள், போசாக்குகள் உள்ளடங்கியுள்ளதுடன், உடலுக்கு உதவாத கொழுப்பு இல்லை. மென்மையானது மற்றும் நறுமணமானது என்பவற்றுக்கு மேலாக, உடலின் கொழுப்பு அளவை குறைக்க உதவுவதுடன், நோய்களுக்கு எதிராக போராடவும், நோயெதிர்ப்பு சக்தியை ஏற்படுத்தவும், கிருமிகளுக்கு எதிராக போராடக்கூடிய மருத்துவ நலனை கொண்டுள்ளது.

ரைசெலா என்பது மிகவும் மென்மையானது. விரிவானது என்பதுடன், சுவையில் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. உணவு தயாரிக்கும் போது மற்றைய எண்ணெய் வகைகளை பயன்படுத்துவது போன்று இந்த எண்ணெய் வகையையும் பொறிக்கவும், பச்சடிகளில் பயன்படுத்தவும் முடியும். பேக்கிங், மற்றும் உங்கள் சகல உணவுத் தேவைகளுக்கும் பயன்படுத்தலாம். ஒரு முறை பயன்படுத்தி வித்தியாசத்தை அறிந்து கொள்ளுங்கள். ஆரோக்கியத்துக்கு மேலாக, விலை மிகவும் சாதாரணமானதாக அமைந்துள்ளது. ஒலிவ் எண்ணெய்யுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் சிக்கனமானதாக அமைந்துள்ளது.

தவிட்டு அரிசி எண்ணெய் என்பது மக்களால் நீண்டகாலமாக அறிந்திருக்கும் தயாரிப்பாக விளங்குகிறது. 50 ஆண்டுகளுக்கு மேலாக, தவிட்டு அரிசி எண்ணெய் ஜப்பான், கொரியா, சீனா, தாய்லாந்து மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உணவு தயாரிப்புக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. கொலஸ்ட்ரோலை குறைக்கும் சக்தியுடைய இந்த எண்ணெய் வகை ஜப்பானில் இதய எண்ணெய் என அழைக்கப்படுகிறது.

ரைசெலா தவிட்டு அரிசி எண்ணெய் மூலம் அவசியமான ஓரிசனோல் (300 மி.கிராம்) 2 மேசைக்கரண்டிகளிலிருந்து கிடைக்கிறது. ஓரிசனோல் என்பது தாவரங்களில் இயற்கையாகவே காணப்படும் போசாக்காகும். குறிப்பாக நெற்செடிகளில் காணப்படுகிறது. அரிசிக்கான விஞ்ஞான பெயராக ஓரிசா சடிவா அமைந்துள்ளது. இதிலிருந்து ஓரிசனோல் தனது பெயரை பெற்றுள்ளது. ஓரிசனோல் என்பது அதிசய போசாக்கு எனவும் அழைக்கப்படுகிறது. பொஸ்டன், டஃவ்ட்ஸ் பல்கலைக் கழகம் மற்றும் அமெரிக்காவின் மசச்சுசெட்ஸ் லொவெல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலம் முன்னெடுக்கப்பட்ட ஆய்விலிருந்து தவிட்டு அரிசி எண்ணெயில் காணப்படும் ஓரிசனோல் மூலமாக உடலில் காணப்படும் பாதகமான கொழுப்பு குறைக்கப்பட்டு, அவசியமான கொழுப்பை அதிகரிக்கிறது என்பது கண்டறியப்பட்டுள்ளது. மற்றும் இரப்பை புற்றுநோயை தடுக்கும் சக்தி ஒலிவ் எண்ணெயை விட இதில் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. (த)

## 2013 இல் டயலொக் நிறுவனத்தின் நிகர இலாபம் 5.2 பில்லியன் ரூபா

டயலொக் ஆக்சியாடா குழுமத்தின் 2013 நிதியாண்டின் நிகர இலாபம் 5.2 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த நிதியாண்டில் நிறுவனம் மொத்தமாக 63.3 பில்லியன் ரூபா வருமானத்தை பதிவு செய்திருந்தது. இதில் நிறுவனத்தின் டயலொக் ஆக்சியாடா பிஎல்சி, டயலொக் புரோட்பான்ட் நெற்வேர்க்ஸ் லிமிடெட், டயலொக் ரெலிவிஷன் லிமிடெட் ஆகியன பங்களிப்பை செலுத்தியிருந்தன. (த)

## ஹொல்சிம் லங்கா நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா

இலங்கையில் கட்டுமான தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான ஹொல்சிம் லங்கா லிமிடெட் (சூஷிஸிஸி); சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்களை அடையாளப்படுத்தும் வகையில் வருடாந்த ஊழியர் விருதுகள் வழங்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. ஹொல்சிம் நாட்காட்டியின் மிக முக்கிய நிகழ்வாக கருதப்படும் சுப்பிரி விருதுகள் வழங்கும் நிகழ்வில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு வெகுமதிகள் ழற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இந்த விருதுகள் நிகழ்வானது ஹொல்சிம் லங்கா ஊழியரிடையே மாத்திரமின்றி பொதுமக்கள் மத்தியிலும் மிக விசேட நிகழ்வாக கருதப்படுகிறது. ஹொல்சிம்(லங்கா) லிமிடெட்டின் நிறுவன அபிவிருத்தி மற்றும் ஈடுபாட்டு பிரிவின் முகாமையாளர் வெனுர பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில், ஹொல்சிம் லங்கா ஊழியர்களின் திறனை மேம்படுத்துவதற்காக தம்மை அர்ப்பணித்துள்ளது. பல தரப்பட்ட முயற்சிகளினூடாக நிறுவனத்தின் செயற்திறனை மேம்படுத்தும் நடவடிக்கையில் ஹொல்சிம் ஈடுபட்டு வருகிறது என தெரிவித்தார்.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் வணிக செயல்பாட்டிற்கு பங்கங்காற்றிவர்களை கௌரவப்படுத்தும் வகையில் அவர்களுக்கு பெறுமதியான வெளிநாட்டு சுற்றுலாக்கள், தங்க நாணயங்கள், கேடயங்கள், கிண்ணங்கள் மற்றும் பணப்பரிசில்கள் போன்றன வழங்கப்பட்டன. தொழிற்துறையில் முன்னணி அமைப்பாக உருவாகுவதற்கு மக்கள் மற்றும் சுப்பிரி விருதுகள் நிகழ்வில் முதலீடுகளை மேற்கொள்வதில் ஹொல்சிம் லங்கா நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்த நிகழ்வில் சுப்பிரி விருது(தங்கம், வெள்ளி, வெண்கலம்), மிகச்சிறந்த விற்பனை நபர் நாடளாவிய ரீதியில், சிறந்த பிராந்திய விற்பனை முகாமையாளர் விருது, சிறந்த பிரதேச விற்பனை அதிகாரி விருது, சிறந்த புதிய சிந்தனை விருது (தனிநபர் மற்றும் குழு பிரிவு), செயற்பாட்டு நட்சத்திர விருது (தனிநபர் மற்றும் குழு பிரிவு), பாதுகாப்பு விருது(தங்கம், வெள்ளி,வெண்கலம்), பசுமை விருது(தனிநபர் மற்றும் குழு பிரிவு) மற்றும் விசேட மெரிட் விருது (தனிநபர் மற்றும் குழு பிரிவு) போன்ற விருதுகள் வழங்கப்பட்டன. (த)

## மஹா சிவராத்திரி தினத்தன்று கொமர்ஷல் வங்கி திறந்திருக்கும்

எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கழமை மஹாசிவராத்திரி தினத்தன்று கொமர்ஷல் வங்கியின் 63 கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் வழமையான வர்த்தக நடவடிக்கைகளுக்காக திறந்திருக்கும் என்று வங்கி அறிவித்துள்ளது. இது அரச மற்றும் வங்கி விடுமுறை தினமாக உள்ள போதிலும் வாடிக்கையாளர் நலன் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்கியின் 26 சுப்பர் மார்க்கெட் வங்கி நிலையங்களும், 365 நாள்களும் பணிபுரியும் 20 நிலையங்களும் வழமை போல் அன்றைய தினத்தில் திறந்திருக்கும். ஏனைய 17 கிளைகள் குறிப்பிட்ட தினத்தில் காலை 9 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை திறந்திருக்கும்.

வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மஹரகமை, பொரளை, நுகேகொடை, நாரஹேன்பிட்ட, பத்தரமுல்லை, பஞ்சிகாவத்தை, யூனியன் பிளேஸ், வத்தளை, தெஹிவளை, கிரிபத்கொடை, அவிஸ்ஸாவெலை, பிலியந்தலை, வெளிநாட்டு பிரிவு மற்றும் பிரதான வீதி (கொழும்பு-01) ஆகிய கிளைகளே சிவராத்திரி தினத்தன்று திறந்திருக்கும் கிளைகளாகும்.

கொமர்ஷல் வங்கியே உலகில் உள்ள தலைசிறந்த ஆயிரம் வங்கிகளுள் தொடர்ந்து கடந்த மூன்று வருடங்களாக இடம் பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகும். கணனிகள் மூலம் தொடர்புபடுத்தப்பட்ட 235 கிளை மற்றும் சேவை நிலைய வலையமைப்போடு செயற்படும் இந்த வங்கி 585 ATM வலையமைப்பையும் கொண்டுள்ளது.

இதுவே நாட்டில் வங்கி ஒன்று கொண்டுள்ள தனிப்பெரும் புவீனி வலையமைப்பாகும். குளோபல் பினான்ஸ் சஞ்சிகையால் தொடர்ந்து 15 வருடங்களாக இலங்கையின் தலைசிறந்த வங்கியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர த பேங்கர், பினான்ஸ் ஏஸியா, யூரோமணி மற்றும் டிரேட் பினான்ஸ் சஞ்சிகைகளால் சிறந்த வங்கிக்கான பல விருதுகளையும் வென்றுள்ளது. (த)

## தினமும் கொத்துக் கொத்தாக உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?

**தலைமுடி உதிரும் அளவும், வளரும் அளவும் ஒன்றாக இருந்தால் பிரச்சினை இல்லை. இதற்கு மாறாக தலைமுடி உதிர்வது அதிகமாக இருந்தால் அதற்கான முக்கிய காரணம் விற்றமின் குறைபாடே**



இன்றைய இயந்திர வாழ்க்கையில் மக்கள் தங்களை தாங்கள் பராமரிக்க நேரமில்லாமல் அதிக பொறுப்புகளின் மத்தியில் இருப்பதால் அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றும் பணியிலேயே மும்முரமாக செயற்படுகின்றனர். நம்மில் எத்தனைபேர் தினமும் ஊட்டச்சத்தான உணவை உட்கொள்கின்றோம்? எமக்கு அன்றாடம் தேவைப்படும் ஊட்டச்சத்தின் அளவை சரியான உணவில் பெற்றுக் கொள்கின்றோமா? இல்லை. இதன் விளைவாக இள வயதில் பெண்களும் ஆண்களும் தலைமுடி உதிர்ந்து, தலைமுடி நரைத்து வயதான தோற்றத்துடன் காணப்படுகின்றனர். இதனால் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பற்பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். முக்கியமாக வேலைக்கு செல்லும் பெண்களை எடுத்துக் கொண்டால் காலையில் குளித்துவிட்டு பின்பு அவசர அவசரமாக ஹேயார் டிரையர் மூலமாக தங்களுடைய கூந்தலைக் காய வைத்து பின் வேலைத் தளத்தில் ஏசிக்குக் கீழே அமர்ந்து வேலை செய்வார்கள். இதனால் தலைமுடி தன்னுடைய முற்று முழுதான வலுவை இழக்கும் இடத்து அது தானாகவே உதிரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. நமது தலைமுடி இறந்த திசுக்களால் ஆன மெல்லிய உறுதியான ஒரு பாகம். இவை கெராட்டின் என்ற ஒரு வகை புரதத்தால் உருவானது.

தலைமுடியை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்

1. தோலுக்கு வெளியே
2. தோலுக்கு உள்ளே

தோலுக்கு வெளியே இருக்கும் பகுதியின் பெயர் தலைமுடித் தண்டு (Hair shaft). தோலுக்கு உள்ளே இருக்கும் பகுதியின் பெயர் கேசவேர் (Hair root). கேசத் தண்டில் மெடுலா (medula) என்னு[illegible] பகுதி, கார்டெக்ஸ் (cortex) எனும் வெளிப்பகுதி கேச வேர்களில் அடிப்பகுதி பெரிதாக இருக்[illegible] அதை கேசக் குமிழ் (Hair bulb) என்கிறோம். அது போலிக்கிள் (Hair follicle) என்ற பகுதியோடு இணைந்திருக்கும். போலிக்கிள் பகுதியில் உள்ள இரத்தக் குழாய்கள் வழியாக வளர்ச்சிக்கு தேவையான சத்துக்களை பெற்றுக் கொள்கிறது. தலைமுடி வேரோடு எண்ணெய்ச் சுரப்பிகள் உள்ளன. (Sebaceous Glands) இந்த எண்ணெய்ச் சுரப்பிகளில் இருந்து சுரக்கும் திரவம் கேசத்துக்கு மினுமினுப்பை தருகிறது. சுரப்பிகளுக்கு சரியான ஊட்டச் சத்தின் மூலம் விற்றமின்கள் கிடைக்காவிடில் தலைமுடி உதிர்ந்து நரைக்க ஆரம்பிக்கின்றன. தலைமுடியின் வளர்ச்சியில் 3 நிலைகள் உள்ளன. அவை வளரும் பருவம், இடைப் பருவம், ஓய்வுப் பருவம் ஆகும். வளரும் பருவத்தில் புதிய கேசம் உருவாகி வளர்ந்து வரும். அடுத்த பருவத்தில் வளரும் வேகம் குறையும். 3 ஆம் பருவத்தில் வளர்ச்சி நின்று உதிர்ந்து விடும். ஒரு தலைமுடியின் ஆயுள்காலம் முடிந்தவுடன் அது உதிர்ந்து விடும். அடுத்த பிற வேர்களில் இருந்து புதிய தலைமுடி வளரும். இவ்வாறு பழைய தலைமுடி உதிர்வதும் வளர்வதும் அன்றாடம் நடக்கும். உதிரும் அளவும் வளரும் அளவும் ஒன்றாக இருந்தால் பிரச்சினை இல்லை. இதற்கு மாறாக தலைமுடி உதிர்வது அதிகமாக இருந்தால் அதற்கான முக்கிய காரணம் விற்றமின் குறைபாடே. பெண்கள் தலை வாரும் போது 10-20 தலைமுடிகள் வருவது இயல்பான ஒன்று. கொத்துக் கொத்தாக உதிர்வது இயல்பை மீறிய ஒன்று. அதன் காரணங்களை ஆராய்ந்து சரி செய்யவேண்டும். தலைமுடி அதிகமாகன உதிர்வதற்கான முக்கிய காரணம் தலைமுடியின் வேர் கால்களுக்கு சரியான ஊட்டச் சத்தின்மையே. தலைமுடி நன்கு வளரவும், வேர்கள் உறுதியாக இருக்கவும், மேனி அழகைப் பாதுகாக்கவும் (Bionutra Formula) அடங்கிய Biotinexe, 13ஆண்டுகளாக மக்கள் நம்பிக்கையை வென்ற ஒரு தரம் வாய்ந்த தயாரிப்பாகும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும் சேமிப்புக் கணக்கின் உறுப்பினருமான

### தம்பித்துரை குணரத்தினம்

(உரிமையாளர்-குணம் வெற்றிலைக் கடை, சந்தை உட்புறம், சாவகச்சேரி)

அவர்கள் நேற்று (24.02.2014) காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

சாவகச்சேரி
கைத்தொழில் வணிகர் மன்றம்.

(சி/7651) (10.6.3)

## மனதை விட்டு நீங்காத பதின் நான்காம் ஆண்டில் மீளாத் துயருடன்

எம்முடன் 19 . 12 . 1944

இறைவனுடன் 01 . 03 . 2000



### அமரர் முருகேசு நடராஜலிங்கம்

(ஓய்வுபெற்ற இ.மி.ச.உத்தியோகத்தரும், "இந்திர தீபம்" உரிமையாளரும்)

திதி: அபரபக்க ஏகாதசி (25.02.2014)

*காலத்தை வென்ற காவிய நாயகனே!*
*பேரோடும் புகழோடும் வாழ்ந்த உத்தமனே!*
*காத்திருந்து அரவணைத்த கைகள்*
*காலமெல்லாம் எம்மை விட்டுப்பிரிந்ததேனோ?*
*ஆண்டுகள் நூறு வாழ்வீர்கள் என நாமிருக்க*
*இடைவழியில் உங்களைக் காலன் அழைத்தானோ?*
*எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும் பப்பா!*
*கண்ணீருடன் காத்திருப்போம் நீங்கள் மீண்டும்*
*எம்மிடம் வருவீர்களென........*
*இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக*

மணியகாரன் சந்தி,
தும்பளை,
பருத்தித்துறை.

என்றும் அன்புடன்
தி.பிருந்தயன்
தி.கபிசாயினி

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளை.

(45001)(45.6.3)

### விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.25

'முதலீட்டு வழிமுறைகள் மற்றும் வழிப் படுத்தல்கள்' தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கை கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் யாழ். கிளை, சண்டிலிப்பாய், பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்துகின்றது.

இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர்மன்றங்களின் அங்கத்தவர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதி மக்களும் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### பாம்பு தீண்டியது

சிறுவனைத் தீண்டியது பாம்பு.

கொடிகாமம் வடக்கில் ஞாயிறன்று பாம்பு தீண்டிய அதே இடத்தைச் சேர்ந்த சடாச்சரம் கஜந்தன் (வயது-15) என்ற அந்தச் சிறுவன் சாவகச்சேரிஆதார மருத்துவ மனையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டார். (ஒ-9)

## விற்பனைக்கு

தறித்த மகோற்கனி (மலைவேம்பு) 22 அடி நீளம் 12 அடி சுற்றளவு அரிந்து செல்லும் வசதியுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777 350 362

## வீடு விற்பனைக்கு

இல. 27/23 (11/1) முதலாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தில் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்) 1¼ பரப்புக்காணியில் 4 அறைகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 905 0213 கிங்ஸ்லி
077 356 3086

(45085)(4.6.3)

## 5ஆம் ஆண்டின் நினைவஞ்சலி

அமரர்

### அம்பலவாணர் பரமநாதன்

(பொறியியல் உதவியாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்)



தோற்றம் 03★03★1958

மறைவு 20★02★2009

திதி: அபரபக்க ஏகாதசி (25.02.2014)

அப்பா!
எழுதிச் செல்லும் விதியின்படி
நீங்கள் மறைந்து
ஐந்தாண்டுகள் முடிந்தது.
மாறவும் இல்லை, மறையவுமில்லை
உங்கள் நினைவுகள்
ஏகாதசி திதியில்
ஏகன் திருப்பாதம் கண்டீர்கள்
ஆனாலும் என்றென்றும் எங்களுக்கு
துணையிருங்கள் அப்பா

"திருவதிகை",
அளவெட்டி.


அன்புடன்
பிள்ளைகள்.

(45096)(2.6.3)

## நன்றி நவிலலும்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 13 . 05 . 1947



மறைவு 28 . 01 . 2014

அமரர்
வேலுப்பிள்ளை
வீரபத்திரபிள்ளை
(புற்றளை, புலோலி)

கடந்த 28.01.2014 சிவபதப்பேறடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் வேலுப்பிள்ளை வீரபத்திரபிள்ளை**

அவர்களின் அமரத்துவ செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோர், இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பத்திரிகைகளிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோர், துண்டுப் பிரசுரங்கள், மலர்வளையங்கள், அஞ்சலி திரைச்சீலைகள் (பனர்கள்) மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், இறுதி நிகழ்வின்போது அஞ்சலியுரையாற்றிய பெரியோர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.02.2014) புதன்கிழமை காலை 6.00 மணிக்குப் புற்றளை சித்திவிநாயகர் ஆலய அந்தியேட்டி மண்டபத்திலும், அதே நாள் சபிண்டீகரணக் கிரியைகள் காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:-**

எமது சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் அன்னார் மீது அன்பு கொண்ட அனைவரையும் தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியாதுள்ளதால் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"இந்திர பவனம்",
புற்றளை, புலோலி.
T.P: 021 226 4323

குடும்பத்தினர்

(CC/12576)(2.6.3)

## நானாட்டான் பிரதேச சபை,
## அட்டவணைப்படுத்தப்படாத
## பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2014

முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தினால் 01.01.2013 முதல் நானாட்டான் பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாக வும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் **NP/05/01/GE6/UNS/RQ** இலக்க 08.02.2013 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாகவும் கீழ்க்குறிப்பிடப் படும் பதவிவெற்றிடங்களை உரிய ஆளசேர்ப்புத் திட்டத்தின் கீழ் நிரப்பு வதற்காக தகைமை உடையவர்களிடம் இருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**

01. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதும் ஆகும்.
02. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள்,அனாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகாலதகுதிகாண் நிலையில் அமர்த்தப் படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்குமேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சிசேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்து டையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும் சிறந்ததேக ஆரோக்கியம் உடை யவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி நானாட்டான் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவை யாளரால் வழங்கப்பட்டவதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.)
05. தொழிநுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர் பான ஆழ்ந்த அறிவும், மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.
06. பிரதேசசபையில் கடமைபுரிபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**தெரிவுசெய்யப்படும் முறை**

அரசாங்க சேவை மாகாண ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப் பட்ட நேர்முகப் பரீட்சைசபையினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவ துடன் தகைமைகளும் பரிசீலிக்கப்படும். பரீட்சார்த்தி நேர்முகப்பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கமைய ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. நானாட்டான் பிரதேசசபையின் பிரதான அலுவலகத்தில் ரூபா 100 இனைச் செலுத்தி விண்ணப்பபடிவத்தை பெற்றுபூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
02. விண்ணப்படிவத்தில் உரியமுறையில் தேவையானதகவல்கள் பூரணப் படுத்தப்படாது இருப்பின் அத்தகையவிண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக்கையெழுத்தில் பூரணப் படுத்தப்பட்டு **செயலாளர், நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான்** என்ற முகவரிக்குபதிவுத்தபால மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
05. ஆள் சேர்ப்புத் திட்டவிதி முறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப் பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, பின்னராகவோ, முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய் யானது எனத் தெரியவரும் எச் சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராக ரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**விண்ணப்பமுடிவு திகதி :- 10.03.2014**

*பதவி வகை 1*

| *பதவி இல* | *பதவியும் தரமும்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 07 | காவலாளி | 02 |

**கல்வித்தகைமைகள்**

கல்விப் பொதுத்தராதரசாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மாதாந்தசம்பளஅளவுத்திட்டம்**

24.08.2007 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் **06/2006 (IV)** இற்கமைவாக மாதாந்த சம்பள அளவுத் திட்டம் **PL-1-2006 -A (11730-120x10-130x10-145x10-160x12-17600)**

**பிலிப்புப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
**செயலாளர்,**
**நானாட்டான் பிரதேச சபை,**
**மன்னார்.**

(C/12531)(2.6.3)


# நயினாதீவு 'பாதை' சேவை குறித்து முறையிடுகிறார் விகாராதிபதி

## *மறுக்கிறது வீதி அபிவிருத்தி அதிகார சபை*

குறிகாட்டுவான் - நயினாதீவுக் கான பாதைச் சேவையில் அடிக் கடி குளறுபடிகள் நடந்து வரு கின்றன என்று கூறப்பட்டது.

கடந்த சனிக்கிழமை நயினை ஸ்ரீநாக விகாரைக்கும் முருகன் கோயிலுக்கும் எடுத்து வரப் பட்ட பொருள்களை பாதையில் ஏற்ற மறுத்துவிட்டனர் என்றும் பாதைச் சேவையில் கடமை புரி வோர் தாங்கள் விரும்பியவாறு அதனைப் பயன்படுத்துகின்ற னர் என்றும் விகாராதிபதி தெரி வித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை தான் நினைத்தபடி பாதைச் சேவையை நடத்துவதாகவும் அதனால் நேற்றையதினம் பாதையில் ஏற்றிய வாகனம் ஒன்றை கொண்டு செல்ல விடா மல் தாங்கள் தடுத்து விட்ட தாகவும் குறிப்பிட்டார்.

பாதைச் சேவையை சீரான முறையில் நடத்தத் தவறினால் மறியல் போராட்டம் செய்வ தற்கு முடிவு செய்திருப்பதாக வும் விகாராதிபதி வண நவ தகல திஸ்ஸநாயக்க தேரர் தெரி வித்தார்.

இது தொடர்பாக வீதி அபிவி ருத்தி அதிகார சபை பொறியிய லாளருடன் தொடர்பு கொண்ட போது:

"பாதையில் மூன்று டிப்பர் வாகனங்களை ஏற்ற முடியாது என்றே கூறப்பட்டது. அப்படி ஏற்றும் பட்சத்தில் பாதை சேத மடைந்து விடும். பொருள்களை டிராக்டருக்கு மாற்றி ஏற்றுமாறு அவரிடம் தெரிவிக் கப்பட்டது. ஆனால் அவர் அதனை மறுத்து விட்டார். பொது மக்களுக்கு உரிய சேவையை வழங்க மறுக்கவில்லை. 'பாதை'க்கு சேதம் ஏற்படாத வகையில் எடுத் துவரும்பொருள்களைக்கொண்டு செல்வதில் எந்தத் தடையும் இல்லை" என்றார். (ஓ-7)

# தேசிய கலை இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.25

கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் மூலம் ஏற்பாடு செய் யப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிகள் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் நடத்தப்படவுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிக ளாக கட்டுரைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு) கவிதைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு), கவிதை பாடல் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பாலர் பிரிவு) , கையெழுத்துப் போட்டி (பாலர் பிரிவு), பாடல் நயத்தல் போட்டி (சிரேஷ்ட பிரிவு) என்ற வகையில் போட் டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் யாவும் பாட சாலை மாணவர்களுக்கு மட் டுமே உரித்தானதாகும். பாலர் பிரிவில் 6-10 வயது வரை யுள்ள மாணவர்களும், கனிஷ்ட பிரிவில் 11-15 வயது வரையுள்ள மாணவர்களும்சிரேஷ்ட பிரிவில் 16-19 வயது வரையுள்ள மாணவர்களுக்கும், 19 வய தின் மேல் திறந்த பிரிவிலும் பங்குபற்றலாம். கவிதை பாடல் போட்டி மற்றும் கையெழுத்துப் போட்டி என்பன பிரதேச செய லர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நிலையத்தில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படி வத்தை யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் பெற்று எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதிக்கு முன் னர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் 10 வய துக்கு மேற்பட்ட அனைத்து தனிநபர்களும் சுயமாக அல் லது பொது நிறுவனங்களான சனசமூக நிலையங்கள், கலா மன்றங்கள், கிராம அபிவிருத் திச் சங்கங்கள் மூலமாகப் பங்கு கொள்ளலாம். போட்டிகள் திறந்த போட்டிகளாக நடை பெறும். பாடல் ஆக்கப் போட்டி, நாட்டார் கலை, கற்றல் போட்டி, இலக்கிய விவரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி என்பன நடைபெறும்.

போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெறும் மூன்று பேருக் குப் புத்தகப் பொதிகளும், சான் றிதழ்களும் வழங்கப்படும். பிரதேச மட்டத்தில் தெரிவு செய் யப்படும் ஆக்கங்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்தப் போட்டிகளுக்கான பொது நிபந்தனை பற்றிய விவரங் களை அறிய யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் அறி விக்கப்பட்டுள்ளது. (ஓ)


## சேவைநலன் பாராட்டு விழா




**தம்பிஐயா மகேந்திரன்**

இருபத்திரண்டு ஆண்டுகளாய்
கைதடி நுணாவில்
கிராமத்தில் அரும்பணியாற்றி
அனைவர் மனங்களிலும்
உறைந்த மகேந்திரன் ஐயா வாழியவே!
தன்னடக்கம் அமைதி, நீதி, நேர்மை,
நியாயம் காத்து அதிகம் பேசாது
செயல் வீரனாகத் திகழும்
மகேந்திரன் ஐயா வாழியவே!
வாழ்த்துவோர்:
கைதடி நுணாவில் வாழ் மக்கள்.

மேற்படி விழா இன்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(45098)(3.6.4) -விழாக்குழு.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**தம்பிஐயா மகேந்திரன்**
கைதடி நுணாவில் கிராமத்தில் 8030 நாள்கள்
தனது திறமையான சேவையால் மக்கள் மனதில்
மங்காத இடம்பிடித்த
**மகேந்திரன் ஐயா** அவர்களை
பாராட்டுவிழாக் காணும் இந்நன்நாளில் வாழ்த்துவதோடு,
அவர்தம் சேவையையும், திறமையையும் பாராட்டி
மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை
தனியார் நிறுவனம் தனது அலுவலக நிர்வாக அதிகாரிகளில்
ஒருவராக நியமித்து வரவேற்பதில்
மிகமிக மகிழ்ச்சியடைகின்றோம்.
தங்கள் சேவை மேன்மேலும் வளர்ந்திட
எல்லாம்வல்ல நல்லூர் முருகனை
வேண்டி நிற்கின்றோம்.
மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்
மேக்ஸ் கிளினிங் சேவை நிறுவனம்
651/3, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.25
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமண்டபத்தில்நடைபெறவுள்ளது. (ஒ)

◆◆◆

யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## காதலியிடம் முத்தம் கேட்டவர் செலுத்தினார் தண்டம்

கொழும்பு, பெப்.25
காதலர் தினத்தன்று யுவதி ஒருவரிடம் முத்தம் கேட்ட இளைஞன் ஒருவன் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் 1500 ரூபாவை தண்டமாகச் செலுத்தியுள்ளார்.
வெள்ளவத்தையைச்சேர்ந்த யுவதி ஒருவர் தனது நண் பர்களுடன் காதலர் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி காலி முகத்திடலுக்குச் சென்றுள்ளார். அங்கு வந்திருந்த தெமட்ட கொடையைச் சேர்ந்த இனந்தெரியாத இளைஞன், தனக்கு முத்தம் கொடுக்குமாறு யுவதியிடம் நேருக்கு நேர் கேட்டுள்ளார்.
இதுதொடர்பில் குறித்த யுவதி கோட்டை பொலிஸ் நிலை யத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து தெமட்டக் கொடையைச்சேர்ந்த இளைஞனை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பொலி ஸார், பாலியல் தொந்தரவு குற் றச்சாட்டின் கீழ் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் திலின கமகே 1500 ரூபாவை தண்டமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (வ)

## கால்நடை வளர்ப்போருக்கு கருத்தரங்கு

வடமராட்சி, பெப்.25
கால்நடை வளர்ப்போருக்கான நன்முறைகளைப் புகட்டுதல் என்னும் தலைப்பில் கால்நடை வளர்ப்போருக்கான கருத்தரங்கு ஒன்று மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் வரவேற்புரையாற்ற, கால்நடை அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி சரோஜினி தேவி, புலோலி மேற்கு கிராம உத்தியோகத்தர் ஆர்.புலேந்திரன் ஆகியோர் முதன்மையுரைகளை நிகழ்த்துவார்கள்.
தொடர்ந்து கால்நடைகளைப் பராமரித்தல், கன்றுக் குட்டிகள் மற்றும் பால்மாடுகளைப் பராமரித்தல், இனப் பெருக்கம் என்னும் தலைப்பில் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சித்திரவடிவேலும், கால்நடை நோய்களிலிருந்து விடுபடலும் நோய்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் என்னும் தலைப்பில் டாக்டர் சகுந்தலாவும், கால்நடை வளர்ப் போருக்கு கிடைக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் என்னும் தலைப்பில் இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளரும் கருத்துரை வழங்குவார்கள். கால்நடை வளர்ப்போர்களுக்கும், கால்நடை வளர்க்க ஆர்வம் உள்ளவர்களுக்கும் உதவு முகமாக சதாவதானி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. (ஒ-173)

## 240 குளிர்பான போத்தல்கள் சிக்கின

மட்டக்களப்பு ,பெப்.25
மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி சுகாதார அலுவ லகப் பிரிவில் லேபல் இடப் படாத 240 குளிர்பான போத் தல்கள் சனிக்கிழமை கைப்பற் றப்பட்டன என்று மேற் பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம்.றபீக் தெரிவித் தார்.
இந்தக் குளிர்பான போத்தல்க ளில் ஆரம்பத் திகதி மற்றும் காலா வதியாகும் திகதி உள்ளடக்கிய லேபல் காணப்பட வில்லை என்று அவர் கூறினார். (ச)

## அரச நாடக விழா; விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப் .25
கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரச நாடக விழாவை முன்னிட்டு சிறுவர் நாடகம், குறு நாடகம் மற்றும் நெடும் நாடகப் போட்டிகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.
இது தொடர்பான விண்ணப்பங்களை எதிர் வரும் 15 ஆம் திகதி வரை யாழ். பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராமலிங்கம் இளையதம்பி**

தோற்றம் 16 . 10 . 1925
மறைவு 17 . 02 . 2012

ஆண்டுகள் இரண்டு ஆயிடினும் அன்பு முகம் மறக்கவில்லை
ஈன்று உங்கள் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்கள்! இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

118, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.
(45092)(3.5.4)

---

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **தி.சி. சண்முகலிங்கம்**
(இணுவில் கிழக்கு)



தோற்றம் 20 . 10 . 1937
மறைவு 13 . 02 . 1988

திதி: அபரபக்க ஏகாதசி 25.02.2014

பக்தி மணம் கமழும் பதியாம் இணுவையில் - நன்றே
திக்கு எங்கும் தம் சேவையால் புகழ் பரப்பி நின்றே
தக்கோராய் யாம் வாழ வழி பல யாத்து - என்றும்
மிக்கோராய் திகழ்ந்தீர்கள் மேதினியில் நாளும்.

கன்னல் சுவையாய் கனிந்த நம் வாழ்வில் - கொடிய
மின்னல் கதியில் தங்கள் பிரிவு தாக்கிற்று; எந்தையே
தன்னல சேவையின் தகைமை தம் பணி நிறுத்தி
விண்ணுலகம் மீண்டதுவோ விதியின் விழைவதால்

படைப்பாளியை இழந்த இலக்கியம் போல் யாம் ஆயினும்
மடை திறந்த வெள்ளமாய் அறிவு நிரப்பி எங்கும் யாம்
எடை போட இயலா ஏற்றமிகு சீருடன் திகழ்ந்த போதும்
உடையவன் இன்றி கணந்தோறும் துன்ப ஆழியில் துவழ்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்

"சுகந்தம்" இணுவில் கிழக்கு, இணுவில்.
அன்பான மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேர்த்தி, சுற்றத்தார்.
(45069)(10.6.3)

---

சித்தன்கேணியூர்
அமரர்
**கந்தையா சபாரட்ணம் (J.P)**
(முன்னாள் ஓவசியர், இறக்குவானை)



அவர்களின்
**100ஆவது பிறந்தநாள் நிகழ்வும் மாணவர்களுக்கான அறக்கொடை வழங்கலும்.**
**காலம்:** 25.02.2014 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி
**இடம்:** SUBRA கல்வி நிறுவன மண்டபம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு.கிழக்கு, சித்தன்கேணி. குடும்பத்தினர்.
(C/12575)(5.6.3)

---

## மரண அறிவித்தல்

### தம்பித்துரை குணரத்தினம்



[வெற்றிலை வியாபாரி, சாவகச்சேரி]

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோயில் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட தம்பித்துரை குணரத்தினம் 24.02.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை-பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ் சென்ற பொன்னுத்துரை மற்றும் அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், தாருகா (பிரான்ஸ்), டினோஜன் (கோபி), விதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஷின் அன்பு மாமனாரும், அக்ஷியாவின் அன்புப் பேரனும், சறோஜினி தேவி (கனடா), காலஞ்சென்ற பிரபாவதி மற்றும் சகுந்தலா, ஜெயரத்தினம், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.02.2014) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம், மட்டுவில் வீதி,
சாவகச்சேரி. 077 883 0073

தகவல் :
குடும்பத்தினர்.
(29771)(7.6.3)

---

# University of Jaffna,Srilanka

**PROCUREMENT NOTICE**
**HIRE/LEASE OF VEHICLES WITH FUEL**

Quotations are called for under mentioned unregistered or registered vehicles (either date of first registration should be not later than 05 years or date of manufacturing should be not later than 07 years from the date of tender) from owners or companies for hire/lease for one year on monthly payment basis. Successful bidders are required to supply fuel.

| Vehicle Type | Fuel Requirement | Qty |
|---|---|---|
| Passenger Van (14 or 15 seater) or more | Diesel (Dual A/C) | 01 |

A complete set of bidding documents may be purchased on or before 06.03.2014 by any bidder on submission of a written request to the Senior Assistant Registrar (Administration) and upon production of a receipt in respect of payment of a non refundable fee of Rs. 1000.00 to the Shroff of the University of Jaffna between 9.00 a.m. and 3.00 p.m. on any working day or Peoples Bank AC 162100160000880 Bidders may also examine the bidding documents free of charge.

Bid must be delivered or sent under registered post on or before 2.00 p.m. on 11.03.2014 and will be opened immediately thereafter. Bidder or his authorized representative (with a letter of authorization) is allowed to be present at the time of opening of bids. The tenders should be enclosed in a sealed envelope and marked as "Hire/Lease of Vehicles with fuel. Tender No. UJ/Admin/HV 2014" on the top left of the envelope. Tenders to be sent either by registered post to the Chairman, Procurement Committee, University of Jaffna, P.O Box 57, Jaffna or deposited in the tender box at the Registrar's Office of the University of Jaffna.

The selected vehicles will be utilized at the Faculty of Engineering situated at the Ariviyal Nagar, Kilinochchi.

Further details could be obtained from the Senior Assistant Registrar/Administration on telephone No. 021 222 6517.

Chairman
Procurement Committee
University of Jaffna
Jaffna
24.02.2014

(C/12583)(5.6.3)

## தீவக வீதிகளை புனரமைக்க மாகாண சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.25

ஊர்காவற்றுறை, நாரந்தனை, பெரியபுலம், சுருவில், வேலணை வீதிகளைப் புனரமைக்க மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் கே.விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

மாகாண சபை ரீதியில் மண்டைதீவு யாழ்ப்பாணம் பிரதான வீதிப் புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மண்டைதீவு பிரதான வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட வுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:

கடல் கடந்த தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளுக்கும் அடுத்த வாரத்தில் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவுடன் சென்று அங்குள்ள பாடசாலைகளின் குறைபாடுகள், தேவைகள் குறித்து பார்வையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (வ-7)

# கொக்குவிலில் கட்டி முடிக்கப்பட்ட சந்தையைத் திறக்கத் தாமதமேன்

### கேள்வியெழுப்புகின்றனர் மக்களும் வியாபாரிகளும்

> பல மில்லியன் ரூபா செலவில் காலத்துக்கு ஏற்றவாறு பல வசதிகளுடன் நவீனமான முறையில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டட வேலைகள் முடிவடைந்து தற் பொழுது இரு மாதங்களுக்கு மேலாகிவிட்டன.

வலி.தென்மேற்கு, பெப்.25

கொக்குவில் பொதுச்சந்தை பல மில்லியன் ரூபா செலவில் பல வசதிகளுடன் நவீனமான முறையில் கட்டி முடிக்கப்பட்ட நிலையிலும் தற்காலிகமாக அமைக்கப்பட்ட சிறிய இடத்தில் தொடர்ந்து இயங்கி வருகின்றது. இதனால் இங்கு வரும் பொதுமக்கள் மட்டுமல்ல வியாபாரிகளும் பெரும் சிரமங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர்.

நல்லூர் பிரதேச சபையின் கீழுள்ள கொக்குவில் பொதுச் சந்தை காங்கேசன்துறை வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் இயங்கி வருகின்றது. சிறிய கட்டடத்தில் இயங்கி வரும் மேற்படி சந்தையை அபிவிருத்தி செய்ய முன்வந்த நல்லூர் பிரதேச சபை அங்கு இயங்கி வந்த மீன் சந்தையை தற்காலிகமாக அமைக்கப்பட்ட சிறிய கட்டடத்திற்கு மாற்றிவிட்டு புதிய சந்தைக்கான கட்டட வேலைகளை ஆரம்பித்தது.

பல மில்லியன் ரூபா செலவில் காலத்துக்கு ஏற்றவாறு பல வசதிகளுடன் நவீனமான முறையில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டட வேலைகள் முடிவடைந்து தற்பொழுது இரு மாதங்களுக்கு மேலாகிவிட்டன.

இந்த நிலையில் சந்தை புதிய கட்டடத்துக்கு மாற்றப்படாமல் பழைய கட்டடத்திலேயே தொடர்ந்தும் இயங்கி வருவதால் அங்கு வரும்பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் ஒருவரோடு ஒருவர் முட்டிமோத வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள மக்கள் பாவனையாளர்களின் நலன்கருதி சந்தையை புதிய கட்டடத்துக்கு மாற்றுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (ஒ-115)

## வங்காலை ஆனாள் நகருக்கு குடிதண்ணீர் விநியோகம்

மன்னார், பெப்.25

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வங்காலை ஆனாள் நகர் கிராமத்துக்கான குடிதண்ணீர் இணைப்பு வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக இடம்பெற்றது.

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் இந்தக் கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் வழங்கி வைக்கப்பட்டதோடு விண்ணப்பித்த சில பயனாளிகளுக்கு . உள்ளக இணைப்புகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கிராமத்தில் உள்ள சுமார் 100 குடும்பங்கள் வரை உள்ளககுடிதண்ணீர் இணைப்புக்கென மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு விண்ணப்பித்துள்ளதாக சபையின் பொறுப்பதி காரி ரி.யசோதரன் தெரிவித்தார்.

ஆரம்ப நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலர் எஸ்.சந்திரையா, நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் அன்புராஜ் லெம்பேட், பிரதேச சபை உறுப்பினர் எம்.ஞானம் சோசை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறுப்பதிகாரி ரி.யசோதரன், வங்காலை பங்குத் தந்தை அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டு குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

சுமார் 100 குடும்பங்கள் விண்ணப்பித்துள்ள நிலையில் 25 குடும்பங்களுக்கு இணைப்புகள் வழங்கியுள்ளதாகவும் ஏனையவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (க-56)


நெல்லியடியில்....

கணினி உலகில் சிறுவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்

**GLOBAL METRO CAMPUS**

01.03.2014 இல் மாலுசந்தியில் ஆரம்பிக்கப்படவுள்ள சிறுவர்களுக்கான கணினி கற்கைநெறிக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (E-Kids learning 04 வயது தொடக்கம் 14 வயதுக்குட்பட்டவர்களுக்கானது)

இக் கற்கைநெறியுடன் அனைத்து வயதினர்களுக்குமான Spoken English with Grammar, சிங்களம், Music, ORGAN (INSTRUMENTAL)

ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கீழ்காணும் கிளைகளிலும் இக் கற்கைநெறிகளானது ஆரம்பிக்கப்படவுள்ளன.

உடுப்பிட்டி, புலோலி, பருத்தித்துறை,தம்பசிட்டி.

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்பட உள்ளமையினால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

**GLOBAL METRO CAMPUS**
No-169, Main Street, Malusanthy
T.P: 021 3200 500, 0766 838 717, 072 59 59 590
Email: campus_global@yahoo.com

(33381)(10.14)



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**ஆடு விற்பனைக்கு**

அழகிய ஜமுனாபாரி ஒரு வருடம் பூரத்தியான இரண்டு மறி ஆடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 7590496



**தவறிவிட்டது**

செல்வரத்தினம் சுதேஸ் 732313788V இலக்கம் கொண்ட தே.அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், இன்சூரன்ஸ், TAX, வங்கிப்புத்தகம் என்பன ஒரு கைப்பையுடன் மானிப்பாயில் 18.02.2014 அன்று தொலைந்துவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் : 077 0710870



**காணி விற்பனைக்கு**

நீர்வேலி அச்செழு போயிற்றியில் மாணிக்கப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 23 பரப்பு வாழைத்தோட்டம் விற்பனைக்குண்டு. தனிக் கிணறு மினசார வசதி உண்டு.

தொடர்பு : 077 9684186


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




குடும்பநல உதவியாளர்

திருமதி **வினாசித்தம்பி சுமதி** அவர்களது சேவை சிறக்க வாழ்த்துகின்றோம்

யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுள் யா/பிராந்திய சேவை பணிப்பாளர் பணிமனையின் தேர்வுக் குழுவினால் நடத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான வினைத்திறன் தகுதி காண் போட்டியில் யாழ். சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் J/101 நீராவியடி பிரிவின் குடும்பநல உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி வினாசித்தம்பி சுமதி முதன்மையானவராகத் தெரிவு செய்யப்பட்டமை குறித்து எமது மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். இவர் 36 குடும்பநல உதவியாளர்களுள் முதன்மையானவராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் இன்னும் மேன்மேலும் பல உயர்வுகள் பெற்றிட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : J/101 நீராவியடி வாழ் சமூகத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை அழகராசா

தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான செல்லத்துரை அழக ராசா (20.02.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-ஞானம்மா தம்பதியரின் மருமகனும், சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், ஜீவராஜ், மோகன்ராஜ், கவிதா, பத்மராஜ், ஜவினராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி, லோஜி, அருள் ராஜ், தனுஜா ஆகியோரின் மாமனும், அஞ்சலி, ஓவியா, ஒலிவியா, அஸ்மிதன், சபிதா, அஷ்வின், அவின், சஷ்விகன், சனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகேஸ்வரி, குணசிங்கம் (குணம்), காலஞ்சென்றவர்களான மனோன்மணி (யோகம்), இராசநாயகம் (மாணிக்கம்) மற்றும் அருளம்மா, வசந்தகுமாரி (பவானி) விமலாதேவி (கலா), பத்மலோயினி; (றஞ்சனா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாம்பசிவம், இராஜவ ரோதயம், வசந்தி, காலஞ்சென்ற சச்சிதானந்தம், மனோகரன், நவநீதன், ஜெக நாதன், பத்மராணி, செவ்வந்தி, நவரத்தினம், பாஸ்கரன், தேசிங்குராசா, சத்திய தாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2014) புதன்கிழமை சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9.30 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலாம் பிராய் பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்டிலிப்பாய் மத்தி,**
**சண்டிலிப்பாய்.**

(45100)
(10.14)

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 6965152**

## நல்லூர் பிரதேச சபை தார் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

எமது சபைக்குத் தேவையான 80/100 தரத்திலான தார் பரலை சபைக்கு விநியோகிப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றன.

**குறிப்பு:**

ஏற்றியிறக்கல் கூலி, வற் உட்பட 01 Ltr (ஒரு லீற்றர்) தாரினை நல்லூர் பிரதேச சபை களஞ்சியத்துக்குக் கொண்டு வந்து விநியோகிப்பதற்கான கூறுவிலையினை குறிப்பிட வேண்டும்.

மேற்படி கூறுவிலையைச் சமர்ப்பிக்க விரும்புவோர் தங்கள் கடித தலைப்பில் கூறுவிலையைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்ட உறையினுள் உள்ளடக்கி 10.03.2014 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"தலைவர் / செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தார் விநியோகிப்பதற்கான கூறுவிலை"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபையின் தலைமை அலுவல கத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. ப. வசந்தகுமார்,**
**தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.**

(அ/12585) (10.14)

# சூரியனை நோக்கிப் பறந்த தங்கச் செம்பு



சூரியனை நோக்கி நகர்ந்த மர்மமான தங்கச் செம்பு

கொழும்பு,பெப்.25

தேவநம்பிய தீஸ மன்னனின் ஆட்சிக் காலத்துக்கு முன்னர் அமைக்கப்பட்டதாகக் கருதப் படும் ஹொரவபொத் தானை - குருகல்ஹின்ன பிரதேசத்தில் உள்ள மயானம் ஒன்றுக்கு அருகில் இருந்து சூரியன் இருக் கும்திசை நோக்கி செம்பு போன்ற மர்மமான பொருளொன்று பறந்து சென்றுள்ளது.

மயானத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பஹல குடாப் பிட்டிய என்ற இடத்தில் தங்க நிறத்திலான செம்பு போன்ற ஒரு பொருள் காணப்பட்டுள் ளது.

அது சூரியன் இருக்கும் திசை நோக்கி பறந்து சென்றதை அந்த பிரதேசத்தை சேர்ந்த 14 வயதான கிருஷாந்த ஷாமல் பிரேமதிலக்க என்ற பாடசாலை மாணவன் தனது கையடக்கத் தொலை பேசி கமெராவில் படம் பிடித்துள்ளார்.

**வீதியில் நடந்து வரும் போது மின்னும் பொருள் ஒன்றைக் கண்டேன். அருகில் சென்று பார்க்கும் போது அது செம்பு வடிவத்தில் இருந்தது.**

இது குறித்து அந்த மாண வன் தெரிவித்ததாவது:-

நானும், அம்மாவும் அம்மம் மாவும் மாட்டு பட்டிக்கு சென் றோம். மாடுகள் பயந்து ஓடும் என்பதால் அம்மா என்னைத்திரும்பிப் போகுமாறு கூறினார்.

நான் வீதியில் நடந்து வரும் போது மின்னும் பொருள் ஒன்றைக் கண்டேன். அருகில் சென்று பார்க்கும் போது அது செம்பு வடிவத்தில் இருந்தது.

கையில் எடுக்க முயன்ற போது அது ஆடி ஆடி வானத்தை நோக்கிப் பறந்தது. அப்போது என் கையில் இருந்த எனது அப்பாவின் கையடக்கத் தொலை பேசி மூலம் அந்தப் பொரு ளைப் படம்பிடித்தேன்.

அதன் பின்னர் இந்தச் சம்பவம் குறித்து கிராம சேவகருக்கும், பிரதேச செயலர் அலுவலகத் தின் சுற்றாடல் அதிகாரிக்கும் தெரியப்படுத்தினேன். அவர் கள் வந்து பார்த்து விட்டு சென் றார்கள்-என்றான். (ச)

## தூண் விழுந்து கூரைகள் சேதம்

தென்மராட்சி, பெப்.25

முறிந்த தூண் வீட்டின் மீது வீழ்ந்ததில் வீட்டு கூரைத் தகடுகள் சேதமடைந்தன.

கடந்த சனிக்கிழமை மாலை வீதியின் குறுக்கே சென்ற தொலைபேசி இணைப்பு வயர் கள் கல் பறிக்க வந்த ரயிலின் மேற்பகுதியில் சிக்கியதில் 5 தூண்கள் முறிந்த நிலையில் காணப்பட்டன.

நேற்று முன்தினம் ஞாயிறு அவற்றை சீர் செய்யும் பணி யில் ஈடுபட்ட வேலையில் தொலைபேசி கம்பம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததில் கூரைத் தகடுகள் சேதமடைந்தன. சாவகச்சேரி ஆதார வைத் தியசாலைக்கு முன்பாக உள்ள கந்தையா வீதியிலே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (வ-9)

## தேர்தலில் வாக்களிக்க போக்குவரத்து வசதி

### *தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு*

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க வருகை தர முடியாத உடல் தகுதியீனமுடைய வாக்காளர் கள் விசேட போக்குவரத்துக் காக விண்ணப்பிக்க முடியும் என்று தேர்தல் கள் ஆணை யாளர் மஹிந்த தேசப் பிரிய வாக்கா ளர்களுக்கு அறி வுறுத்தியுள்ளார்.

இந்த போக்கு வரத்து வசதிக ளைப் பெற்றுக் கொள்ள விரும் பும் உடல் தகுதி யீனமுடைய வாக்காளர்கள் வாக்களிப்பு நடைபெறுவதற்கு 7 நாள்களுக்கு முன்னர் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும். போக்கு வரத்து வசதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவ டிக்கையை அவர்கள் மேற்கொள் வர் என்று தேர்தல்கள் ஆணை யாளர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட வாக்காளர் மாதிரி படிவமொன்றைத் தயாரித்து விண்ணப்பங்களை உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவ லருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (ச)

micro tec
Computer wholesaler
கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற Branded கணினிகள்...
Rs.13,000 Rs.16,500 Rs.17,000 Rs.15,000
For whole sale... Laptop: Rs. 15,000 - Rs. 40,000
I3,i5 Laptops are available here.
15"-Rs.3,600/- 17"-Rs.4,200/- 19"-Rs.5,200/-
PD, Piv, D.core, C2D, i3, and i5. computers Rs. 6,000 - Rs. 40,000
Samsung GALAXY Tab 3
Hot line : 0779120842
28.02.2014
No.170, Palaly Road, Kondavil East, Jaffna.

## இலங்கையர்களை பிரான்ஸுக்குள் கூட்டிச்செல்ல முயன்றவர் கைது

ருமேனியாவில் இருந்து 8 இலங்கையர்களை பிரான்ஸுக்கு சட்ட விரோதமாகக் கூட்டிச் செல்லமுற்பட்ட ருமேனிய சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

'செனல்' என்ற சுரங்கப் பாதையின் ஊடாக தமது பாரவூர் தியில் இந்த எட்டு பேரையும் அவர் பிரான்ஸுக்குக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளார். சுங்க அதிகாரிகளினால் அவரது பாரவூர்தி சோத னைக்கு உட்படுத்தப் பட்டபோது வாகனத்தில் மறைந்திருந்த இலங் கையர்கள் கண்டு பிடிக் கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது.

பிரான்ஸ் தலைநகர் பரிசிற்கு கொண்டு செல் லப்படும் பழம் மற்றும் மரக்கறி மூடை களுக்கு இடையேஅவர்கள் மறைந் திருந்து பயணித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

21 வயது முதலான இலங்கையர்கள் எட்டுப் பேரும் அரசியல் அந்தஸ் துக் கோரும்முகமாகவே இவ்வாறு பிரான்ஸ் செல்ல முற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். இதனிடையே, கைது செய்யப்பட்ட ருமேனிய சாரதிக்கு எட்டு மாதச் சிறைத் தண் டனை வழங்கப்பட்டுள் ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (வ)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 08 . 1938 | 13 . 03 . 1999 |



### சின்னக்குட்டி வேலுப்பிள்ளை

திதி : அபரபக்கஏகாதசி

பதினைந்து ஆண்டுகள் பறந்து சென்ற போதும்
பாசங்கள் ஒரு போதும் நீங்காது அப்பா
பாரினிலே நாம் இன்று பலமாக வாழ வழிவகுத்தீர்
பாலனவன் குருநாதர் நற்பாதம் சேர வேண்டுகின்றோம்

மீசாலை வடக்கு கொடிகாமம் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் குமாரசாமி



காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த சிவபாக்கியம் குமாரசாமி நேற்று முன்தினம் (23.02.2014) ஞாயிற்றுக்கிழமை புட்டப்பர்த்தி இந்தியாவில் காலமானார்.

அன்னார் காரைநகர் இடைப் பிட்டியை சேர்ந்த வைத்திலிங்கம் இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், மொந்திபுலம் வலந்தலை காரைநகரை சேர்ந்த நமசிவாயம் சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் குமாரசாமியின் அன்பு மனைவியும் ராசுசுலோசனா, விக்கி னேஸ்வரன்,விக்கினராசா, கௌரி அம்பாள், பவாதாரணி, ஞான பூசனி ஆகியோரின் அன்புத்தாயும் தேவநாயகி, பாலமயூரன், சண்டேஸ்வரன், சோதிலிங்கம், பேரின்ப ராணி ஆகியோரின் மாமியும் சாயினி, சிவகுமார், சிவசக்தி, சாரண்யா, துவாரகா, சாயிசங்கர், சாயிகணேஷ், சிவகாமி, சாயிதா, சாயிசரண் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.02.2014) புதன்கிழமை புட்டப்பர்த்தியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல் : பிள்ளைகள்

இந்தியா - 0091855528834O,
லண்டன் - 00440798399442O

## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.

## அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்.

மேற்படிவிடயம் தொடர்பாக எம்மால் 01.02.2014ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கு மேலதிகமாக அவ்விளம்பரத்தில் அறிவுறுத்தப்பட்ட அதே சேவை நிபந்தனைகள், அடிப்படைத் தகைமைகள், தெரிவுசெய்யப்படும் முறை, விண்ணப்பிக்கும் முறை என்பவற்றின் அடிப்படையில் மேலதிகமாக பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிப்பெயர் | தரம் |
|---|---|---|
| 08. | காவலாளி | III |

சம்பள அளவுத் திட்டம் :PL1-2006A (11,730-10X120-10X130-10X145-12X160-17,600)

மேற் குறித்த பதவிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.

01. கல்விப் பொதுத்தராதர சாதரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை வவுனியா வடக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ரூபா 100.00 செலுத்தி பெற்று விண்ணப்பதாரியால் தமது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 07.03.2014ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக தகவல்களை வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சீ.மனோகரன்,**
**செயலாளர்,**
**வவுனியாவடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**

(சி/12586)
(10.14)

## மரண அறிவித்தல்



### முருகேசு ஆறுமுகம்

(SAS லொறி உரிமையாளர்)

யாழ். மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஆறு முகம் கடந்த (22.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - ஆச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், அருந்ததேவி, பாலசுப்பிரமணியம், பரராஜசிங்கம் காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

# அரபுலக ஆதரவை தக்கவைக்க அரசின் உத்தரவாதம் அவசியம்

## *ஜெனிவா குறித்து அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு*

முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது அண்மைக்காலமாக மேற் கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை தடுத்து நிறுத்த அரசு உத்தரவாதம் வழங்கினால் மாத்திரமே ஜெனீவாவில் தொடர்ந்தும் அரபு நாடுகளின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் ஹக்கீம் நேற்று சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, இலங்கைக்கு எதிரான பிரேரணை விவகாரத்தில் மேற்குலகம் காட்டும் தீவிரம், சிறுபான்மைச் சமூகங்களுக்கான நியாயமான அதிகாரப்பகிர்வுக்கான ஒரு பேரம்பேசும் உபாயமாகவே தான் கருதுகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் உதயனுக்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையில் போரின் பின்னர் சிறுபான்மைச் சமூகத்தவரின் வழிபாட்டுத்தலங்கள் மீதான தாக்குதல்கள் அடிக்கடி நடந்துவருகின்றன. இது குறித்த அவதானத்தை முஸ்லிம் காங்கிரஸ் அநியாயமாக காட்டிக்கொடுத்து விட்டது என சிலர் கூறமுற்படுகின்றனர்.

மொத்தத்தில் இந்த விடயத்தைக் கட்டுப்படுத்த தவறியதன் மூலம் வலிந்து சிக்கலில் மாட்டிக்கொண்ட நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் சம்பவங்கள், வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் போன்ற சம்பவங்களை நாங்களாக முஸ்லிம் நாடுகளிடம் முறையிட்டு தீர்மானம் எடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அந்த நாட்டுப் பத்திரிகைகளில் இங்கு இடம்பெறும் சம்பவங்கள் செய்திகளாகவும் விமர்சனக் கட்டுரைகளாகவும் வெளி வருகின்றன.

கடந்தமுறை ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளில் அரைவாசிக்கும் மேலான நாடுகள் முஸ்லிம் நாடுகளாக இருந்தன. தொடர்ந்தும் அந்த நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டுமாக இருந்தால் அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் இந்தச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் என்று அரச தரப்பில் உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும். அதன் மூலமே இது சாத்தியமாகும்.

இராஜதந்திர ரீதியாக சவூதி அரேபியா, குவைத், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகள் அமெரிக்காவுக்கு நெருக்கமான நாடுகளாக இருந்தபோதும்கூட போர்க்குற்ற விசாரணைகள் சம்பந்தமாக இலங்கை அரசின் மீது தனிப்பட்ட ரீதியில் பிரேரணை கொண்டுவருவதை எதிர்த்தமை இலங்கையைப் பொறுத்த மட்டில் இராஜதந்திர வெற்றியாகவே கருதப்பட்டது.

இம்முறையும் இலங்கை அரசு உரியமுறையில் இந்த நாடுகளை அணுகி, அவர்களைத் திருப்திகரமாக கையாள முடியும். இஸ்லாமிய நாடு களின் ஒத்துழைப்பு ஒன்றியம் என்ற அமைப்பின் செயலாளர் நாயகம் இலங்கை அரசுக்கு கடந்த வருடம் உத்தியோக பூர்வமாக இங்கு நடை பெறும் சில சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவது தொடர்பாககடிதம் எழுதியிருந்தமையும் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் - என்றார்.

போர்க்குற்ற விசாரணை குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், நீதி அமைச்சர் என்ற வகையில் உங்களுடைய கருத்து என்ன? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

இது தொடர்பான சர்வதேச நியதிக ளின் பிரகாரம்கூட நம்பகமான உள்ளக பொறி முறை அமைக்கப்படுவதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. - எனத் தெரிவித்தார். (சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்

முறையில் உயிரிழந்த நிலையில் கோபிராஜின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் பிரஜையான இவர் 2007 ஆம் ஆண்டு கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக இலங்கைக்கு வரும் போது கைது செய்யப்பட்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பிரிட்டனில் நிதி சேகரித்தார் என்று குற்றம்சாட்டியே இவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர், 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிறைச்சாலையினுள் ஏற்பட்ட கலவரம் காரணமாக படுகாயமடைந்திருந்தார். அதன் பின்னரே மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

கோபிராஜின் உறவினர்களுக்கு நேற்று மாலை அவரின் சடலத்தைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கோபிராஜின் தந்தை 'உதயனுக்குத்' தெரிவிக்கையில், மகனின் சடலைத்தை பார்வையிட்டதாகவும், உடம்பில் காயங்கள் எதுவும் தனக்குத் தெரியவில்லை என்றும் கூறினார்.

அத்துடன் மலசலகூடத்தில் தவறி வீழ்ந்து உயிரிழந்ததாகவே பொலிஸார் தனக்குத் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

கோபிராஜின் குடும்பம் பிரிட்டனில் வசித்து வருவதால் அவரது உடலை அங்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பான நடவடிக்கைகளை இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதரக அதிகாரிகளே நேரடியாக மேற்கொண்டுள்ளனர். (த-5)

### விபத்தில்

மடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-402- 400)

### வெடிபொருள்

தொடர்ந்தனர். பிரதான நபராகக் குறிப்பிடப்படும் குறித்த சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார். பொலிஸாராலும் அவரைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் சட்டத்தரணி ஒருவர் மூலமாகப் பிரதான சந்தேகநபர் எனக் குறிப் பிடப்படும் யாழ். குருநகரைச் சேர்ந்த ஒருவர் பொலிஸில் நேற்றுச் சரணடைந்தார்.

வன்னியிலிருந்து கொண்டு வரப்பட்ட சி-4 வகையைச் சேர்ந்த 16 கிலோகிராம் வெடிமருந்தும், ரி. என். ரி வகையைச் சேர்ந்த 56 கிலோகிராம் வெடிமருந்தும் என மொத்தம் 72 கிலோகிராம் வெடிமருந்து கொழும்புத்துறையில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதோடு அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆபத்து மிக்க இந்த வெடி பொருள்களை வன்னியிலிருந்து எடுத்து வந்ததாக ஆரம்ப விசாரணைகளில் சந்தேக நபர்களால் தெரிவிக்கப்பட்டது. அது எவ்வாறு அவர்களுக்குக் கிடைத்தது என்பது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### நேற்றும்

நேற்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மன்னார் - திருக்கேதீஸ்வரம் கோயிலுக்குச் செல்லும் பிரதான வீதியில் கடந்த டிசம்பர் மாதம் கண்டு பிடிக்கப்பட்ட இந்த பெரும் மனிதப் புதைகுழி நேற்று மன்னார் நீதிவான், விசேட நிபுணர் குழுவினர் மற்றும் பொலிஸார் முன்னிலையில் மீண்டும் தோண்டப்பட்டது.

காலை 8.30 மணியிலிருந்து மாலை 3.30 மணி வரை குறித்த புதைகுழியில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றபோது அதிலிருந்து 2 முழுமையான எலும்புக் கூடுகள் மீட்கப் பட்டுள்ளன.

இந்தப் புதைகுழியி லிருந்து ஏற்கனவே மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் மேலும் 11 எலும்புக்கூடுகள் நேற்று பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. இதுவரையில் 80 மனித எலும்புக்கூடுகள் இவ்வாறு மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த மனிதப் புதைகுழி மீளவும் எதிர்வரும் 3 ஆம் திகதி தோண்டப்படும் என்று மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் தெரிவித்தார். மஹா சிவராத்திரியையொட்டி திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை முன்னிட்டே குறித்த புதைகுழியின் அகழ்வுப்பணிகள் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-56)

### 29 இந்திய

யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவர்கள் இராமநாதபுரம் மற்றும் நாகைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 7 படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

### ஜெனிவா

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்வது தொடர்பிலும், அங்கு சமர்ப்பிக்கப்படும் பிரேரணை தொடர்பிலும் ஆராய்வதற்காகக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது. அத்துடன் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள், இதற்காக அமைக்கப்படவுள்ள குழு தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இதனைவிட இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் தொடர்பிலும், இது தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பிலும் மேற்படி கலந்துரையாடலில் விவாதிக்கப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர்.

வவுனியாவில் கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற கலந்துரையாடலில் தொடர்ச்சியாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (த-5)

### பயங்கரவாத

பகுதியில் முகமாலையில் முன்னரங்கப் பாதுகாப்பு வயைத்தில் வாகனச் சாரதியாக இருந்தார் என்றும், 2006-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலி உறுப்பினராக இருந்து 40 உறுப்பினர்களுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டார் என்றும், 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினராக இருந்து கொண்டு வன்னேரிக்குளத்திலிருந்து பாண்டிவெட்டுக்குளம் வரை முன் பாதுகாப்பு வலயப் பொறுப்பாளராக இருந்தார் என்றும் மூன்று குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தன.

2012ஆம் ஆண்டு இந்த வழக்கு யாழ். மேல்நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. மேல்நீதிமன்றில் இது தொடர்பான விசாரணை இடம்பெற்றது. இதன்போதே அவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டது. அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரமும் இல்லாததனால் அவர் மன்றினால் விடுதலை செய்யப்பட்டார். (த-4)

### வடக்குக்கு

வருடம் டிசெம்பர் மாதம் மாடுகளில் கால்வாய் நோய் இனங்காணப்பட்டது. பலாலியில் இந்த நோய் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து தடுப்பு மருந்துகள் வடக்கின் சகல மாவட்டங்களிலும் நல்லின மாடுகளுக்கு வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் 60 ஆயிரம் மாடுகளுக்கும், வவுனியாவில் 40 ஆயிரம் மாடுகளுக்கும், ஏனைய மூன்று மாவட்டங்களிலும் தலா 10 ஆயிரம் மாடுகளுக்கும் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டன.

இருப்பினும் இந்த நோய்த் தாக்கம் இன்னமும் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை என்று தெரிவித்த வசீகரன், ஒரு சில பிரதேச மக்களின் ஒத்துழைப்பின்மையால் இதை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவித்தார்.

**பொருளாதார ரீதியில் தாக்கம்**

நோய்த் தொற்றுக்கு இலக்காகும் 100 மாடுகளில் 3 மாடுகளே இறக்கும். ஆனால், இந்த நோய் ஏற்பட்டால் அது பொருளாதார ரீதியில் கடும் தாக்கத்தை செலுத்தும். மாடு பால் கறக்காது என்பதுடன் அந்த மாட்டை இறைச்சிக்காக வெட்டவும் முடியாது. இதனால் பொருளாதார ரீதியான தாக்கம் ஏற்படும்.

தற்போது வடக்கு மாகாணத்தில் பரவியுள்ள இந்த நோய்த் தாக்கம் ஏனைய மாகாணங்களுக்குப் பரவாமல் இருப்பதற்கும், வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்து மற்றைய மாவட்டங்களுக்குப் பரவாமல் தடுப்பதற்கும் மாடுகள் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**இறைச்சிக்குத் தடை**

அத்துடன் வவுனியா மாவட்டத்திலும், முல்லைத்தீவின் ஒட்டிசுட்டான் பிரதேசத்திலும், யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பழை, கோப்பாய், வட்டுக் கோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் வசீகரன் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக ஒரு மாத காலத்துக்கு நோய்த் தாக்கம் தொடர்பில் அவதானிக்கப்பட்டு அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டால் மேற்படி தடை நீக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (த-5)

### மத்திய

உயர் நீதிமன்றம் நேற்று ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின்; குற்றவாளிகளான சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரொபேர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேரையும் விடுவிக்கத் தமிழக அரசு கடந்த 19 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இதற்கு எதிராகக் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. இதற்கமைய சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய மூவரது விடுதலைக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்து வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதிவரை ஒத்திவைத்தது.

இதேபோன்று நளினி, ஜெயக்குமார், றொபேர்ட் பயஸ், ரவிச்சந்திரன் ஆகியோரின் விடுதலைக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்த மனுவையும் ஏற்றுக்கொள்வதாக உயர் நீதிமன்றம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு மீதான விசாரணை நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் பிறந்த நாள் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதன்போது ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஜெயலலிதா, தமிழக அரசு விடுதலை செய்த 7 பேரின் விடுதலைக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனுவை உயர்நீதி மன்றத்தில் சட்டப்படி எதிர்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார். (த-5)

### சிவராத்திரிக்காக

யம் வரை பஸ் சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து சங்குப்பிட்டி ஊடாக மன்னாருக்குச் செல்லும் தனியார் பஸ்கள் திருக்கேதீஸ்வரம் ஆலயம் வரை சென்று பின்னர் அங்கிருந்து பஸ் தரிப்பிடத்தைச் சென்றடையும். யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6 மணி தொடக்கம் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பயணிகளின் தேவைக்கு ஏற்ப சேவை இடம்பெறும்.

வெளிமாவட்டங்களுக்கான பஸ் தரிப்பிடத்தில் இந்த பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நேர ஒழுங்கின் படி தொடர்ந்து பஸ் சேவைகள் இடம்பெறும் என்று வெளி மாவட்டங்களுக்கான தனியார் பஸ் சங்கம் தெரிவித்துள்ளது. (த-14)

### ஐரோப்பிய

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தமை மிகப் பெரிய தவறு. அவ்வாறு விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கான அழுத்தங்களை இலங்கையும் அமெரிக்காவுமே ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கியிருந்தன.

இவ்வாறு விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட்டமை, அமைதித் தீர்வு மற்றும் பேச்சுக்களுக்கான வாய்ப்பை தடுத்து நிறுத்தி விட்டது. தீர்வு காணும் விடயத்தில், பொஸ்னியாவுடன் ஒப்பிடும்போது, மேற்குலகம் குறைந்தளவு அக்கறையையே இலங்கையில் காட்டுகிறது.

இந்தியாவின் அக்கறை முக்கியமானது. ஆனால் இந்தியாவும் இதில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை. இலங்கை அரசுக்கு ஒரு தீர்வு தேவைப்படவில்லை.

கோத்தபாய ராஜபக்ஷ நாட்டின் பாதுகாப்புச் செயலாளராக இருக்கும் வரை, உங்களுக்கு ஒரு தீர்வும் கிடைக்காது. அந்த மனிதருக்கு எந்தவொரு அமைதி தீர்வும் தேவையில்லை-என்றார். (த-5)

# கலைமதி-மனோகரா அணிகள் இறுதியாட்டத்தில் மோத தகுதி




நவிண்டில் கலைமதி இளைஞர் கழக அணி




அல்வாய் மனோகரா இளைஞர் கழக அணி

யாழ்ப்பாணம்,பெப் .25

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் கலைமதி இளைஞர் கழக அணி, மனோகரா இளைஞர் கழக அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது ஆட் டத்தில் கலைமதி இளைஞர் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் இளைஞர் கழக அணி 17:6 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளை யாடுவதற்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் மனோகரா இளைஞர் கழக அணிக்கும் சிவகுமாரன் இளைஞர் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அல்வாய் மனோகரா இளைஞர் கழக அணி 19:8 என்ற புள்ளி அடிப்படையில் வென்று இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றுள்ளது. (த-23)

> “
> **கலைமதி இளைஞர் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் இளைஞர் கழக அணி 17:6 என்ற புள்ளி அடிப்படை யில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்தில் விளையாடுவதற்குத் தகுதி**

## அராலி அண்ணாவுக்குத் தடை

வலி வடக்கு பெப் 25

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி நிறைவடைந்ததை அடுத்து மத்தியஸ்தரைத் தாக்க முற்பட்டதுடன் பார்வையாளர்களையும் தாக்கிய அராலி அண்ணா விளையாட்டுக் கழகத்தின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

லீக்கின் தலைவர் நா.நவரத்தினராசா தலைமையில கூடிய நிர்வாக உறுப்பினர்கள் பின்வரும் ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதெனத் தீர்மானித்துள்ளார்கள்.

பார்வையாளர்கள் மீது கற்களை வீசிப் பொல்லுகள்,தடிகள் கொண்டுதாக்கியதில் சேதம் அடைந்த சொத்துக்கள் மற்றும் வாகனங்களைக் கருத்தில் கொண்டு 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சண்டையில் ஈடுபட்ட கழக வீரர்கள் மூவரை இரண்டு வருட காலத்துக்கு இடைநிறுத்தவதெனவும்,கழகத்தை இந்த வருடம் முழுவதும் இடைநிறுத்திவைப்பதுடன் போட்டிகளை நடத்த வழங்கப்பட்ட அனுமதியையும் ரத்து செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பான அறிக்கையைச்சங்கானை பிரதேச செயலாளர் மற்றும் உதைபந்தாட்ட லீக்குகளுக்கும் அனுப்புவதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.(த-86)



வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக்கிண்ணத்தை வட மாகாண சபை உறுப்பினர் ஆர்னல்ட் வழங்குகிறார்.

## சுன்னாகம் காந்தியம் வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.25

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் சுன்னாகம் காந்திய மன்ற இளைஞர் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழக மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டி யின் இறுதியாட்டத்தில் சுன்னாகம் காந்திய மன்ற இளைஞர் கழக அணியை எதிர்த்து உடுவில் முருகமூர்த்தி இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சுன்னாகம் காந்திய மன்ற இளைஞர் கழக அணி 19:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

## ஆண்களில் ஹாட்லி பெண்களில் மணற்காடு

### வடமராட்சி எல்லேயில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.25

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட் டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் மணற்காடுறோ.க. வித்தியாலயமும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், அம்பன் மெ.மி. வித்தியாலயமும் மோதின.


இதில் 19:3 என்ற ஓட்டங்கள் அடிப் படையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி பெருவெற்றியீட்டியது. இந்தப் பிரிவில் மூன்றாம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

இதே தினத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மணற்காடு றோ.க. வித்தியாலயமும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மணற்காடு றோ.க. 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதனை அடுத்து 21 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மணற்காடு றோ.கவின் வீராங்கனைகளின் களத்தடுப்பின் மூலம் ஓட்டங்களைப் பெற முடியாது திணறினர். இறுதியில் அந்த அணியால் 9 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதன் அடிப்படையில் 11 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மணற்காடு றோ.க. வித்தியாலயம் இந்த வருட வலயச் சம்பியனாகியது.

இதில் மூன்றாம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது. (த-400)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இளவாலை கருகம்பனை சவாரித் திடலில் இடம்பெற்றது. இதில் பங்கு பற்றிய சவாரி மாடுகள் இவை. (த-23)

## கரப்பந்தாட்ட போட்டியில் வென்றது கல்வி அமைச்சு

வடமாகாண விளையாட்டுத் துறைத் திணைக்களத்தினரால் மாகாண அமைச்சுக்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கல்வி அமைச்சு அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நல்லூர் சாதனா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கல்வி அமைச்சு அணியை எதிர்த்து உள்ளூராட்சி அமைச்சு அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் கல்வி அமைச்சு அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம் பெறவுள்ளது.


இதில் சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

கைதடி, பெப்.25

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மின்னொளியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய போட்டியிலே பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகத்தை எதீர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகம் மோத இருக்கின்றது.

மேற்படி அளவெட்டி பாரதி சனமூக நிலையத் தலைவர் க.செல்வராஜா தலைமையில் நடைபெற இருக்கும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ.எஸ்.சிறிதரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-288)



# பிளட்சரினால் பயனில்லை

வெளிநாட்டு மண்ணில் இந்திய கிரிக்கெட் அணியின் தோல்வி தொடர்வதால், அணித்தலைவர் டோனி, பயிற்சியாளர் டங்கன் பிளட்சர் ஆகியோர் கடும் விமர்சனத் துக்கு ஆளாகி இருக்கிறார்கள். 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்குப் பிறகு இந்திய அணிக்கு டங்கன் பிளட்சர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். சிம்பாப்வேயை சேர்ந்த இவர், பயிற்சியாளராக பொறுப்பை ஏற்ற பிறகு வெளிநாட்டு மண்ணில் இந்திய அணி டெஸ்ட் தொடரில் குறிப்பிடத்தக்க வெற்றி எதையும் பெறவில்லை.

இந்திய அணி தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வருகிறது. வெளிநாட்டில் 15 டெஸ்டில் ஒரே ஒரு டெஸ்டில் மட்டுமே வெற்றி கிடைத்தது. 10 டெஸ்டில் தோற்றது. 4 டெஸ்ட் சமநிலையானது..

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா தற்போது நியூசிலாந்து பயணங்களிலும் இந்த அணி தோல்வியை தழுவி இருந்தது. இதனால் பயிற்சி யாளர் பதவியில் இருந்து பிளட்சரை நீக்குமாறு கோரிக்கை எழுந்துள்ளது.

இந்த நிலையில் பயிற்சியாளர் பிளட்சரால் எந்தப் பயனும் இல்லை என்று முன்னாள் அணித் தலைவரும், முன்னாள் பயிற்சியாளருமான அஜித் வடேகர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

பிளட்சருக்கு கொடுக்கப்பட்ட காலம் போதுமானதாகும். அவர் பயிற்சியாளர் பொறுப்பு மூலம் என்ன தந்திரத்தைக் கையாண்டார் என்று தெரியவில்லை. ஆனால் அவரால் எந்தப் பயனோ, உதவியோ அணிக்கு இருந்தது இல்லை என்று நான் கருதுகிறேன்.

தற்போதுள்ள கிரிக்கெட் உலகில் சாதிக்கும் ஆற்றல் வீரர்களுக்கு அதிகமாக இருக்கிறது. டோனியைப் பொறுத்தவரை ஒருநாள் போட்டியில் யாருடைய ஆலோசனையும் அவருக்கு தேவையில்லை- என்றார். (த)




# மேற்கிந்திய வீரர்களுக்கு பணம் தான் இலக்கு

மேற்கிந்தியத் தீவுகள் அணியில் முன்பு தலைசிறந்த வீரர்கள் இருந்தனர். அவர்கள் கிரிக்கெட்டின் அனைத்து அம்சங்களையும் அறிந்து இருந்தார்கள். ஆனால் தற்போது உள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியின் நிலை மோசமாக உள்ளது. வீரர்கள் பணத்தின் மீதுதான் குறிக்கோளாக உள்ளனர் என்று மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் கிளைவ் லொயிட் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் பணத்தின் மீது மட்டும் இலக்காக இருக்கக்கூடாது. உங்களது ஆட்டத்தை ரசிக்கத்தான் ரசிகர்கள் பணம் கொடுத்து பார்க்க வருகிறார்கள். இதனால் நீங்கள் ஆட்டத்தில் மிகுந்த மேம்பாடு அடைய வேண்டும். உணர்வுடன் விளையாட வேண் டும். உங்களது முழுத் திறமையையும் வெளிப் படுத்த வேண்டும். ஆஸ்திரேலிய அணி சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிராகச் சிறப்பாக விளையாடியது. அவர்கள் முன்னாள் வீரர்களின் ஆலோசனையைப் பெற்று இருந்தனர்.

அம்புரோஸ், வால்ஸ், ரிச்சர்ட்ஸ், கிரினிட்ச், ஹெயன்ஸ் போன்ற சிறந்த வீரர்கள் மேற்கிந் தியத் தீவுகள் அணியில் இருந்துள்ளனர். அவர் களது திறமையை மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்-என்றார். (த)

# கோஹ்லிக்கு சோதனை

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் டோனிக்கு காயம் ஏற்பட்டதால் இந்திய அணியின் தலைமைப் பொறுப்பை விராத் கோஹ்லி ஏற்றுள் ளார். அணியை வழி நடத்தும் விராத் கோஹ்லி சாதித்துக் காட்டுவாரா...?



ஆசியக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் விராத் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி வீரர்கள் பங்களாதேஷ் சென்றுள்ளனர். இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 5 நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வங்கதேசத்தில் இன்று ஆரம்பமாகிறது. இந்திய அணி தனது முதல் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

பின்னர் மார்ச் 2 ஆம் திகதி பரம எதிரியான பாகிஸ்தானைச் சந்திக்கிறது. சமீபத்தில் முடிந்த நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் டோனிக்குக் காயம் ஏற்பட்டதால் இந்திய அணியின் தலைமைப் பொறுப்பை விராத் கோஹ்லி ஏற்றுள்ளார். இலக்குக் காப்பாளராக தினேஷ் கார்த்திக் சேர்க்கப் பட்டுள்ளார்.

இத்தொடரில் 5 முறை சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணி, இம்முறை மிகவும் இக்கட்டான நிலையில் களமிறங்குகிறது. டோனி இல்லாதது பின்னடைவை ஏற்படுத்தலாம். அந்நிய மண்ணில் சந்தித்த தொடர் தோல்விகள் இவரது தலைமைப் பதவிக்கு வேட்டு வைக்கலாம்.

இந்தச் சூழலில் அணியை வழி நடத்தும் விராத் கோஹ்லி சாதித்துக் காட்டவேண்டும். நல்ல உடற்தகுதியில் உள்ள இவர், சிறப்பாகச் செயல்படும் பட்சத்தில் நிரந்தர அணித் தலைவராகக் கூட நியமிக்கப்படலாம். தவான், ரோகித் சர்மா, புஜாரா, ரவிந்திர ஜடேஜா, பின்னி அடங்கிய இளம் துடுப்பாட்டப் படை எழுச்சி பெறுவது அவசியம். பந்துவீச்சில் அசத்த முகமது ஷமி, வருண் ஆரோன், அஷ்வின் உள்ளனர். (த)

# விலகினார் தமிம் இக்பால்

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இன்று முதல் மார்ச் 8ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய 5 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக தமிம் இக்பால் இந்தப்போட்டியில் இருந்து விலகியுள்ளார். பங்களாதேஷ் அணி விவ ரம்:-முஷ்பிக்குர் ரகீம் (அணித் தலைவர்), அனாமுல் ஹக், இம்ருல் கெய்ஸ், ஷகீப் அல்-ஹசன், சம் சூர் ரகுமான், நசீம் இஸ் லாம், மொமினுல் ஹக், நசீர் உசேன், அராபத் சன்னி, ஜியாவுர் ரகுமான், அப்துல் ரசாக், கோகாக், மொர் தாசா, ரூபல் உசேன், அல்-அமின் உசேன். (த)



# டோனி இல்லாவிட்டாலும் இந்தியா வலுவானது தான்

5 அணிகளுக்கு இடையிலான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் இன்று தொடங்குகிறது. இதையொட்டி பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக் அளித்த பேட்டி வருமாறு:-

ஆசியக் கிண்ணப் போட்டியில் இருந்து டோனி விலகி இருப்பதன் மூலம் அவரது அனுபவத்தையும், தலைமையையும் இந்திய அணி தவற விடுகிறது. அதே நேரத்தில் அவருக்குப் பதிலாக விராட் கோஹ்லியை இந்திய அணியின் தலைவராக்கி இருப்பது பொருத்தமான தேர்வு. டோனி இல்லாவிட்டாலும் இந்திய அணி தொடர்ந்து வலுவானதாகவே இருக்கிறது. இந்தியா மட்டுமல்ல, ஆசியக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் அனைத்து அணிகளும் சவாலானவை என்று நான் மீண்டும் மீண்டும் கூறிவருகிறேன்.

தென்னாபிரிக்கா மற்றும் இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடர்களை கைப்பற்றிய நாங்கள் அதே வெற்றி வேட்கையுடன் ஆசியக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கிறோம். இந்திய அணியையும் எங்களால் தோற்கடிக்க முடியும் என்று நம்புகிறோம்-இவ்வாறு மிஸ்பா கூறினார். (த)



**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



edexcel

**GCE (O/L) தகைமையுடன்...**

யாழ் நகரில்...

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பை பூர்த்தி செய்து

**Engineer** ஆகலாம்.



**BTEC National Diploma in**

# Engineering

International Engineering Foundation (IEF)

» GCE (A/L) இல் கணிதப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு தகைமை இன்றி GCE (O/L) தகைமையுடன் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அவசியமான தகைமையினை இப்பாடநெறி வழங்குகின்றது.

» Engineering துறையில் அதிகரித்து வரும் உயர் தொழில் வாய்ப்புகளை விரைவாக அடைந்து கொள்வதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி.

» 10 மாதகால துரித பாடநெறியை BCAS Campus இன் யாழ் வளாகத்தில் பூர்த்தி செய்து இலங்கையில் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் நீங்கள் விரும்பும் துறைகளில் Engineering பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான அனுமதிகளை இப்பாடநெறி உத்தரவாதப்படுத்துகிறது.

**Enroll now and fast track your career in Engineering.**

**BCAS CAMPUS**

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

www.bcas.lk

Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar



## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் வேளா தோப்புப் பகுதியில் 2½ பரப்புக் காணி வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 948 2378

(45089)(3.6.4)



## காணவில்லை

கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த வெள்ளைநிறமுடைய இரு நீளக் கொம்புகளையுடைய S.T மற்றும் 5/7 எனும் வீட்டிலக்கமும் பொறிக்கப்பட்ட பெரிய இன பசுமாடு கடந்த இரண்டு கிழமைகளுக்கு முன்னர் காணாமல்போயுள்ளது. தயவு செய்து அதனைக் கண்டவர்கள் உடனடியாக அறியத்தரவும்.

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு:செல்வராணி-077 663 2301

(45087)(3.6.4)



## காணி தேவை (கொள்வனவு)

யாழ்.நகர் மத்திய (Town) பகுதியில் 2இல் இருந்து 3 பரப்பு விஸ்தீரணத்தில் காணி தேவை.

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 923 4675/077 736 0353



# SPOKEN ENGLISH

**WITH DIPLOMA CERTIFICATE**

A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர், யுவதிகள் தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்"

வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் 27.02.2013 வியாழன்

பிரிவு 01 : 09.00 – 11.00 பிரிவு 02 : 11.00 – 01.00
செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பயிற்சி இடம்பெறும்.

* ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது இப் பயிற்சி நெறியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.

**SAAMSON** Language School 379, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 077 621 4567


## நன்றி நவிலல்



திருமதி
**பத்மாஜனி விசுவலிங்கம்**

கடந்த 18.02.2014 அன்று சிவபதமைடைந்த காலஞ்சென்ற இளைப்பாறிய வடமாகாண கல்வி ஆலோசகரின் மனைவி திருமதி பத்மாஜனி விசுவலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து வருகை தந்தும், தொலைபேசி அழைப்புகளாலும், எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

திருமதி . சுபத்திரா சூரியநாதன்


| | | | | |
|---|---|---|---|---|
| Madurai மதுரை Rtn 16000/= | Qatar கட்டார் Ow 25300/= | Singapore சிங்கப்பூர் Rtn 30100/= | UK லண்டன் Ow 40000/= | France பிரான்ஸ் Rtn 86500/= |
| Chennai சென்னை Rtn 18300/= | | | | Germany ஜேர்மனி Rtn 40100/= |
| Malaysia மலேசியா Rtn 33800/= | | | | Italy இத்தாலி Rtn 87500/= |
| Switzerland சுவிஸ் Rtn 119800/= | | | | Canada கனடா Rtn 105000/= |
| Bangkok பாங்கொக் Rtn 20600/= | | | | NORWAY நோர்வே Rtn 88500/= |




#16 ½ E.S Fernando mawatta Colombo -06 Sri Lanka.
#128, Brown Road Jaffna.. இல 128 பிறவுன் வீதி யாழ்ப்பாணம்

www.nationtravels.com


# இது இலங்கைத்தீவில் தனித்துவமான எவரும் எண்ணாத அதிரடியான முன்மாதிரியான எடுத்துக்காட்டான மிடுக்கான கைங்கரியமாகும்



## திசைகாட்டியின் துன்னாலை பிரதேச இலவச நன்னெறிப் பாடசாலை

## உதயம் 28.02.2014 மு.ப. 10 மணி

இதன் தனித்துவமான காத்திரமான அம்சங்கள் :

* இதுவரை காலமும் இந்து மத நெறிகளை மனனம் செய்து ஒப்புவித்த நிலை மாற்றம் காண்கின்றது புறஜெக்ரர் மூலம் சைவ நெறி போதிப்பு கவர்ச்சியான கற்றல் கற்பித்தல்
* நிதி ஊக்குவிப்பு
  பங்கு பெறும் மாணவர்களுக்கு நிதியூட்டல்
* ரூபா 50000/= (ஐம்பதாயிரம் பரிசில்) :

மறக்கப்பட்டு வரும் இந்து மதக்கிரியைகள், சடங்குகள், நன்னெறிக்கருத்துக்கள், தேவார திருப்புராணங்கள், நடைமுறைகள், அர்த்தமுள்ள இந்து மதத்தத்துவங்கள் என்பனவற்றில் நடைமுறை அறிவு காணும் போட்டிகளில் வெற்றி பெற்றால் 50000/= பரிசில்

* பங்கு பற்றும் இளையோருக்கு இலங்கை முழுவதும் மத வழிபாட்டு இடங்களுக்கான இலவச சுற்றுலா
* இசையோடு இறைதுதிக்க விசேட கற்பித்தல்

மிகவும் வலுவான உறுதியான அடித்தளமிட்டு எங்கள் பணியை ஆரம்பிக்கின்றோம் கைகொடுத்து வழிநடத்தவாரீர்

அனுமதி:

துன்னாலை வடக்கு J/417 துன்னாலை கிழக்கு J/371 கிராமசேவை பிரிவைச் சேர்ந்து தரம் 11 இற்கு உட்பட்ட மாணவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யலாம்.

* திருமதி குமுதினி தர்மராஜா (தலைவர் துன்னாலைப்பிரதேச கல்வி, சமய அபிவிருத்தி மன்றம்) 077 6102941
* Ms. ஆனந்தராஜா சோபனா (முகாமையாளர்)
  வாடிக்கையாளர் தொடர்பாடல் திசைகாட்டி (பிறை) லிமிற். 021 5689090

* இவ்விளம்பரம் திசைகாட்டி ஆஸ்திரேலியாக்கிளை பணியாளர்களின் அனுசரணையில் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் 28.02.2014 நிகழ்வில் பணியாளர்கள் கலந்து கொள்ள உள்ளமையால் எமது யாழ்ப்பாண தலைமைஅலுவலகம், கொழும்பு அலுவலகம் என்பன அன்றையதினம் மட்டும் மூடப்பட்டிருக்கும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

Ms.v. இந்துஜா
பொதுமுகாமையாளர் (கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறை) லிமிற் 175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 2219016

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.